கோகுலம்

GOKULAM

ஆகஸ்ட் '87 ரூ. 2.





டாக்டர் ஆனந்த குமாரசுவாமி

தோற்றம்: 22-8-1877 மறைவு: 9-9-1947



உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். — பாரதியார்.

கோகுலம்

1987 ஆகஸ்ட் மாத இதழ்
மலர் 5 இதழ் 7
தனிப் பிரதி ரூ. 2/—
ஆண்டுச் சந்தா ரூ. 24/—

கௌரவ ஆசிரியர்: அழ. வள்ளியப்பா.



புகைப்படம்: கே. சீதாராம்

அருமைச் சிறுவர் சிறுமியரே,

பதினைந்து வயதுக்கு உட்பட்ட சிறுவர் சிறுமியருக்காக இதுவரை தமிழிலே எத்தனை புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன, தெரியுமா?

சுமார் 3000 புத்தகங்கள்!

இவை யாவும் பள்ளிப் பாடநூல்களல்லாத பொதுப் புத்தகங்கள். இவற்றில் சிறுகதை, நெடுங்கதை, நாடகம், கவிதை, வாழ்க்கை வரலாறு, விஞ்ஞானம் என்று பல வகைகள் உள்ளன. விஞ்ஞானப் புத்தகங்கள் மட்டும் 300 க்கும் மேல் இருக்கின்றன!

ஆனால், தமிழில் இத்தனை புத்தகங்கள் குழந்தைகளுக்காக வெளிவந்துள்ளன என்பது பெரும்பாலோருக்குத் தெரியாது. அநேக பள்ளி நூலகங்களில் இந்த மூவாயிரம் புத்தகங்களில் நூறு புத்தகங்களைக் கூடக் காண்பது அரிதாயிருக்கிறது! இதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன! ஆயினும் இந்தப் புத்தகங்களைப் பற்றிய விவரங்கள் தெரியாமலிருப்பதுதான் முதற் காரணம். முக்கிய காரணமும் அதுதான்.

இதற்கு என்ன வழி?

'இதுவரை குழந்தைகளுக்காக வெளிவந்துள்ள புத்தகங்களைப் பற்றிய விவரங்களைச் சேகரித்துத் தொகுத்து 'தமிழில் குழந்தைப் புத்தக விவரத் தொகுப்பு' என்ற ஒரு நூலை, நம் தமிழக அரசு வெளியிட வேண்டும். அத்துடன், தொடர்ந்து ஆறு மாதங்களுக்கு ஒருமுறை புதிதாக வெளிவரும் குழந்தை நூல்களைப் பற்றிய விவரங்களையும் வெளியிட வேண்டும்.' என்று சமீபத்தில் கூடிய குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் ஆண்டுப் பேரவை ஒரு தீர்மானம் நிறைவேற்றி, அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறது.

புத்தகத்தின் பெயர், ஆசிரியர், வெளியிட்டோர், வெளியான ஆண்டு, பக்கங்கள், விலை, அது கதைப் புத்தகமா, கவிதைப் புத்தகமா, நாடகமா போன்ற குறிப்பு, அப்புத்தகம் பரிசு பெற்றிருந்தால், அதுபற்றிய விவரங்கள் யாவும் அந்தத் தொகுப்பின் மூலம் அறியலாம்.

இப்படி ஒரு புத்தகத்தைத் தயாரித்து, ஒவ்வொரு பள்ளிக்கும் கல்வித் துறையினர் அனுப்பி வைத்தால், பள்ளித் தலைமை ஆசிரியருக்கு அல்லது நூலகத்திற்குப் புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவினருக்கு மிகவும் உதவியாக இருக்கும். தேவையான புத்தகங்களை நிதி வசதிக்கு ஏற்றபடி அவர்கள் வாங்கலாம். நல்ல நூல்கள் மாணவர்களுக்குக் கிடைப்பதற்கான வழியும் பிறக்குமல்லவா?

— அழ. வள்ளியப்பா

இந்த இதழ் எழுத்தாளர்



காரை மணி

பிருந்தாவனக் கதாசிரியர்



ஆர். ராஜா


பிருந்தாவனக் கவிஞர்கள்




ஏ. எஸ். உமா மகேஸ்வரி



இரா. அருள்செல்வன்



எச். ஆர். சுபா





டாக்டர் ஆனந்த குமாரசாமி

இவர் கொழும்பு நகரில் பிறந்தவர். இங்கிலாந்தில் கல்வி பயின்று பி. எஸ்.ஸி. தேர்வில் தாவர இயலிலும், புவிஇயலிலும் முதலாம் வகுப்பில் தேறினார். பின்னர் இலங்கைக்கு வந்து தாதுப் பொருள் ஆராய்ச்சியில் ஈடுபட்டு, 'தோரியனைட்' என்னும் கனிமத்தைக் கண்டுபிடித்தார். இவரது ஆராய்ச்சித் திறமையைப் பாராட்டி லண்டன் பல்கலைக்கழகம் இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கியது.

இலங்கையிலும் இந்தியாவிலும் பலபகுதிகளுக்கும்சென்று அங்குள்ள கோயில்களில் உள்ள சிற்பங்களையெல்லாம் ஆராய்ந்தார். அவற்றின் சிறப்பையெல்லாம் பற்றிக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டார். பிறகு அவை, புத்தகங்களாக வெளிவந்து, இந்தியமக்களிடையே ஒரு பரபரப்பை உண்டு பண்ணின. இந்தியக் கலைகளின் உண்மையான பெருமையை மக்கள் அப்போதுதான் உணரத் தொடங்கினர்.

இந்தியாவின் பல பாகங்களிலும் சுற்றுப் பயணம் செய்து, அரிய கலைப் பொருள்களையெல்லாம் சேகரித்தார். அவற்றை ஒரு காட்சியாக அலகாபாத்தில் வைத்தார்.

இவர் எழுதிய சிவ நடனம் (Dance of Siva) என்ற நூலே முதல் முதலாக இந்தியக்கலைகளின் உண்மையான தத்துவத்தை விளக்கும் தெய்வ அம்சம் பொருந்திய நூல் என்று போற்றப்பட்டது. அமராவதியில் இவர் கண்டுபிடித்த சிலைகளிலிருந்து, யாழின் வடிவம் எப்படிப்பட்டது என்பதை முதல் முதலாக எடுத்துக் கூறினார். இந்தியக் கலைகளையும் பண்பாட்டையும் விளக்குவதையே தமது முக்கிய பணியாகக் கொண்டு இறுதி வரை பாடுபட்டார்.



ராஜா சர் முத்தைய செட்டியார்

வடநாட்டில், பண்டித மோதிலால் நேருவுக்கு மகனாக, பண்டித ஜவாஹர்லால்பிறந்தார். அதேபோல், தென்னாட்டில் ராஜாசர் அண்ணாமலை செட்டியாருக்கு மகனாக ராஜா சர் முத்தைய செட்டியார் வாய்த்தார்.

தனிப்பட்ட ஒருவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை நிறுவினார். உலகமே பாராட்டியது: அப்படிப்பட்ட பெருமைக்குரிய அண்ணாமலை செட்டியார் கல்வி வளர்ச்சியில் மிகுந்த அக்கறை காட்டியதோடு தமிழிசை இயக்கத்தின் தந்தையாகவும் விளங்கினார். தந்தையைப் போலவே மகனும் அப்பல்கலைக்கழகத்தின் இணை வேந்தராக இருந்து கல்வியை வளர்த்ததோடு, தமிழிசையையும் வளர்த்தார்; தமிழறிஞர்களைப் போற்றினார்; சென்னை நகரின் முதல் மேயராக விளங்கினார். அப்போது (1932 இல்) சிறிய அளவில் வானொலி நிலையம் ஒன்றைச் சென்னையில் அமைத்தார். பிறகு, பல ஆண்டுகள் சென்ற பிறகுதான் (சென்னையில் 'ஆல் இந்தியா ரேடியோ' ஏற்பட்டது.) 1936 — 37 இல் சென்னை மாகாணக் கல்வி அமைச்சராக விளங்கினார். இந்தியன் வங்கியின் மேலாண்மை இயக்குநராக இருந்து, தொழில்கள் பெருக உதவினார். சென்னை சட்டமன்ற உறுப்பினராகத் தொடர்ந்து 39 ஆண்டுகள் இருந்து அரசாங்கத்துக்குப் பல அரிய யோசனைகளை வழங்கி வந்தார்.

பல்கலைக்கழகத்திற்கு அணியாக உதவுகின்ற தொடக்கப் பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேனிலைப்பள்ளி போன்ற பல பள்ளிகளை அண்ணாமலை நகரிலும் சிதம்பரத்திலும் சென்னையிலும் நிறுவி ஆயிரக்கணக்கான மாணவர்களுக்குக் கல்விக் கண் வழங்கியதோடு, தொழிற்கல்விக் கூடங்களையும் நிறுவினார்.

மின்மினிக் கதைகள்

(சாயி பாபா ஒரு பெரிய ஞானி என்பதை நீங்கள் அறிவீர்கள். அவர் எளிமையானவர்; குழந்தை உள்ளம் கொண்டவர். எல்லா மதங்களையும் அவர் மதித்தார். ஏழை — பணக்காரர் என்ற வேறுபாடில்லாமல் பழகினார். அவர் நிகழ்த்திய அற்புதங்கள் பல. அவற்றில் சிலவற்றைக் கீழே காணலாம்.)



அவர் ஒரு பெரிய பணக்காரர். பெயர் சந்த் பட்டேல். தூப் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர். ஒருநாள் அவர் அருகிலிருந்த அவுரங்கபாத் நகருக்குக் குதிரையில் சென்றார்.

வழியில் இருந்த ஒரு குளத்தைக் கண்டதும், குதிரையிலிருந்து இறங்கினார். நடந்து சென்று குளத்தில் இறங்கித் தண்ணீர் குடித்தார். திரும்பி வந்து பார்த்த போது, குதிரையைக் காணோம்! நாலா பக்கமும் ஓடினார்; குதிரையைத் தேடினார். அகப்படவில்லை. மிகவும் பிரியமாக வளர்த்த குதிரையைக் காணாமல் அவர் மிகவும் வருந்தினார். வேறு வழியின்றித் தம் கிராமத்துக்கே திரும்பி விடுவதென முடிவு செய்தார்.

கிராமத்திற்குத் திரும்பும் வழியில் மரத்தடியில் ஓர் இளைஞன் இருப்பதைக் கண்டார். அவன் முகத்திலே ஏதோ ஒரு கவர்ச்சி இருப்பதைக் கவனித்தார். அவன் குர்தா சட்டை அணிந்து, தலையில் குல்லாயுடன் இருந்தான். கையிலே ஒரு சிறிய தடியும் இருந்தது.

சோர்ந்து போயிருந்த சந்த் பட்டேலை அந்த இளைஞன் வரவேற்றான். அவனிடம் அவர் தம்முடைய காணாமல் போன குதிரையைப் பற்றிச் சொன்னார்.

"கவலைப்பட வேண்டாம். இங்கேதான் அருகிலே மேய்ந்து கொண்டிருக்கிறது" என்றான் இளைஞன்.


உடனே பட்டேல் மீண்டும் குதிரையைத் தேடிப் புறப்பட்டார். என்ன ஆச்சரியம்! ஒரே நிமிஷத்தில் குதிரை கிடைத்துவிட்டது! பட்டேலுக்கு அளவில்லாத ஆனந்தம். குதிரையைப் பிடித்துக் கொண்டு இளைஞனிடம் வந்தார் பட்டேல்.

'இந்த இளைஞன் சாதாரண இளைஞனல்ல; ஏதோ ஒரு தெய்வ சக்தி இவனிடம் இருக்கிறது' என்று அவர் உணர்ந்தார்.,

"உங்களுக்குத் திரும்பக் குதிரை கிடைத்ததில் மகிழ்ச்சிதானே!" என்று கேட்டான் இளைஞன்.

"எல்லாம் அதிசயமாக இருக்கிறது" என்று கூறி, அந்த இளைஞனைத் தம்முடைய இல்லத்துக்கு அழைத்துச் சென்றார். சில நாட்கள் அங்கு தங்கிய பிறகு,ஷீரடி என்ற இடத்தில் நடக்கும் தம் உறவினர் வீட்டுத் திருமணத்திற்குச் செல்வதாகக் கூறிப் புறப்பட்டு விட்டான் அந்த இளைஞன். ஷீரடி என்ற ஊரிலேயே கடைசிவரை தங்கிவிட்டான்.

இளைஞனிடம் தெய்வ சக்தி இருப்பதை உணர்ந்த மக்கள், 'சாயி,' 'சாயி' என்று போற்றிக் கொண்டாடினார்கள். சாயியினால் ஷீரடியின் பெருமை நாளுக்கு நாள் வளர்ந்தது. இளைஞன் வளர்ந்து வயோதிகரானதும் 'சாயி பாபா' என்று கொண்டாடப்பட்டார்.



சாயி பாபாவின் புகழ் அண்டை அயல் ஊர்களிலெல்லாம் பரவியது. அவர் செய்கின்ற அற்புதச் செயல்களைக் கேட்டு அவரைத் தரிசிக்க மக்கள் கூட்டம் கூட்டமாக வந்தார்கள்.

தாணா என்ற நகரிலுள்ள கோர்ட்டிலே ஓர் ஏழைக் குமாஸ்தா இருந்தார். அவர் பெயர் சோல்கார். அவர் சாயி பாபாவை நேரில் பார்த்ததில்லை. ஆனாலும், அவர் மீது அளவற்ற பக்தி வைத்திருந்தார்.

சோல்காரின் அலுவலகத்திலே குமாஸ்தாக்களுக்காக ஒரு தேர்வு நடத்தினார்கள். அந்தத் தேர்வில் கலந்து கொள்ள அவர் விரும்பினார். "சாயி பாபா, நான் தேர்வு எழுதுகின்றேன். எனக்கு வெற்றி கிடைக்கத் தாங்கள் தான் அருள் புரிய வேண்டும். வெற்றிபெற்றதும், நான் ஷீரடிக்கு வந்து, தங்கள் பாதங்களைப் பணிவேன்" என்று வேண்டிக் கொண்டார்.

அவருடைய பிரார்த்தனை வீண் போகவில்லை. தேர்விலே வெற்றி பெற்றார். விரைவிலே ஷீரடிக்குச் சென்று சாயி பாபாவைக் காண வேண்டுமென்று துடிதுடித்தார்.

ஆனால், அவரோ மிகவும் ஏழை; குடும்பமோ பெரியது. தாம் இருக்கும் தாணா நகரிலிருந்து ஷீரடி சென்று வருவதற்கு வேண்டிய பண வசதி அவரிடம் இல்லை.

"இன்றிலிருந்து நான் தேநீருக்குச் சர்க்கரை போட்டுக் கொள்ளப் போவதில்லை. சர்க்கரைக்குச் செலவிடும் பணத்தைச் சிறுகச் சிறுகச் சேமித்து வைப்பேன். போதிய பணம் சேர்ந்ததும் ஷீரடிக்குச் சென்று பாபாவைக் கண்குளிரக் கண்டு வருவேன்" என்று முடிவு செய்தார்.

முடிவு செய்தபடி தினமும் சர்க்கரை இல்லாமலே தேநீர் அருந்தினார். நாளடைவில், போதிய பணம் சேர்ந்தது. உடனே ஷீரடிக்குப் புறப்பட்

டார்.

பாபாவை நேரில் கண்டதும் சோல்கார் அளவில்லாத ஆனந்தம் அடைந்தார். பாபாவின் கால்களில் விழுந்து வணங்கினார். "பாபாஜி! தங்களின் திருவருளால் தேர்விலே வெற்றி பெற்றேன்" என்று கூறித் தம்முடன் கொண்டு வந்திருந்த சில பொருள்களைக் காணிக்கையாக வைத்தார்.

உடனே, பாபா அருகில் இருந்தவர்களிடம், "இதோ இந்த நம் விருந்தினருக்கு நிறைய நிறையச் சர்க்கரை போட்டுத் தேநீர் கொடுங்கள்" என்றார்.

இதைக் கேட்டு சோல்கார் வியப்படைந்தார். ஆனால் மற்றவர்களுக்கு ஏன் பாபா அப்படிச் சொன்னார் என்பது புரியவில்லை. பிறகு, சோல்கார் பயணச் செலவுக்குப் பணம் சேர்ப்பதற்காகச் சர்க்கரையில்லாமலே தாம் பல மாதங்கள் தேநீர் அருந்தியதைக் கூறினார்.

அதுகேட்டு மற்றவர்களும் வியப்படைந்தனர்.



பாபா சில சமயங்களில் மிகவும் வேடிக்கையாகப் பேசுவார்.

ஒருநாள் சுவரிலே இருந்த ஒரு பல்லி, 'விச் விச்' என்று தொடர்ந்து கத்திக் கொண்டே இருந்தது.

அதைக் கண்ட ஒரு பக்தர், "பாபாஜி! இந்தப் பல்லி இப்படி ஓயாமல் கத்துகிறதே, இது நல்லதா? கெட்டதா?" என்று கேட்டார்.

"நல்லதா கெட்டதா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், இது ஆனந்தக் கூச்சல் போடுகிறது என்பது நன்கு தெரிகிறது. இதன் சகோதரி அவுரங்கபாத்திலிருந்து வரப் போகிறாளாம். அதை எண்ணி எண்ணித் தன் மகிழ்ச்சியை இப்படி வெளியிடுகிறது!" என்றார் பாபா.

பாபா ஏதோ வேடிக்கையாக இதைக் கூறுவதாகவே அந்த பக்தரும் அருகிலிருந்தவர்களும் அப்போது நினைத்தார்கள்.

சிறிது நேரத்தில், ஒரு பக்தர் அவுரங்கபாத்திலிருந்து குதிரையில் பாபாவைக் காண வந்தார். அவர் பாபாவை வணங்கி வாழ்த்துப் பெற்றதும், குதிரைக்கு உணவு கொடுப்பதற்காக, தம்முடன் கொண்டு வந்திருந்த ஒரு கோணிப் பையைத் திறந்தார். அப்போது அந்தப் பைக்குள்ளிருந்து தாவி வெளியில் வந்தது ஒரு பல்லி! அது உடனே, அங்கிருந்த சுவரில் ஏறியது. முன்பு அங்கு சத்தம் போட்டுக் கொண்டிருந்த பல்லியை நெருங்கியது. இரண்டும் ஒன்றை ஒன்று ஆனந்தமாகச் சுற்றிச் சுற்றி வந்தன.

இதைக் கண்ட ஒரு பக்தர், "பாபாஜி சொன்னதை வேடிக்கையாக வல்லவா நினைத்தோம்? அவுரங்கபாத்திலிருந்து கோணிப்பைக்குள் குந்தியபடி தன் சகோதரியைத் தேடி வந்துவிட்டதே இந்தப் பல்லி!" என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

இதைக் கேட்டு அங்கிருந்த எல்லோரும் சிரித்தார்கள். பாபாஜியும் சேர்ந்து சிரித்தார்.



ஞான உபதேசம்

பாபாவைப் பற்றிக் கேள்விப்பட்டார் ஒரு பெரிய பணக்காரர். அவர் ஒரு கருமி; தனக்கு எல்லாம் தெரியும் என்ற அகம்பாவம் உடையவர்.

ஒருநாள் ஒரு குதிரை வண்டியில் ஏறி பாபாவைப் பார்க்க வந்தார் அந்தப் பணக்காரர். பாபாவைக் கண்டு, ஞான உபதேசம் பெற்று, உடனே அதே குதிரை வண்டியில் திரும்பி விடலாம் என்பது அவரது எண்ணம்.

பாபாவின் காலடியில் விழுந்து அவர் வணங்கினார். தனக்கு ஞான உபதேசம் செய்ய வேண்டும் என்று வேண்டினார்.

"நண்பரே, என்னைத் தேடி வருபவர்களில் பலர் பொன் வேண்டும், பொருள் வேண்டும், பூமி வேண்டும், பதவி வேண்டும், குழந்தை வேண்டும் என்றுதான் கேட்கிறார்கள். ஆனால் நீரோ, ஞான உபதேசம் பெறுவதற்காக வந்திருக்கிறீர். மகிழ்ச்சி. ஞான உபதேசம் பெறுவதற்கான வழியை உமக்குக் காட்டுகிறேன்" என்றார் பாபா.

இப்படிக் கூறிவிட்டு, பாபா மற்றவர்களுடன் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். ஞானத்தை அடைவதென்பது எளிதன்று; தியாக மனப்பான்மை அவசியம் என்பதை அந்தப் பணக்காரருக்கு உணர்த்த வேண்டுமென்று நினைத்தார்.

அங்கிருந்த ஒரு பையனை பாபா அழைத்து, "தம்பி! நந்தா என்ற வட்டிக் கடைக்காரரை உனக்குத் தெரியுமல்லவா? அவரிடம் சென்று ஒரு ஐந்து ரூபாய் கடன் வாங்கி வா!" என்றார். சிறிது நேரத்தில் திரும்பி வந்த பையன், "நந்தா வீட்டில் இல்லை" என்றான்.

"சரி! மளிகைக் கடை பாலாவிடம் சென்று ரூபாய் ஐந்து கடன் வாங்கி வா" என்றார் பாபா.

"கடை பூட்டியிருக்கிறது" என்று கூறித் திரும்பி வந்தான் பையன்.

பணக்காரர் இதையெல்லாம் கவனித்துக் கொண்டுதான் இருந்தார். ஆனாலும் எதுவும் பேசவில்லை.

பாபா உடனே, பணக்காரரைப் பார்த்து, "நண்பரே! ஒரு ஐந்து ரூபாய் கடன் பெறுவதற்கு எவ்வளவு சிரமப்பட வேண்டியிருக்கிறது? ஐந்து ரூபாய்க்கு இப்படி அலைவதைக் கண்ட நீர், உடனே உமது மடியிலிருந்து ஐந்து ரூபாயை எடுத்துக் கொடுத்திருக்கலாமே! உம்மிடம்தான் ரூ. 250/—ரொக்கமாக இருக்கிறதே!" என்றார்.

இதைக் கேட்ட பணக்காரர் திடுக்கிட்டார். 'நான் என் மடியிலே வைத்திருப்பது ரூபாய் 250/—தான். அதைச் சரியாகச் சொல்லிவிட்டாரே பாபா!' என்று வெட்கப்பட்டார். மறுநிமிடம் பாபாவின் காலிலே விழுந்து மன்னிப்புக் கோரினார்.

பாபா சிரித்தபடியே சொன்னார். "நண்பரே! பணத்திலே குறியாக இருப்பவர்களுக்கு ஞானம் எளிதாகக் கிடைத்துவிடாது. ஆசைகளை அறவே ஒதுக்கி, ஒரு குருவை நாடி, அவரிடமிருந்து சிறிது சிறிதாகத்தான் ஞானத்தை அடைய முடியும்" என்றார்.

பணக்காரர் பாபாவின் அறிவுரைகளைக் கேட்டு வீடு திரும்பினார்.

— ஸ்ரீ சாயி பாபா பக்த சமாஜம் (ஷெணாய் நகர்) வெளியிட்டுள்ள 'The Saint of Shirdi' என்ற நூலிலிருந்து.

தமிழில் தந்தவர்: பி. எஸ். மணி

பிருந்தாவனக் கதைப்பூங்கம்



உண்மையின் பரிசு

ஏ.பி. திருமகள் செல்வி (1333)

மணி, முத்து என்ற இருவரும் நண்பர்கள். இருவரும் எட்டாம் வகுப்பு படிக்கும் மாணவர்கள். மணி என்பவன் சுட்டி. முத்து என்பவன் பெயருக்கு ஏற்றாற் போல் அடக்கமானவன்.

மணிக்கு ஒரு மாமா இருந்தார். அவர் வேறு ஊரில் வேலை பார்த்து வந்தார்., ஞாயிற்றுக்கிழமை இரவு அவன் மாமா வருவதாகவும், அவனுக்குச் சில பரிசுகள் கொண்டு வருவதாகவும் எழுதி இருந்தார். மணிக்கோ ஒரே ஆனந்தம்.

ஞாயிற்றுக்கிழமை வந்தது. மணி அவன் அம்மாவிடம், "நான் கிரிக்கெட் விளையாடப் பள்ளிக்குச் செல்கிறேன். மாமா வருவதற்குள் வந்து விடுவேன்" என்று கூறிவிட்டுச் சென்றான். முத்து அவன் வீட்டின் அருகில் இருப்பதால் அவனையும் அழைத்தான். இருவரும் சேர்ந்தே சென்றார்கள்.

பள்ளிக்குச் சென்று விளையாடி விட்டு வீட்டை நோக்கிக் குறுக்குப் பாதையில் வந்து கொண்டிருந்தனர். வழியில் ஒரு மாமரத்தைக் கண்டனர்! ஒரே வியப்பு. ஏனெனில் கணக்கில் அடங்கா மாம்பழங்கள்! உடனே மணி முத்துவிடம், "நாம் இருவரும் கல்லை எடுத்து மாம்பழங்களை அடிப்போம். கிடைக்கும் பழங்களைச் சாப்பிட்டு விட்டு வீட்டிற்குச் செல்வோம்" என்றான்.

ஆனால், முத்து, "வேண்டாம், வேண்டாம். ஊரார் மரத்தில் கல் எறிந்து பழம் பறிப்பதா?" என்றான்.

மணி முத்துவை மிகவும் வற்புறுத்தவே கடைசியில் முத்துவும் இசைந்து விட்டான். இருவரும் கற்களை எடுத்து எறிந்து இரண்டு மாம்பழங்களை வீழ்த்தினர். அவற்றை ஆசையாகத் தின்றனர்.

மேலும் ஆசைப்பட்டுக் கற்களை எறிந்தனர். ஆனால், ஒரு பழமும் விழவில்லை. தொடர்ந்து கற்களை எறிந்தனர். அது பொழுது சாயும் நேரம். தெரு ஓரமாக ஓர் ஆள் பெட்டியைத் தூக்கிச் சென்று கொண்டிருந்தார். மணி எறிந்த கல் அவர் முதுகில் பட்டது. வலி தாங்க முடியவில்லை. 'ஆ!' என்று அலறினார். உடனே இருவரும் மிக வேகமாக அங்கிருந்து ஓட்டம் பிடித்துவிட்டனர். ஊதா நிறச் சட்டையும், கறுப்பு நிறக் கால்சட்டையும் அணிந்திருந்த மணி, வேகமாக ஓடினான். ஆனால், வெள்ளை நிறச் சட்டையும், பச்சை நிறக் கால் சட்டையும் அணிந்த முத்து திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே, பயந்தபடியே ஓடியதை அந்த ஆள் கண்டார். ஆனால் திரும்பிப் பார்க்காமல் ஓடிய மணியை அவரால் அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை. பிறகு,

அவர், தாம் சேர வேண்டிய வீட்டை அடைந்தார். அங்கு சென்ற பொழுது திடுக்கிட்டார். ஊதா நிறச் சட்டையும், கறுப்பு நிறக் கால்சட்டையும் அணிந்தவனாகிய மணி சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அந்த ஆள் வேறு யாருமல்ல; மணியின் மாமாவேதான்! எனினும், அவர் தாம் கல்லடி பட்டதை வெளியில் காட்டிக் கொள்ளவில்லை.

"மணி" என்று அழைத்தார். மணிக்கோ அளவிலா ஆனந்தம். மாமாவை அணைத்துக் கொண்டான். அவர் மணியை நோக்கி, "இன்று ஏதாவது குற்றம் செய்தாயா?" என்று கேட்டார். "இல்லையே" என்று மணி சத்தியம் செய்தான். உடனே அவன் மாமா, "உன் நண்பன் யாரும் இருக்கிறார்களா?" என்று கேட்டார். "ஆமாம்" என்றான் மணி. "உன் நண்பனை அழைத்து வா," என்றார். அழைத்து வந்தான் மணி. அவன் வேறு யாருமல்ல. முத்துவேதான்.

மணியின் மாமா முத்துவைப் பார்த்து, "தம்பி, இன்று நீ ஏதாவது குற்றம் செய்தாயா?" என்று கேட்டார். உடனே அவன் "ஆமாம்" என்றான், பயந்தபடி. மணிக்குப் புரிந்து விட்டது. எனினும், அவன் ஒன்றும் கூறவில்லை. பிறகு மாமா முத்துவைப் பார்த்து, "என்ன குற்றம்?" என்று கேட்டார்.


"நான் இன்று ஊரார் மரத்தில் கல் எறிந்து மாம்பழம் திருடித் தின்றேன்" என்றான்.

உடனே மாமா, தன் பெட்டியைத் திறந்து, மணிக்காகப் புதிதாக வாங்கி வந்திருந்த சட்டையை எடுத்து முத்துவுக்குக் கொடுத்து, "நீ உண்மையை ஒப்புக் கொண்டாய்; எனவே இந்தப் பரிசு" என்றார். பிறகு தம் முதுகில் கல் விழுந்த கதையைக் கூறி, "நான் 'ஆ!' என்றதும் திரும்பிக் கூடப் பார்க்காமல் மணி ஓடிவிட்டான். முத்து திரும்பித் திரும்பிப் பார்த்தபடி ஓடினான். மணியினுடைய உடையின் நிறத்தை வைத்தே கண்டுபிடித்து விட்டேன்" என்றார்.

உடனே இருவரும் மாமாவிடம் மன்னிப்புக் கோரினர். "நான் மாம்பழம் திருடித் தின்றதும் இல்லாமல் தங்கள் மீது கல்லையும் எறிந்து துன்பப்படுத்திவிட்டேன்" என்று மணி மன்னிப்புக் கேட்டுக் கண்ணீர் சிந்தினான்.

மாமா, "அழாதே மணி. இந்தா உனக்காக இரண்டு பரிசுகள் வாங்கி வந்தேன். ஒன்றை முத்துவிடம் கொடுத்து விட்டேன். இதோ, உனக்கு ஒரு கிரிக்கெட் பாட்" என்று சொல்லிக் கொடுத்தார்.

உதவாத பிள்ளை



ஆர். ராஜா (1006)

சேகருடைய அப்பாவும், அம்மாவும் செங்கற்பட்டுக்கு அன்று காலையில் பேருந்திலே புறப்பட்டுப் போனார்கள். உறவினர் ஒருவர் இறந்து விட்டதாக டெலிபோனில் தகவல் வந்ததால், சேகருக்கு வேண்டிய மதிய உணவைத் தயாரித்து வைத்துவிட்டு, "சேகர், நானும் அப்பாவும் மூன்று மணிக்குத் திரும்பி விடுவோம். நீ சாப்பிட்டுவிட்டு வீட்டிலேயே இரு. எங்கேயும் போய்விடாதே!" என்று கூறியிருந்தாள் அம்மா.

அன்று ஞாயிற்றுக்கிழமை. சாப்பிட்டுவிட்டு நன்றாகத் தூங்க வேண்டும் என்று திட்டமிட்டான் சேகர். 12 மணிக்குச் சாப்பிட்டு முடித்தான். படுக்கையில் போய்ப் படுத்து நிம்மதியாய்த் தூங்கினான்.

சுமார் 2 மணி இருக்கும். 'ட்ரிங், ட்ரிங்' என்று டெலிபோன் மணி ஒலித்தது. தொடர்ந்து மணி ஒலித்துக் கொண்டேயிருந்தது. பத்து நிமிஷம் சென்றுதான் சேகர் விழித்தான்.

"பெரிய தொல்லையாய்ப் போச்சு. நிம்மதியாத் தூங்கவிடாது இந்த டெலி

போன்'' என்று முணுமுணுத்தபடி டெலிபோன் ரிசீவரைக் கையில் எடுத்தான். 'ஹலோ' என்று அவன் சொல்லவில்லை. 'டக்' கென்று ரிசீவரை முன் இருந்தபடி வைத்துவிட்டுப் போய்ப் படுத்தான்.

மீண்டும் ஒலித்தது டெலிபோன் மணி. அப்போதும் முன் போலவே செய்தான் சேகர். இப்படி நான்கு தடவைகள் ஆன பிறகு, ''தூங்க விடாமல் இப்படியே தொந்தரவு செய்யுதே... .ம், இப்படிச் செய்துவிட்டால்...?'' என்று ரிசீவரை எடுத்துக் கீழே வைத்து விட்டான். அப்புறம் மணி எப்படி ஒலிக்கும்? நிம்மதியாகத் தூங்க ஆரம்பித்தான்.

சுமார் 4 மணி இருக்கும். கதவை யாரோ பலமாகத் தட்டும் சத்தம் கேட்டு எழுந்தான். கதவைத் திறந்தான். அவனுடைய அம்மாவை ஆம்புலன்ஸ் வண்டியிலிருந்து இறக்கி, உள்ளே கொண்டு வந்தார்கள் மருத்துவமனை யைச் சேர்ந்தவர்கள்.

அம்மாவைப் பார்த்த சேகர், ''என்னம்மா! நெற்றியிலே கட்டு? உதட்டிலே பிளாஸ்திரி! கையிலே கட்டு! அப்பா எங்கே?'' என்று பதறிப் போனான்.

அம்மா மெதுவாக நடந்து வந்து கட்டிலில் படுத்தாள். மற்றவர்கள் விடைபெற்றுச் சென்ற பிறகு, ''சேகர், அப்பாவும் நானும் வந்த பஸ் ஒரு லாரியுடன் மோதி விட்டது. எனக்கு லேசான காயம்தான். அப்பாவுக்குக் கொஞ்சம் அதிகமான அடி!''

உடனே சேகர் குறுக்கிட்டு, ''அப்பா எங்கே? பலத்த அடியா? உயிருக்கு ஒன்றும் ஆபத்தில்லையே!'' என்று கேட்டான்.

''உயிருக்கு ஆபத்து இல்லை. ஜெனரல் ஆஸ்பத்திரியில் வைத்திருக்கிறார்கள். இரண்டு நாள் சென்று வந்து விடுவார்: ஒன்று அல்லது ஒன்றரை மணிக்கு விபத்து நடந்திருக்கும். உடனே ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு எங்களையும் கூடவே அடிபட்ட ஏழெட்டுப் பேருடன் கொண்டு வந்தார்கள். ஆஸ்பத்திரிக்கு வந்ததிலிருந்து, இங்கே போன் செய்து செய்து பார்க்கிறோம். அடுத்த தெருவிலே இருக்கிற உன் சித்தப்பாவை அழைச்சுக்கிட்டு வரச் சொல்லலாம்னு பார்த்தோம். அவர் உதவியாயிருப்பார். அதோடு உன் அப்பாவுக்கு ரத்தம் ஏத்தணும்னுங்க. உன் சித்தப்பா ரத்தமும் உன் அப்பாவின் ரத்தமும் ஒரே குரூப் தானாம். டெலிபோன் கிடைக்கவே இல்லை. என்ன அது ரிப்பேரா?'' என்று கூறியபடி டெலிபோன் இருந்த இடத்தை அம்மா கூர்ந்து பார்த்தாள்.

உடனே சேகர், ''அம்மா, அம்மா, என்னை மன்னிச்சுடுங்க அம்மா. 'எதிர் வீட்டு ஏகாம்பரத்தைக் கூப்பிடு;' 'பக்கத்து வீட்டுப் பங்கஜத்தைக் கூப்பிடு' ன்னு யாராவது போன் பண்ணி என் தூக்கத்தைக் கெடுத்துடுவாங்களேன்னு ரிசீவரை எடுத்துக் கீழே வச்சது என் தப்புத்தாம்மா. இப்படி நடக்கும்னு நினைக்கவே இல்லேம்மா'' என்று அம்மா கைகளைப் பிடித்துக் கொண்டு கதறி அழுதான்.

''நல்ல சமயத்திலே உதவாத டெலிபோன்னு அதைச் சபிச்சோம்.''

''இல்லேம்மா. நல்ல சமயத்திலே உதவாத பிள்ளை யா நான்தான் ஆயிட்டேன்,'' என்று சேகர் கூறிவிட்டு, சித்தப்பாவை அழைத்து வர வெகு வேகமாய் ஓட ஆரம்பித்தான்.

பெருமைக்குரிய பெரியசாமி

''தீப்பந்தம், சிலம்பம், சுருள் கத்தி வீச்சு முதலியவைகளில் இச்சிறுவன் பங்கு பெற்றுப் பல பரிசுகளைப் பெற்றுள்ளான் என்றால் ஆச்சரியமாக உள்ளதா? உண்மைதான். திருமங்கலம் பி. கே. என். ஆரம்பப் பள்ளியில் நான்காம் வகுப்பு படிக்கும் எஸ். பெரியசாமிதான் அப் பெருமைக்கு உரியவன். அண்மையில் அனுமான் உடற்பயிற்சிப் பள்ளி ஆண்டு விழாவில், பொது மக்கள் முன்னிலையில் பலகாட்சிகளைத் தத்ரூபமாகச் செய்து காட்டி பலத்த கைத்தட்டலைப் பெற்றான். ஐந்து பேர் இவனைத் தாக்கினால் அவர்களிடமிருந்து தப்பிக்கும் திறமை இவனுக்குள்ளது. இவனது தந்தைதான் இப் பயிற்சிகளில் இவனுக்கு குரு. அவர் பெயர் பி. சந்தானம்.''இப்பயிற்சிகள் கற்றுக் கொள்வதால் மிகுந்த சுறுசுறுப்பும், படிப்பில் மிக்க ஆர்வமும் ஏற்படுகிறது எனப் பெருமையாகக் கூறுகிறான்.

படமும் தகவலும்: மதுரை ராஜசேகரன்



விண்வெளிப் பயிற்சியில் சென்னை மாணவர் முரளி!



அமெரிக்க விண்வெளி நிறுவனம் (நாஸா) நடத்தும் சர்வதேசக் கோடைக்காலப் பயிற்சி முகாமில், கலந்து கொள்வதற்காகச் சென்னையைச் சேர்ந்த டி.எம். முரளி என்னும் பதினேழு வயது மாணவர் ஜூன் 20—ம் தேதியன்று அமெரிக்காவுக்குப் பயணமானர்.

கடந்த நான்கு ஆண்டுகளாக, ஆண்டுதோறும் நடைபெற்று வரும், இந்தப் பயிற்சி முகாமிற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதலாவது இந்திய மாணவர் முரளிதான் என்பது குறிப்பிடத்தக்கது.


இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (ஐ.எஸ்.ஆர்.ஓ.), மத்திய கல்வி அமைச்சகம், தில்லியிலுள்ள அமெரிக்கத் தூதரகம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று முரளியைத் தேர்ந்தெடுத்துள்ளது. சென்னை வித்யாமந்திர் பள்ளியில், இந்த ஆண்டுதான் முரளி 'ப்ளஸ் டு' வகுப்பை முடித்தார். இந்திய தொழில்நுட்பக் கழகத்தில் (ஐ.ஐ.டி.) கம்ப்யூட்டர்—எலெக்ட்ரானிக்ஸ் வகுப்பில் சேருவதற்குத் தேர்வு பெற்றுள்ளார். நாஸா பயிற்சி முடிந்து திரும்பியதும், அவர் ஐ.ஐ.டி.யில் தமது படிப்பைத் தொடருவார்.

நாஸா பயிற்சி முகாமிற்கு இந்திய மாணவர் ஒருவருக்கு அழைப்பு விடுக்கும்படி யோசனை கூறியவர் இந்தியாவிலுள்ள அமெரிக்கத் தூதர் ஜான் கந்தரமேன்தான்.

கோடைக்கால விடுமுறையின் போது, நாஸா விண்வெளி ஆய்வுக் கூடத்தில் நேரடியாகப் பணிபுரியும் அனுபவத்தைப் பல நாட்டு இளைஞர்களுக்கு அளிப்பதன் மூலம், விண்வெளி ஆய்விலும் விமான இயலிலும் ஈடுபட அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஒவ்வோர் ஆண்டும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஒரு சில மாணவர்களே இத்திட்டத்தில் பங்கேற்க அழைக்கப்படுகின்றனர். நான்கு ஆண்டுகளுக்கு முன்னல் இத்திட்டம் துவக்கப்பட்டது முதல் இதுவரையில் ஜெர்மனி, மெக்சிகோ, கனடா, பிரேஸில், ஸ்பெயின், இந்தோனேஷியா, ஜப்பான், இத்தாலி ஆகிய நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் பங்கு கொண்டுள்ளனர். இப்போது இந்திய மாணவர் ஒருவருக்கு வாய்ப்புத் தரப்பட்டுள்ளது.

— அமெரிக்கத் தகவல் நிலையம்



இருமொழிகளில் பழமொழிகள்

PARALLEL PROVERBS

சிறிய பானை சீக்கிரம் சூடாகும்.

A little pot is soon hot;

ஆடத் தெரியாத நடனக்காரிக்குக் கூடம் கோணல்

A bad workman quarrels with his tools;

விளக்கினடியில் எப்போதும் இருட்டு.

At the foot of the lamp, it is always dark;

தீயோர் கூட்டத்தை விடத் தனிமை மேல்.

Better alone than in bad company.

முள்ளை முள்ளால்தான் எடுக்க முடியும்.

Cut a diamond with a diamond;

போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து.

Contentment is happiness.

விவேகம் வீரத்திலும் சிறந்தது.

Discretion is the better part of Valour.

குறைகுடம் கூத்தாடும்.

Empty vessels make most sound.

சொல்வதைவிடச் செய்வது மேல்.

Example is better than precept.

முதலில் வந்தவர்கள் முதலில் கவனிக்கப் படுவர்.

First come, first served.

தனக்குத்தானே உதவுவோருக்குத் தானும் உதவுவான் இறைவன்.

God helps those who help themselves.

ஒன்றுமில்லாததற்கு ஒரு துண்டு மேல்.

Half a loaf is better than no bread.

உண்பதற்காக வாழாதே; வாழ்வதற்காக உண்ணு.

Live not to eat but eat to live.

அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.

Little strokes fell great oaks.

நன்னடத்தையே ஒருவனை நல்ல மனிதனுக்கு' கிறது.

Manners make a man.

ஆபத்துக்குப் பாபமில்லை.

Necessity has no law.



சிந்திய பாலைப் பற்றிச் சிந்திப்பதால் என்ன பயன்?

No use crying over spilt milk.

கூழாங்கல் கூட்டு சேராது.

Rolling stone gathers no mass.

நல்ல ஆரம்பம் பாதி முடிந்ததாகும்.

Well begun is half done.

தொகுத்தவர்: ச. கஃபியா ஷகாபுதீன்.

எமதூதர்கள் ஏமாந்தார்கள்!



திருவாழத்தான்

காட்சி 1

(தர்ம லோகம். யமதர்மராஜா அரியாசனத்தில் உட்கார்ந்திருக்கிறார். எதிரே சித்திரகுப்தர். இரு பக்கங்களிலும்யமதூதர்கள் கையில் வேலுடன் நிற்கிறார்கள்.)

யமதர்மர்: சித்திரகுப்தரே, மானிடர்களில் இன்று தர்ம லோகத்துக்கு வரவேண்டியவர் எவர்?

சித்திரகுப்தர்: சுவாமி, திருவாழத்தான் என்று ஒருவர் தமிழ்நாட்டில் இருக்கிறார். அவருடைய ஆயுள் இன்றுடன் முடிவடைகிறது. அவரது உயிரைக் கொண்டு வந்தாக வேண்டும், பிரபு!

யம: அந்தத் திருவாழத்தானுக்கு எந்த விதமாக மரணம் சம்பவித்தாக வேண்டும் என்பதைத் தெரிவியும்.

சித்: ஸ்கூட்டர் விபத்தில் அவர் மரணமடைய வேண்டும், சுவாமி!

யம: சரி, நமது தூதர்களில் இன்று பூலோகத்துக்குச் சென்று உயிரைக் கவர்ந்து வர வேண்டியவர் யார், யார்?

சித்: இடும்பன், கடம்பன், பிரபு!

யம: ஏய் இடும்புன், கடம்பன்! இப்படி வாங்க!

இடும்பன்: வந்தோம், ஐயா!

யம: இடும்பா, நமது கணக்குப் பிள்ளை சித்திரகுப்தர் சொன்னதைக் கேட்டாய் அல்லவா?

இடு: கேட்டேன், ஐயா!

யம: ஏய் கடம்பா! நீயும் கேட்டாய் அல்லவா?

கடம்பன்: கேட்டேன், ஐயா!

யம: என்ன கேட்டாய்?

கட: இந்தத் திருவாழத்தான்னு ஒருத்தர். தமிழ்நாட்டில் இருக்காரு. அவருக்கு இன்னிக்கு மரணம் சம்பவிக்கணுங்க.

யம: மரணம் எப்படிச் சம்பவிக்கும்?

கட: ஸ்கூட்டர் விபத்தில் சம்பவிக்கணுங்க.



யம: சரி, போய் அந்தத் திருவாழத்தானின் உயிரைக் கொண்டு வாருங்கள்.

இடு, கட: கொண்டு வரோமுங்க!

(செல்கிறார்கள்.)

காட்சி 2

(திருவாழத்தானின் வீட்டு வாசல். திருவாழத்தான் அலுவலகம் செல்ல ஸ்கூட்டரை ஸ்டார்ட் செய்கிறார். அவருடைய மனைவி அருகில் நின்று விடை கொடுக்கக் காத்திருக்கிறார்.)

திருவாழத்தான்: (மனைவியிடம்) பக்கத்து வீட்டுக் கிட்டுவை ஏன் காணோம்? இன்னிக்கு அவனுக்கு ஸ்கூல் விடுமுறையா?

திருவாழத்தானின் மனைவி: இல்லையே! காலையிலே கூட இங்கே வந்திருந்தான். ஸ்கூல் விடுமுறைன்னு சொல்லலியே அவன்!

(அச்சமயம் சிறுவன் கிட்டு தோளில் புத்தகப் பையை மாட்டிக் கொண்டபடி ஓடி வருகிறான்.)

கிட்டு: மாமா, இன்னிக்கு லேட் ஆயிடுத்து. மன்னிக்கணும். புறப்படலாமா?

திரு: ஏறி உட்கார்..

(ஸ்கூட்டரைத் திருவாழத்தான் ஸ்டார்ட் செய்கிறார்.)

திரு: (மனைவியிடம்) வரேன்.

தி. ம: சாயங்காலம் சீக்கிரம் வந்துடுவீங்க இல்லியா?

திரு: முயற்சி பண்றேன்.

தி. ம.: நாளைக்கு உங்க பிறந்த நாள். ஞாபகம் வச்சுக்குங்க. தையல்காரரிடம் உங்க டிரஸ்ஸைத் தைக்கக் கொடுத்திருக்கேன். நீங்க வந்த பிறகு தான் போய் வாங்கி வரணும்.

திரு: சீக்கிரம் வரப் பார்க்கிறேன்.

(ஸ்கூட்டரில் திருவாழத்தானும், கிட்டுவும் செல்கிறார்கள்.)

இடு: கடம்பா, இதோ ஸ்கூட்டர்லே வராரே, இவருதான் திருவாழத்தான். ஸ்கூட்டரைத் தள்ளிவிட்டு ஆக்ஸிடெண்ட் பண்ணு.

கட: பொறு, பொறு. அவசரப் படாதே. அதோ பின்னுலே ஒரு பையன் உட்கார்ந்திருக்கான், பாரு.

இடு: ஆமாம், அவனுக்கு என்ன?

கட: ஸ்கூட்டர் ஆக்ஸிடெண்ட் உண்டாக்கினோம்னு, அந்தப் பையனும் செத்துப் போவான்.

இடு: போகட்டுமே!

கட: போகட்டுமேவா? அப்புறம் ரெண்டு உயிரை தர்ம லோகத்துக்கு இழுத்துக்கிட்டுப் போனோம்னு, தர்மராஜா கோவிச்சுக்கிடுவாரு.

இடு: ஏன்? ஏன் கோவிச்சுக்கிடுவாரு? ஒண்ணுக்கு ரெண்டு உயிராக் கொண்டாந்துட்டோம்னு சொன்னு, சந்தோஷப்படுவாரு.

கட: போடா, முட்டாள்! உனக்கு தர்மலோகச் சட்டமெல்லாம் தெரியாது. ஒரு உயிரைக் கொண்டு போகணும்னு, ஒரு உயிரைத்தான் கொண்டு போகணும். ரெண்டு உயிரைக் கொண்டு போகக் கூடாது. இன்னும் நீ அந்தச் சட்டத்தையெல்லாம் படிக்கலேன்னு தெரியுது.

இடு: புஸ்தகம் கிடைக்கலியே! சரி, இப்ப என்ன பண்ணலாம்? இந்த

திருவாழத்தான் ஸ்கூட்டர்லே போய்க் கிட்டே இருக்கிறானே!

கட: தொடர்ந்து போகலாம். பையனைப் பள்ளிக்கூடத்துக்கு எதிரே இறக்கி விட்டுத்தானே ஆகணும்? அப்ப ஐயா தனியாகப் போவாரு. ஸ்கூட்டரைக் கவுத்து விட்டுடலாம்.

(பள்ளி எதிரே ஸ்கூட்டர் நிற்கிறது. கிட்டு இறங்குகிறான்.)

கிட்: தாங்க்ஸ், மாமா! சாயங்காலம் பஸ்லே வீட்டுக்குப் போயிடறேன்.

திரு: குட், நான் வரேன்!

(அதே சமயம் ஒருவர் அருகில் வருகிறார்.)

வந்தவர்: சார், நீங்க டவுன் பக்கம் போறீங்களா?

திரு: ஆமாம், நீங்க எங்கே போகணும்?

வந்: கோர்ட்டுக்குப் போகணும். பஸ்ஸுக்குக் காத்துண்டு இருக்க நேரமில்லே. வக்கீல் காத்துண்டு இருப்பார். என்னை கோர்ட் பக்கத்துலே இறக்கி விட முடியுமா?

திரு: ஓ! உட்காருங்க. நான் கோர்ட்லேதான் வேலை பார்க்கறேன். உங்களை இறக்கி விட்டுடறேன்.

வந்: ரொம்ப தாங்க்ஸ், சார்! இப்படி உதவி பண்ணறவங்க இந்தக் காலத்துலே யார் இருக்காங்க? (ஸ்கூட்டரின் பின்னால் அவர் உட்காருகிறார். ஸ்கூட்டர் செல்கிறது.)

திரு: ஏன், நீங்க இருக்கீங்களே! இப்படி உதவின்னு ஒருத்தர் வந்து உங்ககிட்ட கேட்டால், செய்ய மாட்டீங்களா?

வந்: என்னிடம் ஸ்கூட்டர் இல்லையே!

திரு: ஸ்கூட்டர்லே கூட்டிண்டு போறது மட்டும்தான் உதவியா? ஒருத்தர் மற்றவருக்கு எத்தனையோ விதத்திலே உதவி பண்ணலாம். சமயத்துலே பணம் கடன் கொடுத்து உதவலாம். அவரால் திருப்பிக் கொடுக்கமுடியல்லேன்னு கேட்காமல் விட்டுடறது கூட உதவிதான்.



இடு: என்னடா கடம்பா, ஆசாமி இன்னொருத்தரை ஸ்கூட்டர்லே ஏத்திக்கிட்டாரு! இப்ப என்ன பண்ணறது?

கட: அவரை இறக்கி விட்டுத்தானே ஆகணும்? அப்ப கவுத்துடலாம்.

இடு: ரெண்டு பேருமே கோர்ட்டுக்குப் போறாங்களாமே! எப்படிக் கவுக்கிறது?

கட: பார்க்கலாம்.

(இடும்பனும், கடம்பனும் ஸ்கூட்டரைத் தொடர்ந்து செல்கிறார்கள்.)

காட்சி 3

(கோர்ட் வாயில், ஸ்கூட்டரை ஸ்கூட்டர் ஸ்டாண்ட் அருகில் திருவாழத்தான் நிறுத்துகிறார். இருவரும் இறங்குகிறார்கள். ஸ்கூட்டரைப் பூட்டி விட்டுத் திருவாழத்தான் நடக்கிறார்.)

வந்தவர்: ரொம்ப தாங்க்ஸ் சார்! உதவியை மறக்க மாட்டேன், நான் வரேன்.

கட: நாசமாப் போச்சு. இப்ப இந்த திருவாழத்தான் ஆஃபீஸ் போறாரு. வேலையை முடிச்சிட்டுச் சாயங்காலம் ஐந்து மணிக்குத்தான் வீடு திரும்புவாரு. அதுமட்டும் என்ன செய்யறது?



இடு: ஏதோ ஒரு தியேட்டர்லே சத்தியவான் — சாவித்திரி படம் ஓடுதாம். மார்னிங் ஷோ, மாட்னி ஷோ ரெண்டும் பார்க்கலாம், வா. பெரிய படம். பொழுது ஓடிடும்.

(செல்கிறார்கள்.)

காட்சி 4

(மாலை மணி 5.15. அலுவலகத்தை விட்டு வெளியே வந்த திருவாழத்தான் நேராக ஸ்கூட்டர் ஸ்டாண்ட்டுக்குச் சென்று, தன் ஸ்கூட்டரின் பூட்டைத் திறந்து கொண்டு, ஸ்டார்ட் செய்கிறார்.)

இடு: கடம்பா, தயாராக இரு. ஸ்கூட்டர் கிளம்பினதும் கவுத்துடணும்.

கட: அப்படி எல்லாம் கவுத்துட முடியாது. கொஞ்சம் வேகமாப் போனாத்தான் கவுக்க முடியும். இல்லாட்டி, காலை ஊனிக்கிட்டுத் தப்பிச்சுக்கிடுவாரு.

(ஸ்கூட்டர் கிளம்பி, கோர்ட்டின் காம்பௌண்ட்டை விட்டு வெளியே வந்த போது, திருவாழத்தானின் மனைவி எதிரே நிற்கிறார். திருவாழத்தான் மனைவியை வியப்புடன் நோக்கி, ஸ்கூட்டரை நிறுத்துகிறார்.)

திரு: நான்தான் வீட்டுக்கு வந்து உன்னைக் கூட்டிக்கிட்டு டவுனுக்கு வரேன்னு சொன்னேனில்ல. நீ ஏன் இங்கே வந்தே?

தி. ம.: நீங்க வீட்டுக்கு வந்து என்னை அழைச்சுக்கிட்டுத் திரும்ப டவுனுக்கு வரணும். உங்களைச் சிரமப் படுத்த வேணாம்னு நானே பஸ்ஸுலே வந்துட்டேன்.

திரு: சரி, உட்காரு, போகலாம்.

(திருவாழத்தானின் மனைவி ஸ்கூட்டரின் பின்னே உட்கார, திருவாழ்த்தான் ஸ்கூட்டரைச் செலுத்துகிறார்.)

கட: நாசமாப் போச்சு. இந்தத் திருவாழத்தானின் உயிரை நாம வாங்க முடியாது. இவர் மாத்தி மாத்தி யாருக்காவது உதவி செய்துக்கிட்டே இருக்கிறாரு. மத்தவங்களுக்கு உதவி செய்கிறவங்களுக்கு மரணமே கிடையாது. வா, தர்மராஜாகிட்டே சொல்லிடலாம்.


(இடும்பனும் கடம்பனும் செல்கிறார்கள்.)

ஒரு கொக்கு கேட்டது:

"நரியண்ணே! உங்க வீட்டுக்கு விருந்தாளியா இன்னைக்கு வரட்டுமா?"

"ஒரு வாரம் பொறுத்திருங்கள். நான் போய் டவுனில் தட்டு ஒன்று வாங்கி வந்துவிடுகிறேன்!"

— மணியன் தர்மலிங்கம்.



என் குழந்தைப் பருவம்



டாக்டர் லலிதா காமேஸ்வரன்


(சென்ற இதழ் தொடர்ச்சி)

எட்டயபுரத்திற்கு அருகில் உள்ள கட்டாரங்குளம் ஜமீன் குடும்பத்தைச் சேர்ந்த திரு. 'சிவத்தசாமி பசுமலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் படித்தார். இளவயதில் மனைவியை இழந்த அவர், துறவறம் மேற்கொண்டார். பழுத்த காந்தியவாதி. எப்போதும் வெள்ளைக் கதர் ஆடை அணிந்திருப்பார். பட்டையாக விபூதி பூசி இருப்பார். பல சிந்தனைகளுக்கிடையே, ஒருநாள் காலை உணவருந்த மறந்து போய்விட்டார். ''இதிலிருந்து என்ன தெரிகிறது? நம் உடம்பிற்கு மூன்று வேளை உணவு தேவையில்லை. இரண்டு வேளை உணவு போதும்! அதனால் இனிமேல் காலையில் டிபன் சாப்பிடமாட்டேன்,'' என்றுசொல்லி விட்டார். காப்பி, டீ எதுவும் பருக மாட்டார். மாலையில் அவரைச் சுற்றி உட்கார்ந்து கொண்டு, ''இன்று என்ன பேசலாம்?'' என்று கேட்போம்.

புத்தர், மஹாவீரர், சாக்ரடீஸ், முகமது நபி, ஏசுநாதர், காந்தியடிகள் என்று இப்படி யாருடைய வாழ்க்கையிலாவது நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியை எடுத்துச் சொல்வார். அதன் பிறகு, அந்த விளக்கவுரைக்குப் பொருத்தமான ஒரு குறளைச் சொல்லி அதற்குப் பொருள் சொல்வார். ''ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைத் திருப்பிக் காட்டு'' என்று ஏசுநாதர் சொன்னதைச் சொல்லிவிட்டு, ''இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு'' என்று எடுத்துச் சொல்வார். ''காந்தியடிகள், அஹிம்சை, சத்தியம், என்று வலியுறுத்துகிறார். வள்ளுவர் என்ன சொன்னார்? 'ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன் பின்சாரப் பொய்யாமை நன்று' என்று விளக்குவார்.

சிவத்தசாமி மாமா அவர்களால் எங்களுக்கு 8, 9 வயதில் தூண்டப்பட்ட ஆர்வத்தின் விளைவாக, ஏழாம் வகுப்புப் படித்து முடித்தவுடன் கோடை விடுமுறையில் தந்தையாரிடம், 'திருக்குறள், அறத்துப்பால், பொருட்பால்' இரண்டையும் முறையாகப் பாடம் கேட்டுப் படித்தோம், நானும் என் சகோதரி மீனாவும்.

தான் குடும்பத்தின் தலைவன், அதனால் எல்லாப் பொறுப்புக்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கடமை உணர்ச்சியுடன் திக்கற்ற உறவினர்களை எல்லாம் வீட்டில் சேர்த்து வைத்துக் கொள்வார் தந்தை. கணவனை இழந்த அத்தையை உடனே அழைத்துக் கொண்டு வந்து வீட்டுடன் வைத்துக் கொண்டார்கள். என் இளைய சகோதரர் லக்ஷ்மிரதன் பார



தியை ஆங்கிலேயர் சிறை செய்து அவர் விடுதலை இயக்கத்தில் தீவிரப் பங்கு பெற்றிருக்கிறார் என்று சொல்லி, விசாரணையில்லாக் கைதியாக வைத்து இருந்தார்கள். உடனே தந்தையார் மருமகளையும், பேரன் பேத்திகளையும் அழைத்துக் கொண்டு வந்து வீட்டுடன் வைத்துக் கொண்டார்கள். அவர்களும் எங்களுடன் சேர்ந்து, என் தாயாரால் வளர்க்கப் பட்டார்கள்.

முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் தீவிரமாக நடந்து கொண்டிருந்தது. ஆரம்பப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தேன். மாலையில் பள்ளியில் இருந்து நானும் என் சகோதரியும் வீட்டிற்கு வந்தவுடன் எங்களை எதிர்நோக்கி இருந்த காட்சி பிரமிக்க வைத்தது. எங்கள் வீட்டைச் சுற்றி இருந்த இரண்டு ஏக்கர் தோட்டத்திலும், முன் வராந்தாவிலும் ஒரே மக்கள் கூட்டம். எல்லா மரத்தடிகளிலும் துண்டை விரித்துத் தொண்டர்கள் படுத்திருந்தார்கள். உள் கூடத்திற்குள் நுழைந்தவுடன் அசந்து போனோம். யார் யாரோ பெரியவர்கள் எல்லாம் உட்கார்ந்திருந்தார்கள்.

தந்தை எங்களை ''மீனா, லலிதா'' என்று அழைத்து, ''என் குழந்தைகள்'' என்று அறிமுகப்படுத்தினார்கள். தாடி மீசையுடன் உட்கார்ந்திருந்த பெரியவரைப் பார்த்து, ''நீங்கள்தான் பெரியாரா?'' என்று கேட்டேன்.

''உனக்கெப்படித் தெரியும்?'' என்று கேட்டார், பெரியார்.

''பத்திரிகையில் உங்கள் படத்தைப் பார்த்திருக்கிறேன்,'' என்றேன்.

பெரியாருக்கு ஒரே மகிழ்ச்சி. என்னை அணைத்துக் கொண்டு, ''பத்திரிகையை இந்தக் குழந்தை பார்க்கிறதே! நம்ம ஊரில் பெரியவர்கள் படிக்க மாட்டேன் என்கிறார்களே!'' என்று வருத்தப்பட்டுக் கொண்டார்.

பின்புறம் சென்று பார்த்தோம். பெரிய பெரிய பாத்திரங்களில் சமையல் வேலை நடந்து கொண்டிருந்தது. என் தாயார் மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''இன்று என்ன விசேஷம்?'' என்றேன்.


''இன்னும் நான்கைந்து நாட்களுக்கு விசேஷம்தான்! இவர்களெல்லாம் இங்கே தங்கி மதுரை மாவட்டத்தில் ஒவ்வொரு நாள் ஓர் ஊருக்குப் போய் இந்தி எதிர்ப்புப் பிரசாரம் செய்யப் போகிறார்கள். முக்கியமான கூட்டங்களில் பெரியாரும், உன் தந்தையும்கூடப் போய்க் கலந்து கொள்வார்கள்'' என்று சொன்னார்கள்.


1940 ஆம் ஆண்டுக்குப் பிறகு மாறி, மாறிக் குடும்பத்தில் யாராவது ஒருவர் சிறையில் இருப்பது வழக்கமாகி விட்டது. மாதம் ஒரு முறை சிறையில் இருக்கும் அரசியல் கைதியைப் பார்க்க இருவருக்கு அனுமதிச் சீட்டு



வழங்கப்படும். முறை வைத்துப் பெரியவர்களில் ஒருவரும், குழந்தைகளில் ஒருவரும் ஒவ்வொரு மாதமும், சிறைக் கைதிகளைப் பார்க்கப் போவோம். தந்தையாருக்கும் "எப்போதும் கதர்' என்பதைவிட, 'எப்போதும் சுதேசி' என்பதில்தான் நம்பிக்கை. ஆனாலும், சிறைக்குப் பார்வையாளராகப் போகும் போது, ஆங்கிலேயருக்கு நம் உணர்ச்சிகளைத் தெரிவிக்கிறோம் என்று எண்ணிக் கொண்டு, தவறாமல் கதர் உடை அணிந்து எங்களை எல்லாம் அனுப்புவார்களே தவிர, தந்தை வரமாட்டார்கள்.

பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டு கல்லூரிக்குப் போக வேண்டிய நிலை வந்தது. "என்னைப் பொறுத்த வரை ஆண்பிள்ளை, பெண் பிள்ளை என்ற வேற்றுமை எனக்கில்லை. என் சொத்தில், என் சேமிப்பில் அவரவர்கள் பங்கு அவரவர்களுக்கு. அதைப் பணமாக வங்கியில் வைத்துக் கொள்ள வேண்டுமா? படிப்பிற்காகச் செலவழிக்க வேண்டுமா? அல்லது நகையாக வைத்துக் கொள்ள வேண்டுமா? என்பதை அவரவர்களே முடிவு செய்து கொள்ளுங்கள். பிற்காலத்தில் என் தந்தை செலவழிக்கச் சோம்பினார்கள். அதனால்தான் என் வாழ்க்கை கெட்டுப் போய் விட்டது என்று சொல்லி விடாதீர்கள்" என்றார் தந்தை.





என் தாயார் எங்களைத் தனியாக அழைத்து, "என் தலைமுறையில் நானே மெட்ரிகுலேஷன் படித்திருக்கிறேன். நீங்கள் அதைவிட முன்னேற வேண்டாமா? கல்லூரியில் சேர்ந்து படிக்க வேண்டும் என்று அறிவுரை சொன்னார்கள்.

அப்போது மதுரையில் மகளிருக்கெனத் தனிக் கல்லூரி இல்லாத காலம். குடும்பத்தினரும் நண்பர்களும் ஆளுக்கொரு ஆலோசனை சொன்னார்கள். "நல்லவராகப் பார்த்துத் திருமணத்தை முடித்து விடுங்கள். உங்களுக்கும் வயதாகிறது," என்று பலர் தந்தையிடம் யோசனை சொன்னார்கள். ஆனால், நாங்கள், "மேலே படிக்க வேண்டும்" என்று முடிவாகச் சொன்னோம். சிலர், "சென்னை குயின் மேரிக் கல்லூரிக்காவது திருச்சி ஹோலி கிராஸ் கல்லூரிக்காவது அனுப்புங்கள் என்று சொன்னார்கள். இரண்டு கல்லூரிகளுக்கும் விண்ணப்பங்கள் அனுப்பினோம். இரண்டு கல்லூரிகளில் இருந்தும் இருவருக்குமே அனுமதிச் சீட்டுக் கிடைத்தது. ஆனால், என் தந்தை, "ஆண்களுடன் கல்லூரியில் சேர்ந்து படிப்பதன் விளைவுகளைவிட, வளரும் வயதில் குடும்பச் சூழ்நிலையை விட்டு மகளிர் விடுதியில் தனியாகத் தங்குவதன் விளைவுகள் மோசமானதாகவே இருக்கும் என்று நினைக்கிறேன். முதியோர்களைப் பேண வேண்டும், பொறுப்புக்களைத் தாங்க வேண்டும், பண்பாட்டைக் காப்பாற்ற வேண்

டும், என்பன போன்ற கருத்துக்கள் ஆழமாகப் பதிய வேண்டிய வளரும் வயதில் (Teen age) பண்பான குடும்பச் சூழ்நிலையை விட்டுவிட்டு விடுதிக்குச் செல்வானேன்? 'தந்தை குடிகாரன், தாயார் பொறுப்பற்றவள்' என்று பழிக்கும்படியான சூழ்நிலை இருந்தால், குழந்தைகள் விடுதிகளில் தங்கிப் படிப்பதே நல்லது. ஆனால், நல்ல சூழ்நிலை இருக்கும்போது, நம் வீட்டை விட்டு எதற்காகப் போக வேண்டும்? உங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால் ஆண்கள், பெண்கள் இருபாலரும் படிக்க வசதியுள்ள மதுரை அமெரிக்கன் கல்லூரியிலேயே இண்டர்மீடியட் வகுப்பில் சேர்ந்து படிக்கலாம்'' என்று சொன்னார்கள்.

''எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை'' என்று அமெரிக்கன் கல்லூரியிலேயே சேர்ந்தோம்.

எங்களுடன் சேர்ந்த ஒரு மாணவி ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவள். கல்லூரி அலுவலகம் அறிவித்திருந்த கடைசி நாள் தவணை வரை அவளால் கல்லூரிக்குக் கட்டணத் தொகை கட்ட முடியவில்லை. வருத்தப்பட்டுக் கொண்டிருந்தாள். 'அவளை அழைத்துக் கொண்டு, அவள் வகுப்பு மாணவிகள் ஐந்தாறு பேர் சேர்ந்து முதல்வரைப் பார்த்தோம். ''கல்லூரியில் இடம் கேட்டு என்னைப் பலர் தொல்லைப்படுத்துகிறார்கள். எவ்வளவு நாள் காத்திருக்க முடியும்? அதனால் இன்னும் ஒரு நாள் வேண்டுமானால் கெடு வைக்கிறேன். நாளை மாலைக்குள் கட்டவில்லையானால் இவளுக்குப் பதில் வேறு ஒரு மாணவனைச் சேர்த்துவிடுவேன்'' என்றார் முதல்வர்.

''சரி'' என்று சொல்லி அந்த மாணவியை எங்களுடன் அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்து என் தாயாரிடம் முறையிட்டோம். தாயாரும் ''சரி'' என்று சொல்லி, கட்ட வேண்டிய தொகையை அந்த மாணவிக்குத் தந்தார்கள். எடுத்துக் கொண்டு மறு நாள் காலை கல்லூரி அலுவலகத்திற்குச் சென்றோம்.

அலுவலகக் கணக்கர் ஏதோ தவறு செய்ததன் காரணமாக ஒரு மாண



வரை அதிகமாகச் சேர்த்துவிட்டார்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. நாங்கள் சென்றவுடன் அந்தக் காரணத்தைச் சொல்லி, அந்த மாணவியைச் சேர்த்துக் கொள்ள முடியாது என்று சொன்னார் முதல்வர்.

''நீங்கள்தானே ஒரு நாள் கெடு தந்தீர்கள்!'' என்று தர்க்கம் செய்து பார்த்தோம். முதல்வர் மசியவில்லை. அலுவலகத்திற்கு வெளியில் வந்து நின்றுகொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தோம். அலுவலக எழுத்தர் மெதுவாக என்னிடம் ''யாராவது பெரியவர்களைக் கொண்டு வந்து சிபாரிசு செய்து பாருங்கள்'' என்று சொன்னார்.

உடனே அந்தத் தோழியையும் ஏற்றிக் கொண்டு எங்கள் வண்டியிலேயே நேராக அப்போது எம்.எல்.ஏ. ஆக இருந்த என் தமக்கை திருமதி லக்ஷ்மி பாரதியின் வீட்டிற்குப் போனோம். விவரத்தைச் சொன்னவுடன் ஒரு நிமிடம்கூடத் தாமதிக்காமல் உடனேயே எங்களுடன் ஏறிக் கொண்டு அக்காவும் வந்தார்கள். நேரே கல்லூரி முதல்வர் அலுவலகத்திற்குச் சென்றோம். ''உங்கள் அலுவலகத்தில் தவறு இருந்தால் அதற்கு மாணவியை ஏன் பழி வாங்குகிறீர்கள்? உங்கள் தவறை விளக்கமாக எழுதி அனுப்பி, பல்கலைக்கழகத்தில் இருந்து மேலும் ஓர் இடம் வேண்டும் என்று கேட்டு நீங்கள்தான் அந்தப் பழியை ஏற்க வேண்டும்'' என்று என்

தமக்கை வாதிட்டவுடன், முதல்வர் பேசாமல் அந்தப் பெண்ணுக்கு அனுமதிச் சீட்டு வழங்கிவிட்டார்.

சுமார் ஒரு பத்து தினங்களுக்குப் பிறகு அலுவலகச் சிப்பந்தி ஒருவர் என் வகுப்பிற்கு வந்து உங்களை முதல்வர் வரச் சொன்னார் என்றார். ''நம்மிடம் கோபமாகத்தான் இருப்பார். என்ன சொல்லப் போகிறாரோ!'' என்று நடுங்கிக் கொண்டே போனேன்.

முதல்வர், என்னிடம், ''நம் கல்லூரியில் ஒவ்வோர் ஆண்டும் சேரும் மாணவிகளுள் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் அதிக மதிப்பெண்களைப் பெறும் மாணவிக்கு உதவித் தொகை வழங்குவதற்கு ஓர் அறக்கட்டளை இருக்கிறது. எல்லா மாணவிகளுடைய மதிப்பெண்களையும் ஒப்பிட்டுப் பார்த்தோம். நீதான் அதிக மதிப்பெண்களைப் பெற்றிருக்கிறாய். அதனால் இந்த விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து உன் தந்தையின் மேலொப்பமும் பெற்று நாளைக் கொண்டு வந்து அலுவலகத்தில் கொடுத்துவிடு'' என்றார்.

''சரி'' என்று மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொண்டு போய் பூர்த்தி செய்து, என் தந்தையிடம் கொண்டு போனேன். படிவத்தைப் பார்த்துவிட்டு, ''எல்லோரையும் விட நீ அதிக மதிப்பெண்கள் பெற்றிருப்பதைப் பற்றி எனக்கு மிகுந்த திருப்தி. இருப்பினும் இறைவருளால் உங்களைச் செலவழித்துப் படிக்க வைக்கும் வசதி எனக்கிருக்கிறது. அதனால் வேறு ஓர் ஏழை மாணவிக்குக் கொடுத்துவிட வேண்டும் என்பதுதான் நம் விருப்பம் என்று சொல்லி முதல்வரிடம் திரும்பக் கொடுத்துவிடு'' என்று சொல்லி அனுப்பிவிட்டார்கள்.

மறுநாள் முதல்வரிடம் போனேன். ''என்னம்மா இது! எல்லோரும் உண்மையான வருவாயைக் குறைத்துச் சொல்லிப் பொய்ச் சான்றிதழ் கொடுத்து உதவிச் சம்பளம் கேட்கும் இந்த நாளில், உன் தந்தை இப்படி வேண்டாம் என்று சொல்லி, திருப்பி அனுப்பிவிட்டாரே!'' என்று வியந்தார்.

ஒவ்வொரு நிகழ்ச்சியைப் பற்றி எழுதும் போதும் தொடர்புடைய பல நிகழ்ச்சிகள் நினைவுக்கு வருகின்றன. மதுரையில் மீனாட்சி அம்மன் கோவிலுக்குள் ஹரிஜனப் பிரவேசம், பள்ளிப்படிப்பின்போது நிகழ்ந்தவை, கல்லூரிப் படிப்பின்போது நிகழ்ந்தவை, மருத்துவக் கல்வி படிப்பின் போது நிகழ்ந்தவை என்றிப்படி எழுதிக் கொண்டே போனால், அது முடிவில்லாமல் ஒரு பெரிய நூலாகி விடக் கூடும். என் குழந்தைப் பருவத்தைப் பற்றி எழுதப்போக, அதைப் படிக்கும் வாசகர்களுக்கு வயது கூடி விடப் போகிறதே என்ற அச்சத்தில் இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

அடுத்த இதழில்...


என் குழந்தைப் பருவம்

டாக்டர்
கி. வேங்கட சுப்ரமணியன்
துணைவேந்தர், புதுவை பல்கலைக் கழகம்.



பெட்டிக்குள் நோட்டு!

உமாகுமார்



குடிசைக் கதவை வெளிச்சத்திற்காகத் திறந்து வைத்துவிட்டு அரிசிப் பானையை வெளியே இழுத்தாள் வேணி. பானைமேல் ஒட்டிக் கொண்டிருந்த ஒட்டடையைத் துணியால் தட்டியவள் மூலையில் ஒதுங்கியிருந்த தகரப் பெட்டியையும் இழுத்தாள் வெளியே. பாபுவின் பெட்டி. 'பாவம், பிள்ளைக்கு தூசிதட்டி வைக்கக் கூட நேரமில்லை!' என்று எண்ணியபடியே ஒரு கிழிசல் துணியை எடுத்துப் பெட்டியின் மேலே படர்ந்து கிடந்த தூசிகளைத் தட்டினாள்.

'வெளியிலே இம்புட்டுத் தூசியிருந்தா, உள்ளே இருக்கிற புத்தகம் மட்டும் எப்படி இருக்கும்? அதுவும் தூசியாத்தான் இருக்கும்!'

மளமளவென்று ஒருபக்கம்பிளந்து கொண்டிருந்த பேட்லாக்கை ஒரு கையால் அமுக்கிக் கொண்டு பெட்டியைத் திறந்தாள். பெட்டி நிறைய — முழுக்க முழுக்கப் புத்தகங்களும், நோட்டுகளும். ஆசையாய் ஒருமுறை தடவினாள். 'இம்புட்டையும் எம்மவன் படிக்குது!' மனம் துள்ளிக் குதித்தது. ஒருவிநாடி. 'அவனும் ஒருநாள் படிச்சுப் பட்டமெல்லாம் வாங்கிப் பெரிய ஆபீசரா ஆகணும்.'

பெட்டியைத் தடவிக் கொண்டிருந்தவள் கையில் தட்டுப்பட்டது ஒரு தகர டப்பா. "என்ன இது டப்பா?" என யோசித்தபடியே திறந்தாள், அந்தச் சின்னத் துருப்பிடித்த டப்பாவை. திறந்தவள் அப்படியே அதிர்ந்து போய் விட்டாள் ஒரு கணம். கண்ணைக் கசக்கிக் கொண்டு திரும்பப் பார்த்தாள். ரூபாய் நோட்டுக்களேதான். ஒன்றும், இரண்டும், ஐந்துமாக மடித்து... கைகள் நடுங்க அப்படியே அதை மூடி இருந்த இடத்தில் வைத்தாள். 'இவனுக்கேது இவ்வளவு பணம்?' — ரிக்ஷா ஓட்டும் அவள் கணவனே இத்தனை ரூபாயை மொத்தமாய்ப் பார்த்ததில்லை. ஒரு கணம் குழம்பித் தவித்தவள் ஒரு வேலையும் ஓடாமல் அப்படியே உட்கார்ந்தே விட்டாள்.

"என்ன புள்ளே? என்ன சொல்றே நீ?" — மாரி கேட்டவுடன் அழுதே விட்டாள் பெரிதாய்.

"ஆமாய்யா! நீயே போய்ப் பாரு. உன் மவன் பெட்டியை. டப்பா நிறைய துட்டு!" என்றாள்.

மாரி குழம்பினான். "என்ன! அவன் கிட்டே ஏது அத்தனை ரூபா? ம், நாமளே நம்ம புள்ளை மேலே சந்தேகப்

படறதா?''

''நான் சந்தேகப்படலேய்யா! சந்தேகத்துக்கு இடமா இருக்குங்கறேன்! எம் மவன் படிச்சுப் பட்டமெல்லாம் வாங்கி, பெரிய்ய ராசாக் கணக்கா வருவான்னு கனவு கண்டுக்கிட்டிருக்க... ஆனா, ஆனா அவன்... அவன்!'' பெரிதாய் ஒப்பாரி வைக்க ஆரம்பித்தவளை அதட்டினான். ''தே! சித்த சும்மா இரு. பயல் வீட்டுக்கு வரட்டும், பேசிக்கறேன்!'' — உறுமிய படியே பீடியை வாயில் வைத்தபடி குடிசை வாசலில் உட்கார்ந்து கொண்டான்.

''சோறு போடும்மா! நல்லாப் பசிக்குது இன்னைக்கி!'' — என்றபடியே பாபு புத்தகங்களுடன் உள்ளே வர பின்னாலேயே எழுந்து வந்தான் மாரி.

''பாபு!'' — அதட்டலான குரல்கேட்டுத் திரும்பினான். ஆக்ரோஷமாக மாரி நிற்பதைக் கண்டு குழம்பினான்.

''என்ன நைனா?''

''இங்கே வா!'' — அருகில் வந்தவனின் கன்னத்தில் ஓங்கித் தன் பலம் முழுவதையும் காட்டி ஓர் அறை விடத் துடிதுடித்துப் போனான் பாபு.

''நைனா!''

''என்னடா நைனா? திருட்டுப் பயலே! ம்! குறுக்கு வழியிலே பொழைக்கத் தெரியாமலா நான் ரிக்ஷா இழுக்கறேன். ரத்தத்தை வேர்வையா வழிச்சுப் போட்டு இரண்டு காசு பார்க்கிறவன்டா நான்! இதோ... இங்க வா! உங்க ஆயியைப் பாரு... அவ கை இரண்டையும் பாரு... பல வீடுங்கள்ள பாத்திரத்தைத் தேய்ச்சுக் காஞ்சு கிடக்குது பாரு. இப்டி சம்பாதிச்சுத்தான் உன்னைப் படிக்க வைக்கிறோம். ஏன் தெரியுமா? நீ நல்லாப் படிச்சு நல்லபடியா நாலு பேர் மெச்ச ஒழுக்கத்தோட இருக்கணும்னுதான். ஆனா, நீ இந்த வயசுலே திருட ஆரம்பிச்சிருக்கே!''


''என்ன சொல்றே நீ?'' — பழுத்துப் போன கன்னத்தைத் தடவியபடியே பாபு கேட்க... மாரி பதில் எதுவும் கூறாமல் அவனுடைய தகரப் பெட்டியைக் கொண்டு வந்து போட்டான், தடாலென்று அவன் முன்னால். ''சோம்பேறிப் பயலே! திறடா பெட்டியை முதல்லே.'' என்றான்.


மாரி சொல்ல, பாபுவுக்குச் சட்டென்று விஷயம் புரிந்து விட்டது ஒரு நொடியில். ''இதுதானா?'' என்று மெல்லச் சிரித்தான்.

''ஏய்! பெட்டியைத் திறடான்னா ஏன் சிரிக்கறே?'' — திரும்பவும் கையை ஓங்கியபடி அருகே வந்த மாரியை நன்றாக நிமிர்ந்து பார்த்தான். ''நைனா, நீ என்ன சொல்லப் போறேன்னு எனக்குத் தெரியும் நைனா. அந்தத் தகர டப்பாவிலே இருக்கிற பணம் தானே! அதைப் பத்தித்தானே?''

மாரியும் வேணியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். எத்தனை தைரியமாக நின்று கேட்கிறான்? மாரி முகத்தில் கடுமையை வரவழைத்துக் கொண்டான். ''ஏதுடா அம்புட்டுக் காசு?'' என, பாபு இந்த முறை சப்தமாகவே சிரித்தான்.

''அப்பாடி! அப்படிக் கேளுங்களேன்! நைனா, அது ஒண்ணும் திருட்டுப் பணம் இல்லை. களவாடின பொருள் இல்லை. உங்களை மாதிரியே





வேர்வையை வழிச்சுப் போட்டுச் சம்பாரிச்சது.''

ஒருகணம் அதிர்ந்து போய் நின்றனர் இருவரும்.

''என்னப்பா சொல்றே!'' என மாரி கேட்க,

''ஆமா நைனா! இந்த வருஷம் நான் பத்தாவது முடிக்கிறேன். அடுத்த வருஷம் ஸ்கூலிலே பதினொண்ணாவது சேரவே நிறையப் பணம் வேணும். நேரா டாக்டர், இஞ்ஜினியர்னு போனா அதுக்கு ரொம்ப நிறைய வேணும். அதுக்கெல்லாம் நம்மகிட்ட வசதி வேணுமா? தினமும் காலேல எழுந்து என் சிநேகிதன் வீட்டிலேபடிக்கிறேன்னு போறேனே, அப்ப அரை மணி நேரம் வீடுகளுக்கெல்லாம் பேப்பர், பாக்கெட் பால் போடறேன் நைனா. சாயந்தரமும் விளையாடப் போகாமே அந்தப் பெரிய மளிகை மண்டியிலே கணக்கு எழுதி முடிச்சுட்டுத்தான் வருவேன். அதுலே சேர்த்த பணம் தான் நைனா. இதுமட்டுமில்லே. மளிகை முதலாளி இந்த மாசத்திலேயிருந்து என் சம்பளத்தை அப்படியே பாங்கிலே போட்டு வைக்கப் போறார். நானும் ஒண்ணும் இரண்டுமாச் சேர்த்து இருபது முப்பதுன்னு அவருகிட்டத்தான் கொண்டு கொடுப்பேன். எல்லாம் பேங்கிலே இருக்கு. நான், நல்லாப் படிச்சு இந்த வருஷம் நிறைய மார்க் வாங்கினேன்னா, எனக்கு உபகாரச் சம்பளம் நிச்சயம் கிடைக்கும் நைனா. அதோட முதலாளியும் என்ன உதவி வேணும்னாலும் செய்யறேன்னு சொல்லியிருக்கார். என்னோட மேல் படிப்பைப் பத்திக் கவலையே படவேண்டாம் நைனா! உங்க பையன் நான் திருடுவேனா?'' என அவன் முடிக்க... ஓடி வந்து ஆளுக்கொரு பக்கமாகக் கட்டிக் கொண்டனர் அம்மாவும் அப்பாவும். கண்கலங்கி நின்றான் மாரி.

''பாபூ! தெரியாமே உன்னை அடிச்சுட்டேண்டா!''

''அதுக்கென்ன நைனா, கவலைப் படாதீங்க. நான் தப்பு செஞ்சா கண்டு பிடிச்சு, தண்டிச்சுத் திருத்த வேண்டியது உங்க கடமைதானே? அம்மா, பசிக்குதும்மா ரொம்ப...!'' என,

''என் ராசா! உனக்கில்லாமலா? வாப்பா! வாப்பா!'' — என பரபரவென்று உள்ளே ஓடும் தாயைப் பார்த்துச் சிரித்தபடியே தந்தையோடுநுழைந்தான் குடிசையினுள்.

ராஜாவுக்குத் தூக்கமே வரவில்லை. படுக்கையில் புரண்டு, புரண்டு படுத்தான். பின்னர் எழுந்து உட்கார்ந்தான். மனத்தை ஏதோ உறுத்தவே, திரும்பவும் படுக்கையில் படுத்தான். காலிலிருந்து தலை வரை போர்வையால் போர்த்திக் கொண்டான். அப்படியிருந்தும் தூக்கம் வரவில்லை.

ஊரெங்கும் நிசப்தமாக இருந்தது. திடீரென்று இரண்டு மூன்று நாய்கள் ஒன்றுக்கொன்று சண்டை போட்டுக் குரைக்கும் சப்தம் ராஜாவின் வயிற்றைக் கலக்கியது.

மெல்லப் போர்வையை விலக்கி விட்டுச் சுற்றும் முற்றும் பார்த்தான்.

அப்பா இன்னும் வரவில்லை என்று தெரிந்தது! கொஞ்சம் தள்ளிப் படுத்திருந்த தன் தாயைப் பார்த்தான்.

பாவம்! காலையிலிருந்து இரவு வரை தொடர்ந்து வேலை செய்ததனால், நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தாள்.

அப்போது —

சுவரிலிருந்த கடிகாரம் 'டிங் — டாண், டிங் — டாண்' என்று மணி அடிக்க ஆரம்பித்தது. ராஜா, மனத்திற்குள் எண்ணிப் பார்த்தான்.

சரியாக மணி பன்னிரண்டு! இன்னும் ஏன் அப்பா வரவில்லை? என்ற ஏக்கம் ராஜாவை மேலும் வாட்டத் துவங்கியது.

மெல்ல நகர்ந்து அம்மாவிடம் போனான். மெதுவாகத் தொட்டான். அசைத்தான்.

''அப்பா... எப்போம்மா வருவார்?''

''தெரியல்லியேடா...''

''சொல்லம்மா...''

''சும்மாத் தொந்தரவு பண்ணுதேடா. பேசாமத் தூங்கு...'' தூக்கத்திலேயும் ராஜாவை அதட்டினாள், பொன்னம்மாள்.

ராஜா விடுவதாக இல்லை. தாயின் கையை எடுத்து, அவள் விரல்களோடு தன் கைவிரல்களைப் பின்னிக் கொண்டு,

'இந்த அப்பாவுக்கு ஒண்ணுமே தெரியலை... நீ எவ்வளவு கஷ்டப்படறே? கொஞ்சமாவது புரியுதா? காலையிலேயும் வீட்டிலே இருக்க மாட்டேங்கிறாரு. ராத்திரியும் வீட்டுக்குச் சீக்கிரம் வரமாட்டேங்கிறாரு. 'தெருவிலே வெறிநாய் சொறி நாயெல்லாம் நிறைய இருக்கே! தனியே வந்தா அப்பாவைக் கடிச்சுட்டா... ஏன்தான் இப்படி இருக்காரோ...?'

பிஞ்சு மனம், தந்தையை நினைத்துக் கவலைப் படத்தான் செய்தது. இதை நினைத்துக் கொண்டே தாயின் பக்கத்தில் படுத்த ராஜா, அப்படியே தூங்கிப் போனான்!

அப்பாவின் கையொப்பம்

த.கி.இராமசாமி

''இதோ பாரு ராஜா... நீ நல்லாப் படிக்கணும். நிறைய மார்க் எடுக்கணும். பள்ளிக்கூடம் விட்டதும், நேராக வீட்டுக்கு வரணும். வீட்டுப் பாடத்தைத் தினந்தோறும் படிக்கணும். கெட்ட நண்பர்களோடு சேரக் கூடாது, உனக்கு என்ன வேணும்னாலும் எங்கிட்டே கேளு... வேறு யார் கிட்டேயும் கேட்காதே!''

—வேலைக்குப்போகும்முன்,ராஜாவுக்கு எல்லாம் செய்து கொடுத்து விட்டுப் பொன்னம்மாள் சொன்ன அறிவுரைதான் இது!

எல்லாவற்றிற்கும் தலையைத் தலையை ஆட்டினாலும், ராஜாவுக்கு 'பிராக்ரஸ் ரிப்போர்ட்டில் தந்தையின்

கையெழுத்து இல்லையே! தாய்தான் போட்டிருக்கிறுன். செவ்வந்தி பார்த்தால் என்ன சொல்லுவாள்? கேலி பண்ணுவாளே? அவளிடம் நேற்றைக்குச் சவால் விட்டோமே. எல்லாமே தோற்றுப் போயிற்றே!' என்ற ஏமாற்றம் பிடுங்கித் தின்றது.

வேறு வழியில்லாமல், அரை குறை மனத்தோடு பள்ளிக்குப் புறப்பட்டான் ராஜா!

ராஜாவின் தந்தைக்குக் கொஞ்சம் நிலபுலன்கள் இருந்தன. ஆனுல்போதுமான கல்வி இல்லை. இளம் வயது முதல் அரசியல் கட்சி ஒன்றில் அதிக நாட்டம் கொண்டு அலைந்ததனுல் — நிறையப் போராட்டங்களில் கலந்து கொண்டார். ஊரில் செல்வாக்கு இருந்தாலும், சொந்தத்தில் யாரும் பெண் கொடுக்க முன் வரவில்லை. எனவே 'சீர்திருத்தத் திருமணம்' என்ற முறையில், உள்ளூர் மில் ஒன்றில் வேலை பார்க்கும் ஏழைப் பெண் பொன்னம்மாளை மணந்து கொண்டார்.

அரசியலில் அதிகம் ஈடுபட்டதால், வீட்டிற்கு எப்பொழுதும் நேரம் கழித்துத்தான் வருவார். சில சமயம் பல நாட்கள் வராமலிருப்பதும் உண்டு. பொன்னம்மாளுக்கு இது ஒரு பெரிய குறைதான்! எனவேதான் ராஜா பிறந்ததும், அவனைத் தன் முழுப் பொறுப்பில் கண்ணும் கருத்துமாகக் கஷ்டப்பட்டு வளர்த்து வந்தாள்.

ராஜாவின் தந்தை இதைப் பற்றிக் கவலைப்படவே இல்லை. அவர் வேலையெல்லாம், இன்னும் சில மாதங்களில் வரப் போகும் தேர்தலில் எம். எல். ஏ.வாக நிற்க 'சீட்' கிடைப்பதற்காகச் சென்னைக்கும், கிராமத்திற்குமாக இராப் பகலாக அலைந்து கொண்டிருந்தார்.

ராஜாவின் பள்ளித் தோழி செவ்வந்தி, நன்ருகப் படிப்பவள் இரக்க குணம் உள்ளவள். ராஜாவின்



இருக்கைக்குப் பக்கத்தில் இருப்பாள், ராஜாவுடனேதான் விளையாடுவாள்; பழகுவாள். ராஜாவும், செவ்வந்தியும் உயிருக்குயிராகப் பழகி வந்தார்கள்.

''ஏண்டா ராஜா, உன் 'பிராக்ரஸ் ரிப்போர்ட்'லே' உங்கப்பா கையெழுத்தே காணோம்! எப்போ பார்த்தாலும் உங்கம்மா கையெழுத்துத்தானே இருக்கு!'' என்றாள் செவ்வந்தி.

''ஆமாம். எங்கம்மாதானே எனக்கு ஸ்கூல் ஃபீஸ் கட்டுறாங்க. யூனிஃபார்ம் எடுத்துத் தைக்கிறாங்க... அதனால்தான் எங்கம்மா கையெழுத்துப் போடுறாங்க...'' என்றான் ராஜா.

''போடா மண்டு. உங்கப்பாவுக்கு உன்னைக் கண்டால் பிடிக்கல்லே. அதுதான் கையெழுத்துப் போட மாட்டேங்கிறார்!''

செவ்வந்தியின் இந்தச் சொல், ராஜாவின் பிஞ்சு மனத்தை வேதனைப் படுத்தியது.


''போடி. நாளைக்குப் பாரேன்! எங்கப்பாவோடே கையெழுத்தோடே ஸ்கூலுக்கு வரேன்'' என்று செவ்வந்தியிடம் சவால் விட்டு; 'பிராக்ரஸ் ரிப்போர்ட்'டை வாங்கிக் கொண்டு வீட்டிற்கு வந்தான் ராஜா!

அதற்காகத்தான், என்றைக்குமில்லாமல் தந்தையின் வருகைக்காக இரவு முழுவதும் காத்திருந்தான். ஆனால், அழகமுத்து இரவு முழுவதும் என்ன? ராஜா பள்ளிக்குப் போகும் இந்த நிமிடம் வரை வீட்டிற்கு வரவே இல்லை.

ராஜா, செவ்வந்தியிடம் தோற்றுப் போனான்!

''இதுக்குப் போய் அழலாமா? நான் விளையாட்டுக்குத்தான் சொன்னேன்!'' என்று எவ்வளவோ செவ்வந்தி சொல்லிப் பார்த்தும், ராஜா சமாதானமடைவதாகத் தெரியவில்லை.

''எங்கப்பாகூட பாரு. பிஸினெஸ் விஷயமா கல்கத்தாவுக்குப் போயிருக்கார்., எங்க அம்மாதான் கையெழுத்துப் போட்டிருக்காங்க...'' என்று தன்னுடைய 'பிராக்ரஸ் ரிப்போர்ட்'டை எடுத்து ரா்ஜாவிடம் நீட்டினாள் செவ்வந்தி.



''உன் அண்ணன் பின்தங்கிய வகுப்பு; நீ, முன்னேறிய வகுப்பு என்கிறாயே! அது எப்படி?''

''அவன் படிப்பது ஆறாவது வகுப்பு. நான் படிப்பது ஏழாவது வகுப்பு.

ராஜா அதைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

'உண்மையிலே என்மீது எங்கப்பாவுக்குப் பிடித்தமே இல்லை. அதான் வீட்டுக்குக் கூட வர மாட்டேங்கறாங்க. ஸ்கூலுக்கு ஒரு நாளாவது எங்கூடக் கையைப் பிடிச்சுக்கிட்டு வந்திருக்காரா? என்ன பாடம் படிக்கிறேன்னு கேட்டிருக்காரா? நோட்டுப் புத்தகத்திற்கு அட்டை போட்டு லேபிள் ஒட்டிக் கொடுத்திருக்காரா?' ஸ்கூல் ஆனிவல் டே அன்றைக்கு 'ஹெட் மிஸ்ட்ரஸ்' எனக்குப் பிரைஸ் கொடுத்தாங்களே, அன்றைக்காவது வந்தாரா? எல்லோருடைய அப்பாவும், அம்மாவும் வந்திருந்தாங்களே! கமர்கட், மிட்டாய், ஐஸ் கிரீம்னு எல்லோரும் வாங்கிக் கொடுத்தாங்களே! ஒரு வேர்க்கடலை மிட்டாயாவது எனக்கு எங்கப்பா வாங்கிக் கொடுத்தாரா...? செவ்வந்தி சொல்றது சரிதான். எங்க அப்பாவுக்கு என்னைக் கண்டால் பிடிக்கவில்லைதான்!'

— என்ற முடிவுக்கு ராஜா வந்துவிட்டதனால், அவனுக்கு எதிலேயும் நாட்டமில்லை. அப்பாவை நினைத்து நினைத்து வருத்தப்பட்ட ராஜாவுக்கு அழுகைதான் வந்து கொண்டிருந்தது!.

செவ்வந்திக்கு ராஜாவின் அழுகை பயத்தை உண்டு பண்ணியது. 'நான் சொன்னது தப்பு. 'இனிமேல்

ராஜாவை அழவிட மாட்டேன்' என்று பிள்ளையார் கோயிலுக்குச் சென்று தோப்புக்கரணம் போட வேண்டும்' என்று முடிவெடுத்தான்.

திடீரென்று 'தேர்தல்' வந்துவிடவே அழகமுத்து தேர்தலில் குதித்தார். தெருத் தெருவாக அலைந்தார். பார்க்காத நபர்களைப் பார்த்தார். கும்பிடாத மக்களைப் பார்த்துக் கும்பிட்டார்.

யார்யாருக்கோ 'லெட்டர்' கொடுத்தார். எங்கு எங்கெல்லாமோ சுற்றினார்! போட்டி கடுமையாக இருந்ததனால், தினமும் கலாட்டா நடந்து கொண்டே இருந்தது.

ராஜாவின் தாயான பொன்னம்மாளுக்கு, தன் கணவரது செய்கை கொஞ்சமும் பிடிக்கவில்லை. 'எந்த நிமிஷத்தில் எது நடக்குமோ!' என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள்! எல்லாத் தெய்வங்களையும் வேண்டிக் கொண்டாள்!

ராஜாவுக்குத் தன் தந்தையை நினைத்தால் வெறுப்பாக இருந்தது. சுவரொட்டியில் தந்தையின் படத்தைப் பார்த்தான். தெருவில் செல்லும் பொழுது, எதிரே கட்சித் தொண்டர்களோடு ஜீப்பில், மைக்கைப் பிடித்துக் கொண்டு வரும் தந்தையை ஓரத்தில் நின்று பார்த்தான்.

"உங்கப்பா இன்னிக்கு எங்க வீட்டுக்கு வந்திருந்தாரே. நாங்களெல்லாம் ஒண்ணா உட்கார்ந்து சாப்பிட்டோமே" — என்று சேரியிலிருந்து வரும் சின்னக்கண்ணன் ராஜாவிடம் சொன்னான்.

"ஒருநாளாவது என் பக்கத்திலே உட்கார்ந்து என் அப்பா சாப்பிட்டிருப்பாரா? என் பக்கத்திலே படுத்துத் தூங்கியிருப்பாரா?' என்று அந்தப் பிஞ்சு மனம் வெம்பத்தான் செய்தது!

'அவர் எப்படிப் போனால் எனக்கென்ன?' என்று எண்ணிக் கொண்டான் ராஜா!

தேர்தலுக்கு முதல் நாள்.

ராத்திரி பத்து மணி இருக்கும். ராஜா அரைகுறைத் தூக்கத்தில் இருந்தான். யாரோ நாலைந்து நபர்கள் வாசற்கதவை அவசர அவசரமாகத் தட்டுகின்ற சப்தம் கேட்டது.

பாதித்தூக்கத்திலிருந்த ராஜாவின் தாய் பொன்னம்மாள், ஓடிப்போய்க் கதவைத் திறந்தாள்.

அங்கே —

ராஜாவின் தந்தை கையில் பெரிய கட்டுப் போட்டுக் கிடப்பதையும், அவரை சிலர் மெள்ளத் தூக்கிக் கொண்டு உள்ளே நுழைவதையும் கண்டு, பொன்னம்மாள் 'ஐயோ' என்று வீறிட்டுக் கத்தினாள்.

தாயின் கத்தல்—ராஜாவை எழுப்பி விட்டது. படுக்கையிலிருந்து பதறி எழுந்த ராஜா சுற்றும்முற்றும் பார்த்த பொழுது, எல்லாமே விளங்கி விட்டது. நீண்ட நாட்கள் கழித்து — இப்போதுதான் தன் தந்தையை வீட்டில் பார்க்கிறான் ராஜா! அதுவும், அடிபட்டு, கட்டுப் போட்ட கரத்தோடு!

மெதுவாகக் கட்டிலில் கிடத்தினார்கள், கூட வந்தவர்கள்!

தேர்தல் விரோதம். அழகமுத்துவின் கைவிரல்கள் அரிவாளால் சிவப்பட்டு விட்டன. மறுநாள் தேர்தல். அதனால் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகாமல், தெரிந்த இடத்தில் கட்டுப் போட்டு, வீட்டிற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். தேர்தலில்,


"நமது ராஜகுரு, நம் அரசிளங்குமரனை தன் குருகுலத்தில் சேர்த்துக் கொள்ள மறுக்கிறார்."

"ஏனாம்?"

"பத்தாயிரம் பொற்காசுகள் டொனேஷன் வேணுமாம்."

— சுதர்ஸன்





அழகமுத்துவின் கைவிரல்கள் சிவப் பட்டணத்தைக்கூறிக்கூறியே அதிகவாக்கு கள் பெற்று விடலாம் என்பது அவர் கள் திட்டம்.

தேர்தலில் அழகமுத்து ஜெயித்து விட்டார்!

வீட்டில் இருந்த அவரைத் தேடி ஏகப்பட்ட கூட்டம். மாலையென்ன, மரியாதை என்ன, கோஷம் என்ன, கொடி தோரணம் என்ன?

எல்லோரும் வந்தார்கள். குசலம் விசாரித்தார்கள்.

ஆனால் —

ராஜா தன் தந்தையின் பக்கம் எட்டிக் கூடப் பார்க்கவில்லை! இன் றோடு மூன்று நாட்கள் ஓடிவிட்டன. வீட்டில் இருக்கும் தன்னிடம் ராஜா ஒரு முறை கூட வரவில்லையே என்று மெள்ள மெள்ள உணரத் தொடங் கினார் அழகமுத்து எம். எல். ஏ.

கூப்பிட்டுப் பார்த்தார்.

ராஜா வரவில்லை!

பொன்னம்மாள் மூலம் சொல்லிப் பார்த்தார்..

ராஜா நழுவி விட்டான்.

ஊரெல்லாம் தன்னைத் தேடி ஓடி வரும்பொழுது, தன் மகன் மட்டும் ஏன் வரவில்லை? என்ற கேள்வி அவ ருக்கு விஸ்வரூபமாக எடுத்தது. இது அழகமுத்துவின் மனத்தைக் குடைய வும் செய்தது!

ராஜாவிடம் பாசம் வைக்க வேண் டும்! 'அவனை அணைத்து 'முத்தம்' கொடுக்க வேண்டும். உச்சி முகர வேண்டும் என்று அவருக்கு மனசு துடித்தது. அதிகாரத்தால் அன்பு வளராது — என்பது அழகமுத்துவுக் குத் தெரியும்! என்ன செய்யலாம் என்று யோசிக்கும்பொழுது, பக்கத்து அறையில் ராஜாவும் செவ்வந்தியும் பேசிக் கொண்டிருப்பது அவர் காதில் விழுந்தது.

"செவ்வந்தி, எங்கப்பாவாலே இனிமேல் கையெழுத்தே போட முடி யாது போலிருக்கே"

"ஏன்?"

''அவருக்குத்தான் வலது கையிலே அஞ்சு விரலும் போயிடுத்தாம்! எழுதவே முடியாதாம். எல்லோரும் சொல்லிக்கிறாங்க.''

''ஐய்யய்யோ... அப்படியா!''

''விரல்கள் போனது எனக்கும் வருத்தம்தான்... ஆனால்... விரல் இருக்கும் போது மட்டும் என் பிராக்ரஸ் ரிப்போர்ட்ல கையெழுத்துப் போட்டாரா? ஸ்கூலுக்கு என் கையைப் பிடிச்சு அழைச்சுட்டுப் போனாரா?''

''இப்போ என்னடா பண்ணப் போறே? இந்த மாசம் பிரகூக்ரஸ் ரிப்போர்ட் கொடுத்திருக்காங்களே.''

''அம்மாகிட்டேதான் வாங்கப் போறேன். எனக்கு எல்லாமே அம்மாதானே!''

''ராஜா, உன்னைப் பார்க்கப் பாவமா இருக்குடா. எங்க வீட்டிலே எல்லாமே எனக்கு அப்பாதான் செய்வார்.''

''உனக்கென்ன செவ்வந்தி. நீ கொடுத்து வைச்சவ. அடுத்த தடவை நான் உங்க வீட்டிலே வந்து பிறக்கணும் போல இருக்கு.''

ராஜாவின் இந்த வார்த்தை அழகமுத்துவை அதிர்ச்சியடையச் செய்து விட்டது! 'ராஜாவின் மனத்தில் இப்படியொரு ஏக்கமா? ஊருக்கெல்லாம் உழைக்கிறோமே — ராஜாவுக்காக நாம் ஒன்றுமே செய்யவில்லை என்பது இப்போதுதானே புரிகிறது! இந்தப் பிஞ்சு மனத்தில் இனிமேலும் ஏக்கத்தை வளரவிடக் கூடாது! இதை இன்றே ராஜாவிற்கு எடுத்துக் காட்டணும்! அவன் மீது அன்பு பொழியணும். பாசத்தைக் காட்டணும், அவனது ஏக்கம் ஒரு ஆலமரம் போல் பின்னால் வளர்ந்துவிடக் கூடாது!'

— அழகமுத்து பரபரவென்று துடித்தார்!

''ராஜா'' — என்று அன்போடு அழைத்தபடி அவனருகே சென்றார்! ஆசையாக அணைத்தார்! உச்சி முகர்ந்தார்.

ராஜாவுக்கு இது ஆச்சரியமாக இருந்தது.

செவ்வந்திக்கும் வியப்பாகப் போயிற்று!


''ராஜாக் கண்ணு. உன் பிராக்ரஸ் ரிப்போர்ட்டை எடுத்துட்டு வா. நான் கையெழுத்துப் போடறேன். இனிமேல் உனக்கு எல்லாமே நான்தாண்டா!'' என்று ஆனந்தப் பெருக்கினால் கண்ணீர் விட்டார்.

அதோடு மட்டுமில்லாமல், ராஜாவின் பிராக்ரஸ் ரிப்போர்ட்டில் 'தம் இடது கையினால் கையெழுத்துப் போட்டும் கொடுத்தார் அழகமுத்து.

இதைத் தள்ளி நின்று பார்த்துக் கொண்டிருந்த ராஜாவின் தாய் பொன்னம்மாளுக்கு மகிழ்ச்சியால் உள்ளம் பூரித்தது.







அந்த வீட்டின் இருபுறமும் வாழை மரங்கள் 'வருக, வருக' என்று வரவேற்புக் கூறுவதுபோல் நின்றன. அந்தத் தெரு முழுதும் தோரணங்கள், காற்றிலே அசைந்து அசைந்து ஆனந்த நடனமாடிக் கொண்டிருந்தன. நாகஸ்வர இசை நாலாபக்கமும் பரவி, இனியதொரு நிகழ்ச்சி நடைபெறப் போகிறது என்பதை எடுத்துக் கூறிக் கொண்டிருந்தது.

அந்த வீட்டின் தலைவர் பெயர் மானக்கஞ்சாறர் என்பது. சிறந்த சிவ பக்தர். அவர் சோழ அரசர்களின் சேனாதிபதியாக இருந்தவர்களின் பரம்பரையில் தோன்றியவர். செல்வந்தரான அவர், பிறருக்கு உதவுகின்ற பெரு மனம் உடையவர். சிவனடியார்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுப்பதிலே ஆனந்தம் அடைபவர்.

அவருக்கு நீண்ட நாட்களாகக் குழந்தை இல்லாதிருந்தது. இறைவனை நாள்தோறும் வேண்டினார். இறைவன் திருவருளால், அவருக்கு ஓர் அழகான பெண் குழந்தை பிறந்தது.

குழந்தையை மிகச் சீரும் சிறப்புமாக வளர்த்து வந்தார். குழந்தையும் தந்தையைப் போலவே கடவுள் பக்தியுடன் வளர்ந்து வந்தது; கல்வியில் சிறந்து விளங்கியது.

அந்தக் குழந்தை பெரியவளாகித் திருமண வயதை அடைந்தாள். அவளது அழகையும் அறிவையும் சிவ பக்தியையும் கண்ட ஏயர்கோன் கலிக்காமநாயனார் என்பவர் அவளைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினார். பெரியவர்களை அனுப்பிப் பெண் கேட்டார். கலிக்காம நாயனார் மிகவும் நல்லவர், ஒழுக்கமுள்ளவர், சிவபக்தி உடையவர் என்பதையெல்லாம் பெண்ணின் தகப்பனார் முன்பே அறிந்திருந்ததால், மகிழ்ச்சியுடன் இசைந்தார்.

அந்தத் திருமணம்தான் இன்னும் சில மணி நேரங்களில் நடைபெறவிருக்கிறது.

மணமகனும் அவரது உறவினர்களும் மணப் பெண் ஊராகிய கஞ்சாறூர் வந்து சேர்ந்துவிட்டார்கள். இன்னும் சிறிது நேரத்தில் மணப் பெண் வீட்டிற்கு வந்துவிடுவார்கள்.

இதற்குள் அங்கு வந்து சேர்ந்தார் ஒரு சிவனடியார். அவர் உடம்பு முழுவதும் திருநீறு பூசியிருந்தார். நெற்றியில் பளிச்சென்று மூன்று திருநீற்றுப் பட்டைகள். குடுமியின் நுனியில் எலும்பினாலான மணி. காதில் வெள்ளை எலும்பாலான குண்டலம். மயிர்க்கற்றையாலான பூணூலை அவர் அணிந்திருந்தார்.

அவரைக் கண்டதும், 'ஆஹா! நம் மகள் திருமணத்திற்கு இத்தகைய மகான் வந்திருக்கிறாரே!' என்று அவர் திருவடியில்விழுந்து வணங்கிமகிழ்ச்சியோடு வரவேற்று, உள்ளே அழைத்துச் சென்றார், மானக்கஞ்சாறர்.

உடனே, மணக்கோலத்தில் இருந்த தன் மகளை வரவழைத்தார். மணப்பெண் அவரது காலடியில் விழுந்து வணங்கினாள்.

அப்போது அவளது 'கருகரு' என்று நீண்ட வளர்ந்திருந்த கூந்தலை அச்சிவனடியார் கண்டார். உடனே மானக்கஞ்சாறரைப் பார்த்து, ''இப்பெண்ணின் கூந்தல் கிடைத்தால் நம்முடைய பஞ்சவடிக்குப்பயன்படுமே'' என்றார்.

(பஞ்சவடி என்பது மயிரினாலே அகலமாகச் செய்யப்பட்டு மார்பிலே பூணூலாக அணியப்படுவது.)

''இந்தத் திருமண நன்னாளில் மணமகளின் கூந்தலைக் கேட்கிறாரே! என்னே அநியாயம்!'' என்று எல்லாருமே எண்ணித் திடுக்கிட்டார்கள். ஆனால், மானக்கஞ்சாறர் அப்படி நினைக்கவில்லை. உடனே வாளை எடுத்தார். தன் மகளின் கூந்தலை அடியோடு அரிந்தெடுத்து, சிவனடியாரின் முன் நீட்டினார்.

அதை வாங்குவதற்காகக் கையை நீட்டிய சிவனடியார் திடீரென்று அங்கிருந்து மறைந்துவிட்டார். உடனே வானத்திலிருந்து, ''உன் அன்பை உலகறியச் செய்தோம்'' என்ற குரல் கேட்டது. நிமிர்ந்து பார்த்தபோது சிவபெருமான் பார்வதி தேவியாருடன் காட்சி அளித்து வாழ்த்துக் கூறினார்.

அதேசமயம் மணப் பெண்ணின் கூந்தலும் முன்போல் வளர்ந்திருப்பதைக் கண்டு எல்லாரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

சிறிது நேரத்தில் மணமகன் கலிக்காம நாயனாரும் அவரது உறவினர்களும் அங்கு வந்து சேர்ந்தனர். நடந்ததை அறிந்து வியப்படைந்தனர். இறைவன் திருவருளை எண்ணி எண்ணிப் பூரிப்பு அடைந்தனர்.

மூங்கில்

காரைமணி



குத்துக் குத்தாய் வளர்ந்து மூங்கில்
குலுங்கி நிற்குது! — நுனி
குதிரைவாலைப் போல்தழைத்துக்
கவரி வீசுது!


கொத்துப் பச்சை இலைகள் நெஞ்சைக்
கொள்ளை கொள்ளுது! — ஆட்டுக்
கொம்பு போன்ற முட்கள் கண்ணைக்
கூர்ந்து கவருது!

வலிய காற்றில் வளைந்து கொடுத்து
வாழ்வை நடத்துது! — உலகில்
வாழும் முறைமை இதுதா னென்று
வரைந்து காட்டுது!

எளிய குருவி ஏறி யாட
ஊஞ்ச லாடுது! — அந்த
இறைவன் தந்த எழிலை எல்லாம்
எடுத்துப் பேசுது!

ஜனாதிபதிகளின் கதை

ஜானகிமணாளன்



குழந்தைகளே! நமது நாடு ஒரு குடியரசு நாடு. அதாவது, நம்மை, நாமே, நமது பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவர் மூலம் ஆண்டு கொள்கிறோம். அந்தத் தலைவர் யார் தெரியுமா?

அவர்தான் பாரத ராஷ்டிரபதி. அவரை ஜனாதிபதி, குடியரசுத் தலைவர் என்றும் அழைப்போம். அவர்தான் இந்திய யூனியனின் மிக உயர்ந்த நிர்வாகத் தலைவர்.

இந்தியக் குடிமகன் யாராக இருந்தாலும் சரி — ஏழை — பணக்காரன், ஆண் — பெண், படித்தவர் — படிக்காதவர் போன்ற எந்த ஏற்றத் தாழ்வும் இன்றி, — இப்பதவிக்குப் போட்டியிடலாம். ஆனால், அவருக்கு முப்பத்தைந்து வயது நிரம்பியிருக்க வேண்டும். மத்திய — மாநில அரசு எதிலும் ஊதியம் பெறும் அலுவலராக இருக்கக் கூடாது.

இவரைத் தேர்ந்தெடுப்பது யார் தெரியுமா? நாடாளுமன்றத்தின் இரு சபைகளின் உறுப்பினர்களும், மாநிலச் சட்டமன்றக் கீழ் சபையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும்தான்.

ஜனாதிபதியின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகள்.

சரி குழந்தைகளே! நமது நாட்டில் இந்தக் குடியரசு ஆட்சி முறை எப்போது, எப்படி ஏற்பட்டது தெரியுமா?

ஆங்கிலேயர் நமக்கு விடுதலை கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போதே, நமக்கு எத்தகைய ஆட்சியை வழங்கலாம் என்பதை முடிவு செய்வதற்காக ஒரு சபை அமைக்கப்பட்டது. அதற்கு அரசியல் நிர்ணயசபை என்று பெயர். அதன் தலைவர் பாபு ராஜேந்திர பிரசாத்.

அச்சபையின் முடிவுப்படிதான் இங்கு குடியரசு ஆட்சி முறை அமைக்கப்பட்டது. அந்தச் சபையின் தலைவராக இருந்த பாபு ராஜேந்திர பிரசாத்தைப் பாரதத்தின் முதல் குடியரசுத் தலைவர் ஆக்கினர்.

இந்த ஆட்சி முறை எப்போது அமல் செய்யப்பட்டது தெரியுமா? 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் நாள். அதை நாம் ஆண்டுதோறும் 'குடியரசு தின'மாகக் கொண்டாடி வருகிறோம்.





டாக்டர் பாபு ராஜேந்திரப் பிரசாத்: (1884 – 1963) இவர் நமது பாரதத்தின் முதல் குடியரசுத் தலைவர். 1950 ஜனவரி 26 ஆம் நாள் பதவி ஏற்றார். 1962 வரை அப்பதவியில் இருந்தார்., நீண்ட நாள் பதவி வகித்தவர். அப்பதவிக்கு ஒரு மதிப்பும் மரியாதையும் ஏற் படுத்தியவர். விடுதலைப் போரில் தீவிரமாக ஈடுபட்டவர். மக்களுக்காகத் தம்மை அர்ப்ப ணித்துக் கொண்டவர். உயர்ந்த பதவியில் இருந்த போதிலும் கூட,எளிமையாக வாழ்ந் தவர். அவர் பதவி விலகிய தினத்தன்று 1962 இல், இந்தியத் தபால் துறை, இவர் உருவத்தைத் தபால் தலையில் வெளியிட்டுக் கௌரவித்தது.



டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்: (1888 – 1975) இவர் பாரதத்தின் இரண் டாவது குடியரசுத் தலைவர். சர்வபள்ளி ராதா கிருஷ்ணன் என்போம். 1962 இல் குடியரசுத் தலைவர் ஆனார். இவர் ஒரு தத்துவஞானி. சிறந்த எழுத்தாளர். மேற்கு – கிழக்குத் தத்து வங்களை இணைக்கும் பாலமாகத் திகழ்ந்தார். இந்தியப் பண்பாட்டின் உயர்வை நிலைநாட்ட முயன்றார். இவரை நினைக்கும் போது, நமது பண்டைய முனிவர்களின் நினைவுதான் வரும். ஐந்தாண்டு காலம் இந்த உயர் பதவியில் இருந்த பிறகு 1967 இல் ஓய்வு பெற்றார். 1967 இல் இவரது பிறந்த தினமான செப்டம்பர் 5 ஆம் நாள், இவரைக் கௌர வித்துத் தபால் தலை வெளியிடப்பட்டது. நாம் இவரது பிறந்த தினத்தை ஆசிரியர்கள் தின மாக ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறோம்.



டாக்டர் ஜாகிர் ஹுசேன்: (1897 – 1969) இவர் நமது மூன்றாவது ஜனாதிபதி. 1967 மே மாதம் பதவி ஏற்றார். இவரால் ஜனாதிபதி பதவி யின் மதிப்பு மேலும் உயர்ந்தது. இவர் ஒரு தலைசிறந்த கல்வியாளர். டில்லி, ஜாமியா மிலியா இஸ்லாமியா கல்விக் கழகம் இன்றும் இவரது புகழை எடுத்தியம்புகிறது. இவர் இப் பதவியில் இரண்டே ஆண்டுகள்தான் இருந் தார். 1969 மே மாதம் 3 ஆம் நாள் திடீரென்று மறைந்துவிட்டார். அதே ஆண்டு ஜூன் 11 ஆம் நாள், இவருக்கு அஞ்சலியாக ஒரு தபால் தலை வெளியிடப்பட்டது. அதில், இவர் ஜனாதி பதியின் ஆசனத்தில் அமர்ந்திருப்பது போல் சித்திரம் அமைந்துள்ளது.

திரு. வி. வி. கிரி: (1894 – 1980) இவர்



பாரதத்தின் நான்காவது குடியரசுத் தலைவர். முழுப் பெயர் வராககிரி வேங்கடகிரி என்பது. இவர் 1969 ஆகஸ்ட் 23 ஆம் நாள் பொறுப்பேற்றார். ஐந்து ஆண்டுகள் பதவியில் இருந்த பிறகு 1974 ஆகஸ்ட் 22 ஆம் நாள் ஓய்வு பெற்றார். இவர் ஒரு தலைசிறந்த தேசத் தலைவர். தூய்மையான அரசியல்வாதி. தொழிலாளர்களின் தலைவர். விடுதலைப் போரின் போதும் சரி, விடுதலைக்குப் பிறகும் சரி, இவரது பணி மகத்தானது. உயர்ந்த பதவியில் இருந்த போதிலும், எளிய வாழ்வு வாழ்ந்தவர். இவரைக் கௌரவித்து 1974 ஆகஸ்ட் 24 ஆம் நாள் ஒரு தபால் தலை வெளியிடப்பட்டது.



திரு ஃபக்ருதீன் அலி அகமது: (1905 - 1977) இவர் நமது நாட்டின் ஐந்தாவது ஜனாதிபதி. 1974 ஆகஸ்ட் 24 ஆம் நாள் பொறுப்பேற்றார். ஆனால், இரண்டரை ஆண்டுகள்தான் பதவியில் இருந்தார். 1977 பிப்ரவரி 11 ஆம் நாள் திடீரென்று மறைந்து விட்டார். இவரது பதவிக் காலம் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒன்று. நாட்டில் பிரச்சினைகளை நிதானமாகவும், தைரியத்துடனும் கையாண்டார். 1977 மார்ச் 22 ஆம் நாள் இவருக்கு அஞ்சலியாக ஒரு தபால் தலை வெளியிடப்பட்டது. அதில், இவர் பதவியில் இருக்கும் போதே மறைந்த காரணத்தால், ஜனாதிபதி ஆசனத்தில் அமர்ந்திருப்பது போன்ற சித்திரம் காணப்படுகிறது.



திரு நீலம் சஞ்சீவி ரெட்டி: பிறப்பு 1913. இவர் நமது நாட்டின் ஆறாவது குடியரசுத் தலைவர். 1977 ஜூலை 25 ஆம் நாள் பதவிப் பொறுப்பேற்றார். ஐந்து ஆண்டுகள் பதவியில் இருந்த பிறகு, 1982 ஜூலை 24 ஆம் நாள் ஓய்வு பெற்றார். இவரது பதவிக் காலம் மிகுந்த நெருக்கடியான கால கட்டம். ஜனதா என்ற புதிய அரசியல் கட்சி தோன்றி ஆட்சியைப் பிடித்தது, இவர்காலத்தில்தான். எனினும்விரைவில் அந்த அரசு பதவி இழந்தது. இவர் காலத்தில் மூன்று பிரதமர்கள் ஆட்சியில் இருந்தனர். எனினும், இவர் நிதானம் தவறாமல், துணிவுடன் செயலாற்றினார்.

திரு ஜைல்சிங்: இவரது பிறப்பு 1916. இவர் நமது ஏழாவது ஜனாதிபதி. இவர் 1982 ஜூலை 25 ஆம் நாள் பொறுப்பேற்றார். ஐந்தாண்டுகளுக்குப் பிறகு, இவ்வாண்டு ஜூலை 24 ஆம் தேதியுடன் இவரது பதவிக் காலம் முடிவடைந்தது. இவரது பதவிக் காலத்தில், நாட்டில் பல்வேறு பிரச்சினைகள். எங்கு பார்த்தாலும் வன்



முறைகள். குறிப்பாக பஞ்சாப் பிரச்னையைக் கூறலாம். அதன் உச்சகட்டமாகப் பிரதமர் இந்திராகாந்தி சுட்டுக் கொல்லப்பட்டார். எனவே, இவரது பதவிக் காலத்தில் இரண்டு பிரதமர்கள்.

எட்டாவது ஜனாதிபதி: குழந்தைகளே! இந்த இதழ் 'கோகுலம்' உங்கள் கைக்குக் கிடைக்கும் போது எட்டாவது ஜனாதிபதி யார் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். செய்தித் தாள்களில் அவரது புகைப்படங்களைக் கண்டிருப்பீர்கள்; அவரைப் பற்றிய விவரங்களைப் படித்திருப்பீர்கள்.

இவருடைய காலத்திலாவது நாட்டில் வன்முறைகள் ஒழிந்து, வறுமை, வறட்சி, வெள்ளம் போன்ற துன்பங்கள் நீங்கி, மக்கள் அமைதியாக, வளமாக, மகிழ்ச்சியாக வாழ இறைவன் திருவருள் புரிவாராக!

(அலெக்சாண்டர் மாமன்னர் பற்றிய ஒரு கர்ண பரம்பரைக் கதை)

அலெக்சாண்ட மாமன்னர் பலவித வீரங்களைக் காட்டியவர். அவர் ஒரு சமயம் படுத்த படுக்கையாக இருந்தார். அவர் இன்னும் இரண்டொரு நாட்களில், தாம் இறந்துவிடப் போவதாகவும், தமக்கெனச் சவப்பெட்டி செய்து கொண்டு வரும்படியாகவும், தாம் அதைப் பார்க்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

"மாமன்னரே, இறந்ததற்குப் பின்னால் செய்ய வேண்டிய சவப்பெட்டியை இப்போதே செய்யச் சொல்கிறீர்களே" என்றார் அமைச்சர்.

"நான் மன்னன் சொல்கிறேன், செய்யச் சொல்லுங்கள்," என்றார்.



மன்னரின் பேச்சுக்கு மறு பேச்சேது?

சவப்பெட்டியும் தயார் செய்யப்பட்டு, அலெக்சாண்டரின் முன்னே வைக்கப்பட்டது.

உடனே அமைச்சரை அழைத்து, அந்தச் சவப்பெட்டியின் மேல் பகுதியில், இரண்டு பெரிய துவாரங்கள் அமைக்கும்படியாக உத்தரவிட்டார் மன்னர்.

அதற்கும் அமைச்சர், "மாமன்னரே, தாங்கள் அறியாததொன்றுமில்லை; சவப்பெட்டியில் ஓட்டைகளே இருக்கக்கூடாதே" என்றார்.

மறுபடியும் மன்னர், "மன்னன் நான் சொல்கிறேன், உடனே அதை நிறைவேற்றுங்கள்" என்றார்.

அவர் உத்தரவுப்படி மேல் பக்கம் இரண்டு பெரிய துவாரங்கள் அமைக்கப்பட்டன.

அவருடைய அந்திமகாலம் நெருங்கியது. அலெக்சாண்டர் அமைச்சரை அழைத்து, "நான் இறந்த பிறகு என்னை இந்தச் சவப்பெட்டியில் போட்டு, மக்கள் நடுவே எடுத்துச் செல்வீர்கள். எல்லோரும் இதைப் பார்ப்பார்கள். இந்தச் சவப்பெட்டியின் மேலே இருக்கும் இரண்டு துவாரங்கள் வழியாக எனது இரண்டு கைகளையும் வெளியே தெரியும்படி வைத்துக் கொண்டு செல்லுங்கள். எவ்வளவு பெரிய மாமன்னனென்றாலும், போகும்பொழுது கொண்டு செல்வது யாதொன்றுமில்லை என்பதைக் காட்டுவதற்காகவே கைகள் இரண்டையும் வெளியே தெரியும்படியாக வைக்கச் சொன்னேன்" என்றாராம் அலெக்சாண்டர்.

— கருவை வேணு.



கோதண்டம் எனக்கு நெருங்கிய நண்பர். அவரது மகன் இளங்கோ பத்தாம் வகுப்பில் படிக்கிறான். இருவரும் ஒருநாள் என்னைச் சந்திக்க வந்தார்கள். எங்கள் சந்திப்பை இங்கே தருகிறேன். படியுங்கள் —

கோதண்டம், இளங்கோ (இருவரும்): வணக்கம், டாக்டர்.

நான்: வணக்கம், வாங்க கோதண்டம். உட்காருங்க.

கோதண்டம்: இளங்கோவுக்கு இரண்டு நாட்களாய் வயிற்று வலி. கடையிலே மாத்திரை வாங்கிக் கொடுத்தேன். கேட்கலே... அதான் உங்ககிட்டே காண்பிக்கலாம்னு வந்தோம்.

நான்: அப்படியா! வயிற்று வலிக்கு என்ன காரணம்னு கண்டுபிடிப்போம். அதற்கேற்ப மருந்து கொடுத்தால், சரியாகிப் போயிடும்... (சொல்லிக் கொண்டே இளங்கோவை முழுமையாகப் பரிசோதிக்கிறேன். பின்பு மாத்திரைகளை எழுதிக் கொடுக்கிறேன்.)

இளங்கோ: வயிற்று வலி எதனால் வருகிறது, டாக்டர்? நான் தெரிஞ்சுக்கலாமா?

நான்: தாராளமாகத் தெரிந்து கொள்ளலாம். வயிற்றுவலி பல காரணங்களினால் வருகிறது. அக்காரணங்களை வயதுவாரியாகச் சொல்கிறேன். கேள் —

புட்டிப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கு வயிற்றுவலி வரலாம். அதற்குக் காரணம் புட்டியிலிருந்து பாலை உறிஞ்சிச் சாப்பிடும் போது பாலோடு காற்றையும் உறிஞ்சிவிடும். அக்காற்று வயிற்றை உப்பச் செய்து, குழந்தைக்கு வயிற்று வலியை உண்டாக்கிவிடும்.

இதே மாதிரி தவழும் குழந்தைகளுக்கு வயிற்றுவலியும் வயிற்றுப் போக்கும் ஏற்படலாம். காரணம் — குழந்தைகள் தவழும் போது தரையில் கிடக்கும் தூசு, குச்சி, பேப்பர் போன்றவற்றை எடுத்து விழுங்கிவிடும். அவை வயிற்று வலியை உண்டாக்கும்.

சில குழந்தைகளுக்குப் பாலில் உள்ள 'லாக்டோஸ்' (Lactose) என்ற சர்க்கரைப் பொருள் ஒத்துக் கொள்ளாது. அதனால்கூட வயிற்றுவலியும் வயிற்றுப் போக்கும் வரலாம்.

இளங்கோ: என்னை மாதிரி சிறுவர்களுக்கு எதனால் வயிற்றுவலி வருகிறது, டாக்டர்?

நான்: அதையும் சொல்கிறேன், கேள். உன்னை மாதிரி சிறுவர்களுக்கு வயிற்றுவலி வருவதற்கு முதல் காரணம் அஜீரணம்தான். வீட்டில் ருசியாக ஏதாவது பண்டங்கள் செய்து விட்டால் போதும், வழக்கத்தை விட அதிகமாகச் சாப்பிட்டு விடுவார்கள். அளவுக்கு அதிகமானால் அமிர்தம் கூட நஞ்சுதானே! அந்த அளவுக்கு மீறிய சாப்பாட்டை ஜீரணிக்க முடியாமல் வயிற்றுவலியால் அவதிப்படுவார்கள்.

அதே மாதிரி சாப்பிடும் உணவில் விஷக் கிருமிகள் இருந்தாலும் வயிற்றுவலி வரலாம். சில வீடுகளில் சமைத்த உணவைச் சரியாக மூடிப் பாதுகாக்கத் தவறிவிடுகிறார்கள். அவ்வுணவில் ஈக்கள் மொய்க்கும் போது பாக்டீரியா, வைரஸ் கிருமிகள் உணவில் ஒட்டிக் கொள்ளும். பிறகென்ன, வயிற்றுவலி, அவர்களுக்கு வரப்பிரசாதம்தான்!

நாம் குடிக்கும் தண்ணீரில் அமீபா, காலரா, போன்ற கிருமிகள் இருந்தாலும் வயிற்றுவலி வரும்., கூடவே வயிற்றுப்போக்கும் சீதபேதியும் துணைக்கு வரும்.

சிறுவர்களுக்குக் குடல் புழுக்கள் (worms) இருந்தாலும் இரவு நேரங்களில் வயிற்றுவலி வரும்.

கோதண்டம்: சரி, டாக்டர். பெரியவர்களுக்கு எதனால் வயிற்று வலி வருகிறது? அதையும் கொஞ்சம் சொல்லுங்களேன்...?

நான்: பெரியவர்களுக்கு — குறிப்பாக முப்பது வயதைத் தாண்டியவர்களுக்கு — வயிற்றுவலி வருவதற்கு முதல் காரணம் வயிற்றுப் புண்தான். நேரம் தவறி உணவு உண்பவர்களுக்கும், காரமாக உணவு உண்பவர்களுக்கும், மது உபயோகிப்பவர்களுக்கும், இரைப்பையில் அமிலத்தன்மை அதிகமாகி வயிற்றுப்புண் உண்டாகும். இதை 'அல்ஸர்' என்று சொல்வார்கள். வயிற்றில் உணவு இல்லாமல் காலியாக இருக்கும் போது வலி அதிகமாகும். உணவு உண்டதும் வலி குறையும். பிறகு சில மணி நேரங்களில் மீண்டும் வலி ஏற்படும்.

அடுத்தபடியாக 'அப்பெண்டிசைட்டிஸ்' (Appendicitis) என்றழைக்கப்படும் குடல்வால் அழற்சி நோயிலும் வயிற்று வலி. வரும். இந்நோயில் தொப்புளைச் சுற்றி முதலில் வலி எடுக்கும். சில மணி நேரங்களில் வயிற்று வலி வலப்பக்கம் நகர்ந்து வலப்பக்க அடிவயிற்றில் தொடர்ந்து நிலையான வலி உண்டாகும். காய்ச்சல், வாந்தி, மலச்சிக்கல் போன்றவை அதன்பின் வரக் கூடிய அறிகுறிகள். இந்தக் குடல்வால் நோய் குழந்தைகளுக்கும் வரக் கூடியது.

'டிசென்ட்ரி' எனப்படும் சீதபேதியிலும் வயிற்றுவலி உண்டாகும். சிலருக்குக் குடல் வீக்கம், குடல் அடைப்பு,குடல் புற்றுநோய், கல்லீரல் வீக்கம் போன்றவற்றால் வயிற்றில் வலி ஏற்படலாம்.

பித்தப்பை, சிறுநீர்ப்பை, ஆகியவற்றில் கல் இருந்தாலும் வயிற்று வலி வரலாம்.

தவறுதலாக விஷம் சாப்பிட்டால் கூட வயிற்றுவலி வரும்.

கோதண்டம்: வயிற்றுவலி வருவதற்கு இத்தனை காரணங்கள் இருக்கும் போது, கடைகளில் வயிற்று வலி மாத்திரை என்று சொல்லிச் சில பொதுவான மாத்திரைகளைக் கொடுக்கிறார்களே... அவற்றைச் சாப்பிடலாமா டாக்டர்?

நான்: நல்ல கேள்வி, கோதண்டம்! வயிற்று வலிக்குச் சில பொதுவான மாத்திரைகள் இருக்கின்றன. அவற்றைச் சாப்பிட்டால் சில மணி நேரங்களுக்குவேண்டுமானால்வயிற்று வலி குறையும்; பிறகு திரும்பவும் வலிக்க ஆரம்பிக்கும். காரணம்என்னவென்றால், வயிற்றுவலி என்பது ஒரு நோயின் வெளிப்பாடு. அது சாதாரண நோயாகவும் இருக்கலாம். மிகக் கொடிய நோயாகவும் இருக்கலாம். வயிற்று வலிக்கு அடிப்படைக் காரணத்தைக் கண்டுபிடித்து அதற்கேற்ப மருந்து சாப்பிட்டால்தான் வயிற்று வலி பூரண குணமாகும். அது மருத்துவரால்தான் முடியும். நீங்களாகவே கடைகளில் மாத்திரை வாங்கிச் சாப்



மனிதனுக்கு மட்டுமல்ல, மிருகங்களுக்கும் யோகாசனம் நன்மை புரிவதாக ஜப்பானிய உடற்கூறு நிபுணர்கள் கூறுகிறூர்

கள். இதற்கென்றே மிருக மருத்துவ அமைப்பு ஒன்று மிருகங்களுக்கு யோகாசனப் பயிற்சிகளை நடத்துகிறது. இந்த நாகரிக நகர வாழ்க்கையில் வளர்ப்பு மிருகங்கள் மன உளேச்சல், உடல் தளர்ச்சி, உற்சாகமின்மை ஆகியவற்றுக்கு உள்ளாகின்றன. அவைகளுக்குத் தெம்பூட்டவும், மூளை வளர்ச்சி, உடல் வளர்ச்சி பெறவும், ஊளைச் சதை குறையவும் யோகாசனம் உதவுகிறதாம். ஒவ்வொரு மாதமும் 100 மிருகங்களுக்கு மேல் பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொண்டு பயன்பெறுகின்றனவாம்.

— ஆர். எஸ். சுப்பிரமணியன்.

பிட்டால், அப்போதைக்கு வலி குறைந்து, நோயை மறைத்துவிடும். பின்னுல், ஒட்டுமொத்தமாக நோய் முற்றி ஆபத்தில் கொண்டு போய் விட்டுவிடும்.

இளங்கோ: என்ன டாக்டர், வயிற்று வலிக்கு இன்ன காரணம் என்பதை நோயாளிகளிடம் எப்படி அறிந்து கொள்கிறீர்கள்? தெரிந்து கொள்ளலாமா?

நான்: நோயாளிகள் சொல்லும் அறிகுறிகளை வைத்தும், நாங்கள் பரிசோதித்துப் பார்க்கும் போது தெரியும் சில அறிகுறிகளைக்கொண்டும் வயிற்று வலிக்குக் காரணத்தைக் கண்டுபிடிப்போம். வயிற்றுவலிக்கு, கிருமிகள் கர்ரணமாக இருக்கலாம் என்று சந்தேகித்தால், மலத்தைப் பரிசோதித்து உறுதிப்படுத்திக் கொள்வோம். அதே சமயம் புண், கட்டி, கல் இருக்கலாம் என்று சந்தேகித்தால், எக்ஸ்—ரே (X—ray) படம் எடுத்துப் பார்ப்போம். அதிலும்புரியவில்லையென்றுல் சமீபத்தில்வந்துள்ள 'ஸ்கேனர்' என்ற நவீன சாதனத்தின் உதவியுடன் வயிற்றுவலிக்குக் காரணத்தைக் கண்டுபிடிப்போம்.

இளங்கோ: பள்ளியில் சில குழந்தைகள் பரீட்சைக்குப் பயந்து கொண்டு வயிற்று வலி என்று சொல்லிப் பாசாங்கு செய்வார்கள். கேள்விப்பட்டிருப்பீர்களே...?

நான்: ஆமாம்.

இளங்கோ: அந்த மாதிரி சமயங்களில் உண்மையான வயிற்று வலியா, பொய் வயிற்றுவலியா என்பதை எப்படி டாக்டர் தெரிந்து கொள்வது?

நான்: உண்மையான வயிற்றுவலி பரீட்சை சமயத்தில் மட்டுமல்ல; எந்த சமயத்தில் வேண்டுமானுலும் வரும். பொய் வயிற்று வலி பரீட்சை சமயத்தில் மட்டும் அல்லது பாடம் படிக்க வேண்டிய நேரத்தில் மட்டுமே வரும். உண்மையான வயிற்று வலியோடு, வாந்தி, வயிற்றுப் போக்கு, காய்ச்சல் ஆகியவை வரலாம். பொய் வயிற்று வலியில் இவையெல்லாம் வருவதில்லை. இருந்தாலும் மருத்துவரிடம் ஒரு முறை காண்பித்து விட்டால், உண்மையா, பொய்யா என்பதைப் பரிசோதித்து விட்டுத் தீர்மானமாகச் சொல்லி விடுவார்.

கோதண்டம்: சரி டாக்டர், வயிற்று வலி வந்ததும் என்ன முதல் உதவி செய்யலாம்?

நான்: வயிற்றுவலி வந்தவர்கள் குறைந்தது ஆறுமணி நேரமாவது உணவைச் சாப்பிடாமல், நீராகாரம் மட்டுமே (தண்ணீர், இளநீர், பழரசங்கள்) சாப்பிட்டுக் கொண்டு ஓய்வெடுக்க வேண்டும். ஆறு மணி நேரத்திற்கு மேலும் வயிற்றுவலி நீடித்தால் அல்லது வயிற்று வலியோடு வாந்தி, வயிற்றுப் போக்கு ஆரம்பித்தால் மருத்துவரை உடனே நாட வேண்டியது அவசியம். அதே மாதிரி ஆறு வயதிற்குக் கீழே உள்ள குழந்தைகளுக்கு வயிற்று வலி வந்தால் கால தாமதம் செய்யாமல் மருத்துவரைச் சந்திக்க வேண்டியது அவசியம்.

இளங்கோ: வயிற்று வலி வராமல் தடுக்க இயலுமா டாக்டர்?

நான்: இயலுமே!

இளங்கோ: அப்படியென்றுல் அதற்கான வழிமுறைகளையும் எனக்குச் சொல்லுங்கள் டாக்டர்... தெரிந்து கொள்கிறேன்.

நான்: அவசியம் சொல்கிறேன், கேள் —

— கடினமான உணவுகளை உண்ணக் கூடாது.

— எளிதில் ஜீரணிக்கக் கூடிய உணவுகளையே உண்ண வேண்டும்; அதையும் தேவையான அளவுக்கு மட்டுமே உண்ண வேண்டும்; நேரத்தோடு உண்ணவேண்டும். அவசரப்படாமல், நிதானமாக உண்ண வேண்டும்.

— உணவுகளை நன்கு வேக வைத்த பின்னரே உண்ண வேண்டும்.

— சமைத்த உணவுகளின் மேல் ஈக்கள், கொசுக்கள் மொய்க்காமல் பாதுகாக்க வேண்டும்.

— திறந்தவெளிகளில், கடைகளில் விற்கும் ஈக்கள் மொய்த்த பண்டங்களைச் சாப்பிடக் கூடாது.

— நீண்ட நாட்களாகிப் போன பதார்த்தங்களையும், கெட்டுப் போன பழங்களையும் சாப்பிடக் கூடாது.

— உணவில் காரம் அதிகம் சேர்க்கக் கூடாது.

— குடிநீரை வடிகட்டி, காய்ச்சி, ஆற வைத்த பிறகே குடிக்கப் பயன்படுத்த வேண்டும்.

— குழந்தைகள் புட்டிப் பால் குடிக்கும்போது, தாய்மார்கள் பக்கத்திலிருந்து கவனிக்க வேண்டும். புட்டியில் பால் குறைந்ததும் காற்றை உறிஞ்சி விடுவதைத் தவிர்க்க வேண்டும்.

— சுத்தமான தரையில் மட்டுமே குழந்தைகளைத் தவழ விட வேண்டும்.

— சிறு ரப்பர், நாணயம், கோலிக் குண்டு, சிலேட்டுக் குச்சி போன்றவற்றைச் சிறு குழந்தைகளுக்கு விளையாடக் கொடுக்கக் கூடாது; விழுங்கி விட வாய்ப்புண்டு.

— சிறுவர்கள் சுத்தத்தையும் சுகாதாரத்தையும் கடைப்பிடித்தால் குடலில் புழுக்கள் வளர்வதைத் தடுத்து விடலாம்.

— அடிக்கடி உணவு முறைகளை மாற்றக் கூடாது.

— இரவில் படுக்கச் செல்லும் போது தண்ணீர், பழம், அல்லது பழச் சாறுகள் சாப்பிட்டு வந்தால் மலச் சிக்கல் வராமல் தடுக்கலாம்.

— மன அமைதியும் ஓய்வும் அவசியம்.

— மதுவைத் தொடக் கூடாது; சிகரெட் புகைப்பதைத் தவிர்க்க வேண்டும்; அதிகமாக காப்பி, டீ சாப்பிடக் கூடாது.

— மருத்துவர் ஆலோசனையின்றி கண்ட கண்ட மாத்திரைகளைச் சாப்பிடக் கூடாது.

— ஏற்கெனவே வயிற்றுவலி வந்தவர்கள் மருத்துவர் சொன்னபடி மருந்து உட்கொண்டு, சீரான உணவு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

கோதண்டம்: இத்தனை விதிமுறைகளையும் கடைப்பிடித்தால், கண்டிப்பாக வயிற்றுவலி வராது என்கிறீர்கள். அப்படித்தானே டாக்டர்?

நான்: ஆமாம்.

இளங்கோ: நான் நிச்சயம் கடைப்பிடிக்கிறேன், டாக்டர். நன்றி, வணக்கம்.

கோதண்டம்: நன்றி, டாக்டர்... சென்று வருகிறோம்.

(விடைபெறுகிறார்கள்.)

பேசும் படம், மின்விளக்கு முதலியன கண்டுபிடித்த தாமஸ் ஆல்வா எடிஸன் ஒருநாள், அவர் தம் எதிர்கால மனைவிக்குக் காகிதம் சுற்றப்பட்ட பலகாரம் ஒன்றைக் கொடுத்தார். காகிதத்தைப் பிரித்துக் கொடுக்கச் சொன்னாள் அவள்.

காகிதம் பலகாரத்துடன் ஒட்டிக் கொண்டு வர மறுத்தது. பலகாரம் நொறுங்கி விடும் போலிருந்தது. எடிஸனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

"சே! என்ன காகிதத்தைப் போட்டுச் சுற்றியிருக்கிறார்கள்! ஒட்டிக் கொண்டு வரமாட்டேன் என்கிறது!" என்று அலுத்துக் கொண்டார்.

"ஒட்டிக் கொள்ளாத காகிதத்தை நீங்கள்தான் கண்டுபிடியுங்களேன்!" என்றாள் அவள்.

எடிஸன் சற்று நிதானித்தார். "ஆமாம், கண்டுபிடிக்க வேண்டும். கண்டுபிடிக்கத்தான் போகிறேன்!" என்றார்.


சொன்னது போலவே செய்து காட்டினார். ஒட்டிக் கொள்ளாத மெழுகுத் தாளைக் (Wax paper) கண்டுபிடித்தார்!

— எம். எஸ். வி.




சித்தூர் ராணி பத்மினி

கதை: ஆனந்தி
படம்: வினு





பத்மினி! அழகிலும் அறிவிலும் மட்டுமின்றி, கலைகளிலும் சிறந்து விளங்குகிறாய்! ஆனால் உனக்கேற்ற கணவனை உன் தந்தையால் தேர்ந்தெடுக்க முடியவில்லையே... வருந்துகிறாரே!
அவரைச் சொல்லி என்ன பயன்?
எல்லாம் என் துரதிர்ஷ்டம்...
உன் ஏக்கம் எனக்குப் புரிகிறது. உன் அழகு, பாலைவனத்தில் நிலவு காய்வது போல் வீணாக விடமாட்டேன்!
கிளி பறந்து போய் விட்டது. ஒரு காட்டில்...
வேடன் என்னைக் குறி பார்க்கிறான்; அதோ அந்த மரப் பொந்துக்குள் ஒளிகிறேன்.
பொந்தை வலையால் மூடிய வேடன், மரத்துக்கு நெருப்பு வைத்தான்.
பொந்தில் ஒளிந்தால் பிடிக்க முடியாதா என்ன?
ஸஹஸ்ர சீர்ஷா புருஷ: ஸஹஸ்ராக்ஷஸ் ஸஹஸ்ரபாத்
அப்போது அந்தப் பக்கமாக வந்த ஓர் அந்தணர்...
இதென்ன அதிசயம்! கிளி வேதம் சொல்கிறது! அப்பனே, இந்தக் கிளியை எனக்குக் கொடு.
ஐந்து பொன் தருவியா?


அந்தணர் அந்தக் கிளியை வாங்கிக் கொண்டு கப்பலேறினர்.
ராஜபுதன அரசன் ரத்னஸேனின் தலைநகர் சித்தூர், பலமான கோட்டையுடன் விளங்கியது.
இந்தக் கிளியுடன் சித்தூர் மன்னனிடம் போகவேண்டும். உயர்ந்த பொருள்கள் சிறந்த மன்னனின் அரண்மனையைத்தான் அலங்கரிக்க வேண்டும்.
அரசவையை அடைந்தான் அந்தணன்.
அந்தணர்கள் கிளி வளர்ப்பதுண்டா?
இது ஓர் அற்புதக் கிளி. எனக்குத் தெரிந்த சாஸ்திரங்கள் அனைத்தையும் கற்றுக் கொடுத்திருக்கிறேன்.
ஒரு லட்சம் பொன் கொடுத்து அதைப் பெற்றுக் கொண்டான் ரத்னஸேன்.
ஹீராமன் என்று உனக்குப் பெயர் சூட்டுகிறேன்.
அந்தப்புரம் சென்றான் ரத்னஸேன். மனைவியிடம்....
நாகமதி! உனக்கு ஓர் அதிசயம் காத்திருக்கிறது...





...உனக்கு நிகரான அழகுக் கிளி! அறிவிலும் சிறந்த கிளி!
எனக்கு அறிவில்லை என்று குத்திக் காட்டுகிறீர்களா?
அழகில் சிறந்தவர், அறிவிலும் சிறந்தவராக இருப்பது அபூர்வம்!
ஹிராமன்! ஜாக்கிரதை! நாகமதிக்கு முன்கோபம் அதிகம்!
ஒரு நாள் ரத்னஸேன் வேட்டைக்குக் கிளம்பினன்.
போய் வாருங்கள்.
ஹிராமனை நன்றாகக் கவனித்துக் கொள்.
சில நாட்கள் சென்று... தோழியர்...
மகாராணி! அரசர் இன்றோ நாளையோ வந்து விடுவார்.
சித்தூரை அடைந்ததும் முதலில் தேவியைப் பார்க்கத்தான் ஆவலோடு ஓடி வருவார்!
அதெல்லாம் ஒன்றுமில்லை; இந்தக் கிளியிடம் தான் அவருக்கு அதிகப் பிரியம் இப்போது.


உங்களைப்போன்ற அழகியை மூன்று உலகங்களிலும் பார்க்க முடியாது!
அதெப்படி உனக்குத் தெரியும்? நீ மூவுலகு அழகிகளையும் பார்த்திருக்கிறாயா என்ன?
நாகமதிக்குக் கோபம் வந்தது.
என்னைவிட அழகியை நீ பார்த்திருக்கிறாயா?
ஹ ஹ ஹா! சிங்கள ராஜகுமாரி பத்மினியைப் பார்க்காதவர்கள் அழகு என்றால் என்ன என்பதையே அறியாதவர்கள்!
இந்தக் கிளியின் கர்வத்தை என்னால் சகிக்க முடியவில்லை. கொண்டுபோ! கழுத்தைத் திருகிப் புதைத்துவிடு!
வேட்டையிலிருந்து திரும்பிய மன்னன்...
நாகமதி! ஹீராமன் எங்கே?
அந்த நன்றிகெட்ட கிளி, எங்கோ பறந்து போய்விட்டது.
அரசன் வருந்தித் தனித்திருந்தபோது, சேடி வந்து உண்மையைக் கூறி...
அரசே! அரசிக்குத் தெரியாமல் ஹீராமனை மறைத்து வைத்திருக்கேன்!
என் அறிவுரைப்படி நடந்துகொண்ட இவளுக்குப் பரிசு கொடு!



செடிக்குப் பொன் முடிப்பு அளித்து அனுப்பிய அரசன்...
ஹீராமா! நாகமதிக்குக் கோபம் வரும்படி என்ன சொன்னாய்?
இளவரசி பத்மினியின் அழகைப் புகழ்ந்து கூறினான்!
ஹீராமன், பத்மினியைப் பற்றிச் சொல்லச் சொல்ல, ரத்னசேன் மனத்தில் காதல் பெருகியது...
படையெடுக்காமல் யோகிபோல் சென்று அவளை அடைவேன்!
நான் வழி காட்டு கிறேன்.
பெரிய கடற்படை கிளம்பியது. ஆனால் வீரர்கள் துறவிகள் போல் உடை அணிந்திருந் தார்கள்!
கடும் புயலில் சிக்கி அவதிப்பட்டார்கள்.
ஒரு வழியாக சிங்களத் தீவை அடைந்தார்கள்.
ஆகா! எங்கும் மரகதப் பசுமை!
காட்டு வழியில் செல்ல வேண்டும்; என்னைப் பின் தொடருங்கள்!


தலைநகரை அடைந்தார்கள்.
வளமான நகரம்!
சிவன் கோயிலுக்கு பத்மினி வருவாள். காத்திருங்கள். நான் அவளைச் சந்தித்து விட்டு வருகிறேன்.
பத்மினியின் அந்தப்புரத்தை அடைந்தது கிளி...
என் ஆசைக் கிளியே... இத்தனை காலம் எங்கே போனாய்? என்னைப் பிரிய எப்படி மனம் வந்தது?
யார் அவர்?
சித்தூர் மகாராஜா ரத்னஸேன் கோவிலில் காத்திருக்கிறார், உனக்காக.
உனக்குத் தகுந்த மணாளனைத் தேடத்தான் போயினேன்!
மாலை வழிபாட்டுக்குப் பத்மினி கோயிலுக்கு வர....
இறைவா! ஈடு இணையற்ற இந்த அழகியை நான் அடைய அருள வேண்டும்.
ஈசனே! என்னை மணக்க விரும்பும் இவர் மாவீரராகவும் விளங்கட்டும்!
பிரார்த்தனை முடிந்து...
பத்மினி! மலையும் கடலும் காடும் கடந்து உன்னைத் தேடி வந்திருக்கிறேன்.
வீரத்தால் என்னை அடைவதே உங்களுக்கு அழகு. சேவித்தால் அல்ல.


ரத்னஸேன் ஆணையிட... யோகிகள் போர் வீரர்களாக மாறினார்கள்...
கோட்டையைத் தாக்கப் புறப்படுங்கள்!
பெரும் யுத்தம் நடந்தது...
கந்தர்வசேனன் தோல்வியுற்று ரத்னஸேன் முன் நின்றான்.
அரசரே! தங்களைச் சிறைப் பிடிப்பதோ, தங்கள் நாட்டைக் கவர்வதோ என் நோக்கமல்ல...
...வெற்றிப் பரிசாகத் தங்கள் மகள் பத்மினியை எனக்கு அளிக்க வேண்டும்.
சிறந்த ராஜ வம்சத்தில் தோன்றிய மாவீரனுக்கு என் மகளை மணம் செய்து கொடுப்பது எனக்குப் பெருமையே!
பத்மினியை மணந்து சில நாள் இலங்கையில் ஆனந்தமாய் வாழ்ந்தான் ரத்னஸேன்.
கண்ணே! அன்பே!
கிண்டலா செய்கிறாய்!



பத்மினியுடன் சித்தூர் திரும்பினான் ரத்னஸேன்...
சித்தூர் ராணா, வாழ்க!
சித்தூர் ராணி பத்மினி, வாழ்க!
சில ஆண்டுகள் சென்றன. சித்தூர் ராணி பத்மினியின் புகழ் தில்லி பாதுஷாவுக்கு எட்டியது...
சித்தூரின் கணக்கற்ற செல்வத்துக்கு இணையாக, ராணி பத்மினியின் அளவற்ற அழகைத்தான் கூறலாம்!
அலாவுதீன் கில்ஜிக்கு ஆசை பெருகியது...
ஆ! அத்தனை அழகா? நீ பார்த்திருக்கிறாயா?
ராகவ்சேதன் ஒரு போலிச் சாமியார் என்பதால் ரத்னசேனால் நாடு கடத்தப்பட்டவன். எனவே வஞ்சனையாக....
அவளைப் பார்த்திருப்பது மட்டுமல்ல; அவள் மீதுள்ள மையலால் ரத்னஸேன் தன் கோட்டையையும் படைகளையும் சரியாகப் பராமரிப்பதில்லை என்பதும் எனக்குத் தெரியும்!
ராகவ்சேதன் மூட்டிய தீ பற்றிக்கொண்டது. பத்மினி மீது ஆசையும் ரத்னஸேன் மீது பொறாமையும் கொண்ட கில்ஜி, படையெடுத்து வந்து.....


... சித்தூர் கோட்டையை முற்றுகை யிட்டான்.
பாசறையில்... கில்ஜி...
சீ! ஒரு மாய மந்திர வித்தைக் காரன் கூறியதைக் கேட்டுப் படையெடுத்தேன். இத்தனை மாதங்கள் முற்றுகையிட்டும் ரத்னஸேனன் பணியவில்லை...
வீரத்தால் சாதிக்க முடியாததைச் சூழ்ச்சியால் சாதிக்க நினைத்தான் கில்ஜி...
யார் அங்கே! சமாதான வெள்ளைக் கொடி ஏற்றுங்கள்!
சமாதானம் என்று வந்த கில்ஜியை, ராஜ தர்மப்படி சகல மரியாதைகளுடன் வரவேற்றான் ரத்னஸேனன்.
டில்லி பாதுஷாவின் வருகையால் சித்தூர் கோட்டை பெருமை யடைகிறது!
ஆனால் ராணி பத்மினிக்கு மட்டும் மகிழ்ச்சி இல்லை போலும்! கண்ணிலேயே தென்படவில்லையே?
சதுரங்கம் ஆடும் போது, தற்செயலாக அந்தப்பக்கம் வந்த பத்மினியின் உருவை, நிலைக்கண்ணாடியில் பார்த்து விட்டான் கில்ஜி.
ஆ! இப்படியும் ஒரு பேரழகு உண்டா!



பாசறைக்குத் திரும்பிய கில்ஜி, கோபத்தில் கொதித்தான்.
பத்மினியைக் கண்ணிலேயே காட்டவில்லை. நிலைக்கண்ணாடியில் ஒருகணம் பிரதிச் சையாகப் பார்த்ததுடன் திருப்தி அடைய வேண்டியதாயிற்று!
கில்ஜியின் விகார உள்ளம் சூழ்ச்சியைத் தொடர்ந்தது...
யாரங்கே! ரத்னஸேனை மறு விருந்துக்கு நான் அழைப்பதாகச் செய்தி அனுப்புங்கள்!
கில்ஜியை நம்பி, கோட்டைக்கு வெளியே கில்ஜியின் ராணுவ முகாமுக்கு நண்பனாக வந்தான் ரத்னஸேன்... விருந்து முடிந்ததும்...
போய் வருகிறேன்!
நான் அனுப்பினால்தானே நீ திரும்பிச் செல்ல முடியும்? உன்னை டில்லிக்கு அழைத்துப் போகப் போகிறேன்–கைதியாக!
ஹ ஹ ஹா!
பத்மினிக்குச் செய்தி எட்டியது...
தேவி! ஏமாந்து போனோம்! மஹாராஜாவை சிறைப் படுத்திக் கொண்டு போய் விட்டார்கள்!
நயவஞ்சகப் பதர்கள்! ஆயுதமின்றி தனியே சென்றவரைச் சிறைப்பிடித்த கோழைகள்!


முதலில் பதறிய பத்மினி, பின்னர் சூழ்ச்சிக்கு, பதில் சூழ்ச்சிதான் சரி என்று தீர்மானித்து...
வீர்சிங்! இந்த ஓலையுடன் டில்லிக்குப் போ... கில்ஜியைச் சந்தித்துக் கொடு...
ஓலையைப் படித்த கில்ஜி...
ஹஹ்ஹா! நான் எதிர்பார்த்தபடியே நடக்கிறது. பத்மினி வருகிறாள், தன்னை என்னிடம் ஒப்படைத்துக் கொள்ள... தூதனே! அவள் வந்து சேர்ந்ததும் அவள் கணவனை விடுவிப்பதாகத் திரும்பிப் போய்ச் சொல்!
இதற்கிடையில் ராணி பத்மினி தன் கணவனின் ஆப்த நண்பர்களான கோரா பாதல் ஆகியோருடன் ஆலோசனை நடத்துகிறாள்...
என் திட்டம் இது... நாம் என்ன செய்ய வேண்டுமென்றால்...
சில தினங்களில்...
பாதுஷா! சித்தூரிலிருந்து வந்த ஐந்நூறு பல்லக்குகள் டில்லியை நெருங்குகின்றன. துணைக்கு ஏழெட்டு வீரர்கள் மட்டுமே குதிரை மீது வருகிறார்கள்.
ஆ! ஹா! ஹா! அந்தப்புரத்தில் உள்ள எல்லாப் பெண்களையுமே அழைத்து வருகிறாள்! சபாஷ்!


நகர எல்லையில் பல்லக்குகள் வந்து நிற்க....
பாதுஷா! மகாராணி பத்மினி செய்தி அனுப்பி யிருக்கிறார்...
கடிதத்தில்...
முகலாய சக்கரவர்த்திக்கு பத்மினி எழுதியது: தங்கள் அரண்மனைக்கு நான் வருமுன்னர், என் கணவரைச் சில நிமிஷங்கள் சந்திக்க விரும்புகிறேன்
அலாவுதீன் கில்ஜி வெற்றிப் போதையில் மதியிழந்து...
அப்படியே செய்யட்டும்! பேரழகி பத்மினி என்னை விரும்பி வந்திருக்கிறாள் என்பதை ரத்னஸேன் அறிந்து அவமானப் படட்டும்!
பலத்த காவலுடன் ரத்னஸேன் சிறை வைக்கப் பட்டிருந்த வீட்டினருகே பத்மினி, பல்லக்குப் பரி வாரங்களுடன் சென்றதும்...
திடுமென்று ஐந்நூறு பல்லக்கினுள்ளிருந்து ஓராயிரம் பெண்கள் வெளிப் பட்டனர். பெண் உடைகளைக் களைந்து மாவீரர்களாக மாறினர்!


பல்லக்குத் தூக்கிகளும் போர் வீரர்களாக மாற, கில்ஜியின் வீரர்கள் எதிர் பாராத திடீர் தாக்குதலால் தடுமாறினார்கள்...
இந்தக் களேபரத்தி னிடையில் குதிரைகளில் வந்திருந்த கோரா, பாதல் ஆகியோர் ராணி பத்மினியுடன் வீட்டினுள் புக, ரத்னஸேன் வியப்புற்று...
பத்மினி! எப்படி வந்தாய்!
பேச நேரமில்லை மகாராணா! கிளம்புங்கள் சீக்கிரம்!
இதோ வாள்!
குதிரைகள் தயார்!
இதற்குள் பத்மினியுடன் வந்திருந்த வீரர்கள், முகலாயர்களின் குதிரை லாயத்தில் புகுந்து...
குதிரைகளைக் கைப்பற்றுங்கள்!
சேணம் பூட்டுங்கள்! சீக்கிரம்!
முகலாயப் படை விழித்துக்கொண்டு சித்தூர் படைகளைத் தாக்கியது...


படைத் தலைமையைக் கோராவிடம் ஒப்படைத்த பத்மினி...
மகாராணா! குதிரையைத் தட்டி விடுங்கள்!
கோழை போல் தப்பி ஓடுவதா?
தயங்காதீர்கள், வஞ்சனையைச் சூழ்ச்சியால் தான் வெல்லமுடியும். வீரத்தைக் காட்டும் சந்தர்ப்பமும் காத்திருக்கிறது...
இனியும் இங்கு தாமதிப்பது ஆபத்து!
துரத்திவரும் முகலாயப் படைகளை மூன்று நான்கு இடங்களில் தடுத்து நிறுத்தி யுத்தம் செய்த வாறே கோராவின் தலைமையில் சித்தூர் வீரர்கள் மெல்ல மெல்லப் பின் வாங்கினார்கள்.
மகாராணாவும் ராணியும் இதற்குள் சித்தூர் சென்றடைந்திருப்பார்கள். அது போதும்!
சித்தூரை அடைந்த ரத்னஸேன்...
பத்மினி! எவ்வளவு சாமர்த்தியமாக என்னைத் தப்புவித்தாய்!
மகாராணா! கும்பல்கர் அரசன் சித்தூர் மீது ஒரு கண் வைத்திருக்கிறான்...
...முகலாயர் பழி வாங்க வரு முன்னர் அவனை முறியடிக்க வேண்டும்; இல்லையெனில் இரு எதிரிகளை ஒரே சமயத்தில் சந்திக்க நேரும்!
உன் அழகைப்போலவே அறிவும் பிரகாசிக்கிறது!



கும்பல்கர் அரசன் தேவபாலைப் போரில் முறியடிக்க ரத்னஸேன் சென்ற சில தினங்களில்......
தேவி! டில்லியிலிருந்து அலாவுதீன் கில்ஜி பெரும் படையுடன் புறப்பட்டிருக்கிறார், நம்மைப் பழி வாங்க!
வரட்டும்; அதற்கு முன் கும்பல்கரில் பெற்ற வெற்றியுடன் மகாராணா திரும்பி விடுவார்! கவலை வேண்டாம்!
ஆனால் அடுத்து வந்த செய்தி...
தேவி! கும்பல்கரில் நம் அரசர், தேவபாலை வென்றி கொண்டதோடு வீரமரணத்தையும் தழுவினார்!
பத்மினி கலங்கவில்லை...
ஏன் அழவேண்டும்? ராஜ மரியாதையுடன் தகனமாகிற மன்னரை நானும் பின் தொடர்வேன்! ஜெய் பவானி!
அலாவுதீன் கில்ஜி சித்தூர் கோட்டையை எளிதில் கைப்பற்றினான். ஆனால் பத்மினியை அடைய முடியவில்லை...
புரிகிறது; ராஜபுத்திரப் பெண்கள் கற்புக்கரசிகள்; நெருப்புக்கு நிகரானவர்கள்!
(ஒரு கர்ணபரம்பரை வரலாற்றுக் கதையைத் தழுவி எழுதியது)



அரச சபையில் ஒருவன் வந்தான்
ஆனை போல இருந்தான்
"அரிய பெரிய வித்தை யெல்லாம்
அடியேன் செய்வேன்" என்றான்

"இந்த நகரின் எல்லை தன்னில்
இருக்கும் பெரிய மலையை
என்றன் தலையில் சுமந்து காட்டி
எவரும் வியக்கச் செய்வேன்"

அந்த மனிதன் பேச்சைக் கேட்ட
அரசர் உடனே அவனை
"எந்த நாளில் வைத்துக் கொள்வோம்
இன்றே சொல்வாய்" என்றார்

"அரசே, உங்கள் சபைக்கு வரவே
ஆறு நாட்கள் நடந்தேன்
பெரிய பெரிய காட்டை யெல்லாம்
விரைவில் கடந்து வந்தேன்

வழியில் நானும் உண்பதற்கு
வசதி எதுவும் இல்லை
பழங்கள், முட்டை, பாலும்கூடப்
பார்க்க முடிய வில்லை.

அரசே, இன்னும் பத்து நாட்கள்
அளிப்பீர் எனக்குத் தவணை
சிரசின் மீது அந்த மலையைச்
சுமந்து காட்டு கின்றேன்

இந்தப் பத்து நாளும் தாங்கள்
எனக்கு வேண்டும் உணவைத்
தந்து காத்து அருள வேண்டும்
தயவு செய்தே" என்றான்

அரசர் உடனே அருகில் இருந்த
அமைச்சர் தம்மைப் பார்த்து
"சிறந்த முறையில் இவர்க்கு வசதி
செய்து கொடுப்பீர்" என்றார்

கறியும் சோறும் முட்டை பழமும்
கணக்கில் லாமல் அவனும்
சிறிது கூட ஓய்வில் லாமல்
தின்று தீர்த்தான் தினமும்

நாட்கள் பத்து ஆன வுடனே
நகரின் எல்லை தனிலே
கூட்ட மாக மலையின் அருகில்
குவிந்து நின்றார் மக்கள்.

அரசர் அரசி அமைச்ச ரெல்லாம்
ஆவ லாக இருக்க
பெரிய உடலைத் தூக்கிக் கொண்டு
அருகில் சென்றான் அவனும்

"மலையைத் தூக்கித் தனது தலையில்
வைக்கப் போகின் றாரே!
உலகில் இதுபோல் வித்தை செய்ய
ஒருவ ரேனும் உண்டோ?"

— இந்த விதமாய் மக்களெல்லாம்
எண்ணுகின்ற போதில்
அந்த மனிதன் அரச 'ரிடத்தில்
அடக்கமாகச் சொன்னான்:

"மலையைத் தலையில் சுமந்து காட்ட
வந்து விட்டேன் அரசே,
மலையைத் தூக்கி எனது தலையில்
வைக்கும் ஆட்கள் எங்கே?"

"என்ன! உனது தலையில் மலையை
எவர் எடுத்து வைப்பார்?
உன்றன் கைகளாலே எடுத்து
உனது தலையில் வைப்பாய்"

என்றே அரசர் கோபங் கொண்டு
எழுந்து கூச்சல் போட்டார்
மன்னர் கோபங் கண்டு அவனும்
மசிய வில்லை சிறிதும்


"இந்த மலையைச் சுமப்பேன் நானும்
எனது தலையில் என்றே
அன்று சொன்னேன் சபையில்
இருந்தோர்
அனைவருக்கும் தெரியும்.

இன்று எனது தலையில் மலையை
எடுத்து வைக்கச் சொன்னால்
நன்கு நானும் சுமந்து காட்டிச்
சொன்ன சொல்லைக் காப்பேன்"

அரசர் இதனைக் கேட்ட வுடனே
"ஆஹா! மோசம் போனேன்.
சரியாய் விவரம் கேட்க வில்லை
தவறு செய்தேன்."என்றார்

மலையைத் தூக்கும் காட்சி காண
வந்த மக்களெல்லாம்
தலையில் அடித்துக் கொண்ட படியே
தத்தம் வீடு சேர்ந்தார்

ஓவியராகலாம்



நஷ்டஈடு



அன்பிற்கினியவன்

அம்மா சாதம் பரிமாறிக்கொண்டிருந்தாள். சாப்பிட்டுக் கொண்டிருந்தான் ஆனந்தன்.

பாதித் தட்டுத்தான் சாப்பிட்டிருப்பான். அதற்குள் —

ஏதோ வேலையாய் வெளியில் சென்றிருந்த அவனது அப்பா தர்மலிங்கம் வீட்டிற்குள் நுழைந்தார். ஆனந்தன் சாப்பிட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்தார். ஒன்றும் சொல்லாமல், அடுத்த அறைக்குள் சென்று, சட்டையைக் கழற்றியவாறே, ''கல்யாணி!'' என்று கூப்பிட்டார்.

''என்னங்க?'' என்றவாறே அம்மா அவரிடம் விரைந்தாள்.

''துரை விழுங்கிக் கொண்டிருக்கிறாராக்கும்! தண்டச்சோறு! சாப்பிட மட்டும் நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறார் துரை! படிப்பதற்கோ, வேலை பார்ப்பதற்கோ மட்டும் துளி அருகதை கிடையாது!'' என்று சத்தமாகக் கத்தினார்.

சாப்பிட்டுக் கொண்டிருந்த ஆனந்தனுக்கும் அது தெளிவாகக் கேட்டது. அப்படி அவன் காதில் விழ வேண்டும் என்பதற்காகத்தானே அவரும் உரக்கக் கத்தியிருக்கிறார்!

ஆனந்தனால் அதற்குமேல் சாப்பிட முடியவில்லை.

அம்மா ஆனந்தனிடம் வந்தாள். தட்டில் பாதிச் சோறு அப்படியே இருந்தது. கைகழுவி, வாயைத் துடைத்துக் கொண்டிருந்தான் அவன்.

திடுக்கிட்டாள்.

''என்னடா ஆனந்தா, பாதியிலேயே எழுந்துவிட்டாய்?'' என்றுபதற்றத்துடன் கேட்டாள்.

''வயிறு சரியில்லேம்மா...'' என்றவாறே, வேறு திசையில் திரும்பிக் கொண்டான் ஆனந்தன். இல்லாவிட்டால், தன் கண்கள் கலங்கிக் கொண்டிருப்பதை அம்மா பார்த்துவிடுவாளே!

''அப்பா திட்டினாரென்று கோபம் தானே?''

மௌனம்.


''சரியாய் நீ சாப்பிடாததற்கு அது தான் காரணம்! எனக்குத் தெரியும். நாம்தான் ஒரு அலுவலகத்தில் பியூனாக இருக்கிறோமே, நம் பிள்ளையா

வது நன்கு படித்துப் பெரிய வேலைக்குப் போகட்டும் என்று உன் அப்பா நினைத்தார். ஆனால், உனக்கோ சுட்டுப் போட்டாலும் படிப்பு சரியாக வரவில்லை. உனக்கும் படிக்க விருப்பமில்லை. அதோடு உன் படிப்பை நிறுத்திக் கொண்டாய். மேலும் இரண்டு வருஷமும் கழிந்து விட்டது. அதனாலேதான், உன்னை ஏதாவது ஒரு வேலைக்காவது அனுப்பி வைக்கலாமென்று அவரும் சொல்லிக் கொண்டேயிருக்கிறார். அப்படி நீ வேலைக்குப் போனாலாவது நான் இப்போது போல் தினக்கூலி வேலைக்குப் போக வேண்டிய அவசியம் இருக்காதல்லவா?"

"சரி அம்மா. வேலை எதுவும் எனக்குக் கிடைத்தால்தானே? நான்தான் எந்த வேலையும் செய்யத் தயாரென்று தான் முன்பே சொல்லியிருக்கிறேனே! ஒன்று, அப்பாவாவது எனக்கு வேலை தேடித் தர வேண்டும். அவராலும் அது முடியவில்லை, நானாக முயன்றும் கிடைக்கவில்லை. தப்பு என் மீதா? என்னைக் காட்டிலும் நிறையப் படித்தவர்களுக்கே இந்தக் காலத்தில் வேலை கிடைப்பது எவ்வளவு சிரமமாக இருக்கிறது, தெரியுமா...?"

இரக்கம் மேலிட, ஆனந்தனைப் பார்த்தாள் அம்மா.

உலகப் புகழ் மிக்க அறிவியல் மேதை ஐன்ஸ்டீன் ஒருநாள் தீச்சட்டியினருகில் குளிர் காய்ந்து கொண்டிருந்தார். தீச்சட்டியிலுள்ள நெருப்பு அதிக வெப்பத்தைத் தந்தது. இந்த வெப்பத்தைத் தாங்க இயலாத ஐன்ஸ்டீன் கூச்சலிட்டார். இதைக் கேட்ட அவரது வேலைக்காரி பதறிக் கொண்டு ஓடி வந்தார். ஐன்ஸ்டீனிடம் மெதுவாக ஆனால் சற்று எரிச்சலோடு, "நீங்கள் சற்று தள்ளி உட்கார்ந்தால் போதுமே..... எதற்குத் தேவையில்லாமல் இப்படிக் கூச்சல் போடுகிறீர்கள்?" என்றார். "ஆமாம், அந்த எண்ணமே ஏன் தனக்குத் தோன்றவில்லை" என்று வியந்தாராம் ஐன்ஸ்டீன்.



தெருவில் நடந்து போய்க் கொண்டிருந்தான் ஆனந்தன். அவனது நெஞ்சம் கவலையால் கனமாகியிருந்தது.

தனக்குப் படிப்பு ஏறவில்லை—வயது அதிகமாகிக் கொண்டே போகிறது — தேடியும் வேலை எதுவும் கிடைக்கவில்லை — அப்பா தன்னை அடிக்கடி 'தண்டச்சோறு' என்றுதிட்டிக்கொண்டேயிருக்கிறார் —

'எதற்காக நான் இப்படித் தண்டமாகவும், என் பெற்றோர்களுக்குச் சுமையாகவும் இந்த உலகத்தில் வாழ வேண்டும்? வாழ்ந்து என்ன சாதிக்கப்போகிறேன்? எந்தஉதவியும்யாருக்கும் என்னால்தான் இல்லையே? உயிரோடு இருந்து பிறருக்குப் பாரமாகி என்ன பயன்? இப்படி வாழ்வதை விட சாவது எவ்வளவோ மேல் ஆயிற்றே...!' என்று அவனது நெஞ்சில் எண்ணங்கள் சுழலிட்டுக் கொண்டிருந்தன.

அச்சமயம் —

ஒரு படகுக் கார் வேகமாக அந்தத் தெருவில் வந்து கொண்டிருந்தது.

பல முறை ஹாரன் அடித்தும், ஆனந்தன் நகரவில்லை. கார் அவன் அருகில் வந்ததும், சட்டென்று பிரேக் பிடிக்கப்பட்டது. டயர்கள் 'கிறீச்' சென அலறின. இதற்குள் ஆனந்தனைக் காரின் முன்பகுதி இடித்துத் தூக்கி எறிந்துவிட்டது. ஆனந்தன் சில அடிகள் தள்ளி விழுந்தான். உடனே நினைவு தவறிவிட்டது.

செய்தி எப்படித்தான் அவ்வளவு வேகமாகப்பரவியதோ தெரியவில்லை. சில நிமிடங்களுக்குள்ளேயே ஏகப்பட்ட கூட்டம் காரைச் சுற்றியும், கீழே கிடந்த ஆனந்தனைச் சுற்றியும் கூடிவிட்டது. காரிலிருந்து பதற்றத்துடன் இறங்கி நின்றிருந்த அந்தப் பணக்கார இளைஞனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

கூட்டத்திலிருந்து ஒருவன் கத்தினான்: "காரிலேறி உட்கார்ந்து விட்டால், கண் மண் தெரியாமல்தான் ஓட்டுறானுங்க! நொறுக்குங்கடா காரையும், ஓட்டிக் கொண்டு வந்த



வலையும்...!''

இன்னொரு குரல்: ''பாவம்டா அடிபட்ட அந்தப் பையன்! யார் செய்த புண்ணியமோ, கூழாக அரைக்கப்படாமல், இந்த மட்டுமாவது பிழைத்தானே!''

''காரை ஓட்டிக் கொண்டு வந்தவனுக்குப் பணத்திமிர்டா! ஆளுக்கு இரண்டு தர்ம அடி போட்டால் தாண்டா சரிப்படுவான்!''

இவ்வாறு ஒவ்வொருவரும் அவரவர்களுக்குத் தோன்றியமாதிரி விமரிசனமும், தீர்ப்புகளும் சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். கூட்டத்தினிடையே வன்முறைக் கும்பல் ஒன்று உருவாகி, காரை ஓட்டி வந்த இளைஞனை நெருங்கியது.

இளைஞன், விறுவிறுத்துப் போய் யாதொன்றும் செய்யத் தோன்றாதவனாய்க் கைகளைப் பிசைந்தவாறு நின்றிருந்தான். பாவம், அவனுக்கு ஆதரவாக அங்கே யாருமே இல்லை!

இதற்கிடையில் —

மனிதாபிமானமும், கருணையுமுள்ள யாரோ ஒருவர் பக்கத்துப் பெட்டிக் கடையிலிருந்து சோடா வாங்கி வந்து, மூர்ச்சையடைந்திருந்த ஆனந்தனின் முகத்தில் அறைவது போல் தெளித்தார். அவ்வாறு அவர் மூன்றாம் முறையாகச் செய்த போது, ஆனந்தனுக்கு நினைவு திரும்பியது. அசைந்து சற்றே புரண்டான். நடப்பவைகளை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது. இருப்பினும் வாய் திறந்து பேச முடியவில்லை. தன்னை, தனது நிலையை ஒருதரம் பார்த்துக் கொண்டான். உடம்பில் ஆங்காங்கே சில சிராய்ப்புகள் ஏற்பட்டு, அவைகளிலிருந்து ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. சிராய்ப்புகளால் ஏற்பட்டுக் கொண்டிருந்த வேதனையை அவன் உணர்ந்து கொண்டிருந்தான்.

மறுபடியும் ஒருவர் சோடாவை அவனது வாயருகே கொணர்ந்து, அவனது தலையைச் சற்றே உயர்த்திப் பிடிக்க, அவன் 'மடக்' 'மடக்'கென்று முழுவதையும் குடித்தான். எழுந்து உட்கார முடியாதபடி பலவீனமாக இருந்ததால், தரையிலேயே படுத்துக் கிடந்தான். கண்களை இலேசாக மூடினான். அதுதான் . அப்போது அவனுக்கு இதமாக இருந்தது.

திடீரென்று ஒரு குரல், கூட்டத்தை விலக்கிக் கொண்டு வேகமாகத் தன்னருகே வருவது அவனுக்குக் கேட்டது.

கண்களை மூடியிருந்தாலும், அக்

குரலுக்குரியவர் யாரென்பது அவனுக்குத் தெரிந்தது. அவனது அப்பா தான்!

அவர் 'ஓ'வென அலறினார். "ஐயோ, ஆனந்தா! உனக்காடா இந்தக் கதி? ஐயோ — இனி நான் என்ன செய்வேன்? என் மகனே! படுபாவிப்பயல் உன்மீது காரை ஏற்றி இந்த மாதிரி ஆக்கிவிட்டானே!"

பக்கத்திலிருந்த சிலர், "அதெல்லாம் பயப்படும்படி ஒன்றுமில்லை ஐயா! வீணாக அழாதீர்கள்..." என்று சமாதானம் சொன்னார்கள்.

"நீங்கள் சொல்கிறீர்கள் ஐயா. எனக்கு மனசு கேட்கணுமே! எனக்கு ஒரே பையன் ஐயா. சம்பாதிக்கிற பையன், எப்படியிருந்தாலும், தினமும் ஏதாவது வேலை செய்து முப்பது, முப்பத்தைந்து ரூபாய் கொண்டு வருவானே! எங்கள் வீட்டிலே என் பிள்ளையாலே கவலையே இல்லாமல் இருந்தோமே! இன்றைக்கு இவனுக்கு இந்தக் கதி ஆகிவிட்டதே! இவனது அம்மாவுக்கு மட்டும் இந்த விஷயம் தெரிந்தால், அதிர்ச்சியாலேயே இறந்து போய்விடுவாளே!" என்று அப்பா மேலும் அரற்றி ஆர்ப்பாட்டம் செய்தது ஆனந்தனுக்குக் கேட்டது.

கூட்டத்திலிருந்த சிலரிடம் அப்பா போனார். அவர்கள் ஏற்கெனவே அவருக்கு ஓரளவு தெரிந்தவர்கள் போலும்! "இதோ பாருங்கய்யா! கார் ஓட்டி வந்த ஆளிடம் என் மகனை அவர் இப்படி ஆக்கியதற்காக ரூபாய் பத்தாயிரம் நஷ்டஈடு தரச் சொல்லுங்கள். அது தவிர, இவனுக்காகும் மருத்துவச் செலவு பூராவும் குணமாகிற வரைக்கும் அந்த ஆள்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்கும் சம்மதிக்கச் சொல்லுங்கள்! இல்லாவிட்டால், எனக்கும் எங்கள் கூட்டத்தாருக்கும் என்ன செய்வதென்று தெரியும். ஓரடியாவது இந்த இடத்தை விட்டு நகர விட்டு விடுவோமா அந்த ஆளை? என் தங்க மகன். சின்னப் பயலாக இருந்தாலும், தினமும் சம்பாதித்துச் சம்பாதித்துப் பணமாய்க் கொட்டிய மகன் இப்படிப் பிணம் போல் கிடக்கிறானே ஐயா!" என்று அழ ஆரம்பித்தார்.

நண்பர்கள் அவரைத் தேற்றினார்கள். தாங்கள் அவர் கேட்டவைகளுக்கெல்லாம் இளைஞனுடன் பேசி நல்லதோர் ஏற்பாடு செய்வதாகவும், அவர் அழ வேண்டிய தேவையில்லை எனவும் தைரியம் சொன்னார்கள்.

ஆனந்தனுக்கு அப்போதுள்ள நிலைமைகளெல்லாம் நன்கு புரிந்தன. தன்னை சதா வெறுத்து, திட்டிக்கொண்டிருந்த அப்பா, தன் முகத்திலேயே விழிக்கப் பிடிக்காத அப்பா, இன்று தன்னை 'ஓகோ'வென்று புகழுவதையும், தான்தான் சம்பாதித்துக் கொண்டு வந்து குடும்பத்தையே காப்பாற்றுவதாகப் பொய்யாகவும், பாசாங்காகவும், சொன்னதையும் கேட்டு, அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

பரிதாப நிலைமையிலுள்ள தன்னை, அக்கூட்டத்தினருக்கு அவர் ஒரு காட்சிப் பொருளாகவும், வியா

நான் யார்?

இரவு நேரம். மின் விளக்கு நின்று விட்டது. ராகவன் என்னைக் கையில் எடுத்தான். உடனே அவன் தங்கை வசந்தி சமையல் அறைக்குச் சென்று



தீப்பெட்டியை எடுத்து வந்தாள். தீக்குச்சியை உரசி என் தலையில் வைத்தாள்.

ஐயோ....! என் தலை எரிகிறதே! ஆ! ஐயோ! இப்போது என் உடல் எரிகிறதே....! உடலில் பாதி எரிந்து விட்டதே! மீதியும் எரிந்து, ஐயோ.... நான் இறக்கப் போகிறேனே! ஆ! இதோ இறந்துவிட்டேனே!

நான் யார் தெரிகிறதா?

நான்தான் மெழுகுவர்த்தி!

— எம்.எஸ். கணேஷ் (5862), தஞ்சை

பாரப் பொருளாகவும் ஆக்கிக் கொண்டிருப்பதை உணர்ந்து கொண்டான்.

இதை வளரவிடக் கூடாது! முறியடிக்க வேண்டும்! அப்பாவைத் திருத்துவதற்காக மட்டுமல்ல —

உண்மையை நிலைநாட்டுவதற்காகவும்தான்!

அவன் ஒரு முடிவுக்கு வந்தான்.

அவனிருந்த இடத்துக்கு இளைஞனைக் கூட்டிக் கொண்டு வந்தார்கள். அவர்களைச் சுற்றிப் பெரும் கூட்டம்!

கூட்டத்திலுள்ள ஒருவர் அந்த இளைஞனிடம் சொன்னார்: "நடந்தது நடந்துவிட்டது சார்! காரைத் தவறுதலாக ஓட்டி, பையன் மீது மோதி விட்டீர்கள்! எங்களுக்கு கோர்ட், வழக்கு என்று போகத் தெரியும். ஆனாலும், வீண் அலைச்சல் எதற்கு என்றுதான் யோசிக்கிறோம். பாவம்! உங்களுக்கும் சிரமம் வேறு! வீணாகப் பல வேலைகள் கெட்டுவிடும். அதனாலேதான், இந்த முடிவுக்கு வந்திருக்கிறோம். அடிபட்ட பையனுடைய அப்பாவின் வேண்டுகோளை உங்களிடம் ஏற்கெனவே சொல்லி விட்டோம். என்ன முடிவுக்கு வந்திருக்கிறீர்கள் என்பதை நீங்கள்தான் சொல்ல வேண்டும்!"

எல்லோரும் ஆர்வமாக இளைஞனையே பார்த்துக் கொண்டிருந்தார்கள், அவனது பதிலுக்காக.

இளைஞனின் முகம் வெளிறிப் போயிருந்தது. "என் அப்பாவிடம் சொல்லி எப்படியாவது நீங்கள் கேட்ட தொகையை வாங்கித் தருகிறேன். இந்தப் பையனை இப்போதே ஆஸ்பத்திரிக்கு என் காரிலே கொண்டு செல்வோம்" என்றான் அவன்.

படுத்தவாறேஇவைகளையெல்லாம் ஒன்றுவிடாமல் கவனித்துக் கொண்டிருந்த ஆனந்தன் —

'திடும்' என எழுந்து உட்கார்ந்தான்.

"ஐயோ என் மகனே! எப்படியடா ஆனந்தா இருக்கிறாய்? என் செல்வமே! ரொம்ப வலிக்கிறதாடா கண்ணு?" என்று திடீர்ப் பாசம் மேலிட தன் தலையைத் தடவிக் கொடுத்து, தன்னைக் கட்டிப் பிடித்து



ஏண்டா நான் கொடுத்த பழைய வீட்டுக் கணக்கைப் போடாம வேறேஏதோ ஒருகணக்கைப்போட்டுட்டு வந்திருக்கே...?

நாங்க புது வீட்டுக்குக் குடிமாறிட்டோம் சார்...!

அழும் அப்பாவை அலட்சியமாக விலக்கினான்.

பாவம்! நடிகராகி இருந்திருந்தால், இத்தனை வருடங்களில் நன்றாகச் சம்பாதித்திருப்பார்!

"என்னைக்... கொ...ஞ்...ச...ம்... பேச விடுங்கள்!" என்றான். குரல் மெதுவாகத்தான் ஒலித்தது.

அனைவரும் இளைஞனை விட்டுவிட்டு இப்போது ஆனந்தனையே பார்த்தார்கள்.

"நடந்தது... என்னவென்று... நானே... சொல்...கி...றேன்!" பலவீனத்தாலும், வலியாலும் தொடர்ச்சியாக அவனால் பேச முடியவில்லை. இடைவெளி விட்டுவிட்டுத்தான் பேச முடிந்தது. "காரை... ஓட்டிவந்த... இவர்... மீது... எந்தவிதமான... தப்பும் கிடை...யா...து!"

கூட்டம் 'ஆ'வென வாயைப் பிளந்தது!

அப்பா ஆனந்தனை அதட்டினார். "டேய்! டேய்! ஆனந்தா! கீழே விழுந்து அடிபட்டதிலே உனக்கு மூளையும் குழம்பி விட்டதாடா? பார்த்தீர்களா ஐயா! இந்த விபத்தால் இவனது உடம்பில் மட்டும்தான் பாதிப்பு என்று நினைத்தேன். ஆனால், மூளையிலும் கோளாறு ஏற்பட்டுவிட்டதே! இதற்கும் சேர்த்தே அவரிடம் நஷ்டஈடு கேளுங்கள்!..."

ஆனந்தன் இலேசாகச் சிரித்தான். "அப்பா! நான்... நன்றாகத்தான் இருக்கிறேன். என மூளையும் ஒன்றும் குழம்பி விடவில்லை. ஐயாமார்களே! நன்றாகக் கேட்டுக் கொள்ளுங்கள்! நானாக வேண்டுமென்றுதான் இவரது காரின் முன்பு விழுந்தேனே தவிர,

இவர் என் மீது மோதவில்லை. பாவம் இவர்! குற்றமெல்லாம் என் மீதே இருக்க, அப்பாவியான இவர் மீது பழி சுமத்துகிறீர்களே?''

இளைஞனின் முகம் 'குப்'பென மலர்ந்து பிரகாசமடைந்தது.

கூட்டத்திலிருந்த ஒருவர் ஆனந்தனிடம், ''நீயாகக் காரின் முன்பு விழுந்தாயா, ஏன்?'' என்று கேட்டார்.

''ஏனென்று கேட்கிறீர்கள்? எனக்கோ படிப்பு சரியாக வரவில்லை. தேர்வுகளில் தோல்வியடைந்து தோல்வியடைந்து பின்னரே தேர்ச்சியடைந்தேன். அவ்வாறு தேர்ச்சியடைந்தாலுங்கூட, தேர்ச்சிக்குரிய குறைந்த அளவு மார்க்குகள்தான் வாங்கியிருந்தேன். எனவே, மேலும் படிக்க எனக்கு விருப்பமில்லை! என் அப்பா இதைக் காரணமாகக் கொண்டு சதா என்னைத் திட்ட ஆரம்பித்தார். இரவு பகலாக வேலைக்கு அலைந்தேன். வேலை எதுவும் எனக்குக் கிடைக்கவில்லை. அப்பாவின் திட்டுக்களும் அதிகமாகிவிட்டன. இதனால் வெறுப்படைந்த நான், சாக முடிவு செய்தேன்...''

கூட்டம் மொத்தமும் ஆனந்தன் சொல்வதை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தது.

"குற்றம் என் மீதுதான். ஆனால் பழி இவர் மீது விழுந்துவிட்டது. ஆனால் உண்மையில் இவர் எந்தத் தப்பும் செய்யாதவர்! எல்லாத் தப்புமே என் மீதுதான்.''

கூட்டத்தினர் தர்மலிங்கத்தைச் சூழ்ந்து கொண்டு, அவரைத் திட்ட ஆரம்பித்து விட்டார்கள். பின்பு கலைந்து செல்ல ஆரம்பித்தார்கள்.

தர்மலிங்கத்தின் முகம் தொங்கிப் போயிற்று.

ஆனந்தனை நன்றிப் பெருக்கோடு பார்த்தான் அந்த இளைஞன். ''தம்பி! தகுந்த சமயத்தில் உண்மையைச் சொல்லி என்னைக் காப்பாற்றினாய்! உன்னை நான் மறக்கவே மாட்டேனப்பா. உன் பெயர் என்ன? உன் வீடு எங்கே இருக்கிறது? முதலில் டாக்டரிடம் போவோம். பிறகு, உன் வீட்டிலே கொண்டு போய்ச் சேர்க்கிறேன்'' என்று அன்புடன் கூறினான்.

ஆனந்தன் தன் பெயரையும் வீட்டு முகவரியையும் கூறி, ''லேசான சிராய்ப்புத்தான். இதற்கு டாக்டர் எதற்குங்க? என் அம்மா பச்சிலை மருந்தை அரைத்துப் போட்டுக் குணப்படுத்தி விடுவாள். நீங்கள் கவலையில்லாமல் போய் வாருங்கள்'' என்றான் ஆனந்தன்.

கடுவன்பூனை போல்முகத்தைவைத்துக் கொண்டு வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார் தர்மலிங்கம். அதைப் பார்த்ததுமே, தனக்கு வீட்டில்எத்தகையபலமானவரவேற்பு காத்திருக்குமென்று ஆனந்தன் புரிந்து கொண்டான். ஆனாலும், அதைப் பற்றி அவன் கவலைப்படவில்லை.

புன்னகையுடன் கையசைத்து இளைஞனுக்கு விடைகொடுத்தான். கார் கிளம்பியது.

மறுநாள்.

ஆனந்தனின் வீட்டின்முன் ஒருகார் வந்து குலுங்கி நின்றது. அதிலிருந்து இறங்கினான் முதல்நாள் சந்தித்த அந்தப் பணக்கார இளைஞன்.

ஆனந்தன் மகிழ்ச்சியோடு அவனை வரவேற்றான்.

''ஆனந்தா! நேற்று நடந்ததையும், என்னை நீ அக்கும்பலிலிருந்து தக்க சமயத்தில் காப்பாற்றியதையும் என் அப்பாவிடம் விவரமாகச் சொன்னேன். என் அப்பாதான் இந்த ஊரிலுள்ள 'சசிகலா அண்ட் கோ'வின் முதலாளி. வேலையில்லாமல் நீ மனம் நொந்து போனதை என்னிடமிருந்து கேள்விப்பட்ட அவர், நானும் கேட்டுக் கொண்டதற்கிணங்கி, உனக்கு எங்கள் கம்பெனியிலேயே ஒரு வேலை தர முடிவு செய்துவிட்டார். மகிழ்ச்சிதானே? இதோ, வேலை நியமன உத்தரவு! நாளைக்கே நீ சேரலாம்!'' என்றவாறே அந்த இளைஞன் தட்டச்சு செய்த ஒரு கடிதத்தையும், உறையையும் ஆனந்தனிடம் தந்தான்.

பின்பு விடைபெற்றுக் கொண்டான்.

ஆனந்தன் மகிழ்ச்சி பொங்க, தன் அப்பாவைப் பார்த்தான்.

அவரோ —

தலை குனிந்து கொண்டார்.

எதற்கு என்றுதான் நமக்கெல்லாம் தெரியுமே!

கிரேக்க நாட்டுக் கதை

பிறந்த மண்ணுக்குப் பெருமை சேர்த்தவன்



தமிழில்: எச். கிருஷ்ணமூர்த்தி

உலகப்புகழ்பெற்றஓட்டத்தைப் பற்றி ஒரு கதை. புகழ்பெற்ற ஒரு போரைப் பற்றியும் இந்தக் கதை சொல்லுகிறது.

ஒரு காலத்தில் பாரசீக நாட்டு மக்கள்சிறந்தபோர்வீரர்களாகவிளங்கினர். அந்த நாட்டு அரசர்கள் பெரிய பெரிய படைகளைத் திரட்டினர். அண்டை அயல் நாடுகளோடு போரிட்டு அவற்றைக் கைப்பற்றினர். சிறிய நாடுகளை மட்டும் அல்லாமல், எகிப்து போன்ற பெரிய நாடுகளையும் வென்று அவர்கள் பாரசீக சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்தினர்.

தேரியஸ் என்பவன் பாரசீக அரசனாக முடிசூட்டிக் கொண்டான். அவன் தோள் வலிமை மிக்கவன். சிறந்த படைத் தலைவன். அவன் பாரசீகப் படையை மேலும் பலமுள்ளதாக்கினான். பல யுத்தங்களில் ஈடுபட்டான். வெற்றிகளைக் குவித்தான். தேரியஸின் புகழ் எல்லா நாடுகளிலும் பரவியது.

கிரேக்க நாட்டைச் சேர்ந்த ஏதென்ஸ் நகர வாசிகளும், மற்ற நகர வாசிகளும் தேரியஸின் ஆற்றலைக் கேட்டு அச்சப்பட்டனர். தங்களுடைய இனிய தாய்நாட்டைக் கைப்பற்றவும் தேரியஸ் வரக்கூடும் என்று அவர்கள் அஞ்சினர்.

கிரேக்க நாட்டுக் கடற்கரை. கோடைக் காலம். ஒரு நண் பகல். கடற்கரையைக் காவல் செய்யும் கிரேக்க வீரர்கள் அடுத்து இருந்த ஏதென்ஸ் நகரை நோக்கி வேகமாக ஓடினர். ஒரு பயங்கரச் செய்தியை அறிவிப்பதற்காக அவர்கள் ஓடினர். செய்தி இதுதான் — "பாரசீகக் கப்பல்கள் கடல் கடந்து வந்துள்ளன. மாரத்தான் என்னும் ஊரில் பாரசீகப் போர்வீரர்கள் இறங்கி, கூடாரம் அடித்துள்ளனர்."

செய்தியைக் கேட்ட ஏதென்ஸ் நகர மக்கள் பரபரப்படைந்தனர். ஏனென்றால், மாரத்தானுக்கும் ஏதென்சுக்கும் இடையே சுமார் இருபத்தைந்து மைல்

இடைவெளிதான் இருந்தது. அவர்கள் தங்களுடைய வழக்கமான வேலைகளை நிறுத்தினர். ஏதென்ஸ் நகர மைதானத்தில் ஒன்று கூடினர். தாய் நாட்டுக்கு வந்துள்ள ஆபத்தைச் சமாளிக்க என்ன செய்ய வேண்டும் என்று விவாதித்தனர். பலவித ஆலோசனைகள் கூறப்பட்டன. "நேராகமாரத்தான் நகருக்குச் சென்று, பாரசீகப் படைகளை அங்கேயே தாக்குவது நல்லதா? அல்லது, பாரசீக வீரர்கள் ஏதென்சுக்குள் புகும் வரையில் காத்திருப்பது நல்லதா?'' என்று பல்வேறு கோணங்களில் அவர்கள் பிரச்னையை விவாதித்தனர்.

கடைசியில் இரண்டு விஷயங்களை அவர்கள் முடிவு செய்தனர். முதலாவது, ஏதென்ஸ் நகரக் காவல் படை சிறியது. அதை வலுப்படுத்த வேண்டும். அதற்காக, கிரேக்க நாட்டின் இன்னொரு நகரமான ஸ்பார்ட்டாவுக்கு அவசர உதவி கேட்டு ஒரு தூதனை அனுப்ப வேண்டும். இரண்டாவது, மாரத்தானை நோக்கி முன்னேறி, தங்கள் உயிரினும் இனிய நகரமான ஏதென்சை எதிரிகளிடமிருந்து காப்பாற்ற வேண்டும். மேலும் ஸ்பார்ட்டா வீரர்கள் வந்து சேரும் வரைக்கும், பாரசீகப் படையை வழியிலேயே தடுத்து நிறுத்துவது என்றும் தீர்மானித்தனர்.



ஸ்பார்ட்டா படை வீரர்கள் விரைவில் உதவிக்கு வந்தாலொழிய, பாரசீக வீரர்களை நீண்ட நாட்கள் தனியாக எதிர்த்து நிற்பது முடியாத காரியம் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். மேலும், பாரசீகர்கள் முதலில் ஏதென்ஸ் நகரத்தைக் கைப்பற்றி விட்டால், பிறகு கிரேக்க நாடு முழுவதையும் பிடித்து விடுவார்கள் என்பதும் அவர்களுக்குத் தெரியும்.

இந்தக் கதை நடந்த ஆண்டு கி. மு. 490. அந்தக் காலத்தில் செய்திகளைத் தொலை தூரத்தில் உள்ள ஊர்களுக்கு அனுப்ப வேண்டுமானால், அதிவேகமாக ஓடக்கூடிய ஓர் ஆள் மூலம் அவற்றை அனுப்பினார்கள். அந்த ஏற்பாட்டைத் தவிர வேறு எந்த வசதிகளும் அப்போது இருக்கவில்லை.

ஏதென்சுக்கும், ஸ்பார்ட்டாவுக்கும் இடைப்பட்ட தூரம் நூறு மைல்களுக்கும்அதிகம்.பாதைகரடுமுரடாகவும், மலைப் பிரதேசமாகவும் இருந்தது. அந்த மகத்தான காரியத்தைப் பொறுப்பாகச் செய்து முடிக்க யாரை அனுப்பலாம்என்றுஏதென்ஸ்மக்கள் யோசித்தனர். கடைசியில், அத்தகைய பொறுப்பு வாய்ந்த ஓர் இளைஞனைத் தேர்ந்தெடுக்கும் வேலை ஏதென்ஸ் நகர முதியோர் குழுவுக்கு விடப்பட்டது.


நாட்டைக் காக்கும் நல்ல பணியில் தங்களுக்கும் ஒரு முக்கிய பங்கு இருக்க வேண்டும் என்று ஏதென்ஸ் நகர இளைஞர்கள் கருதினர். ஆகவே, அவர்கள் ஒவ்வொருவரும் தனக்கே அந்தப் பெருமை தரப்பட வேண்டும் என்று போட்டியிட்டனர். இளைஞர்களிடையே பெருத்த பரபரப்பு ஏற்பட்டது. ஸ்பார்ட்டாவுக்கு அவசரச் செய்தியை எடுத்துச் செல்லும் பொறுப்பை ஏற்க அவர்கள் துடிதுடித்தனர். கடைசியில், அந்தக் கடுமையான ஓட்டத்திற்கு பெய்டிப் பிடிஸ் என்னும் பெயருள்ள இளைஞனைத் தேர்ந்தெடுத்துள்ளதாக முதியோர்கள் அறிவித்தனர்.

ஆரவாரத்தோடு மக்கள் அந்த

விமானத்தில் பயணம் செய்யாதவர்!

மகாத்மா காந்தி அமெரிக்காவுக்குச் சென்றதே இல்லை. அமெரிக்கா அழைத்த போது கூட அதை ஏற்க மறுத்து விட்டார். மகாத்மா காந்தி பற்றி இன்னொரு செய்தி. அவர் விமானத்தில் பயணம் செய்ததே இல்லை. அவரது தென்னாப்பிரிக்கப் பயணம், இங்கிலாந்துப் பயணம் எல்லாம் கப்பலில்தான். இந்தியப் பயணம் முழுவதும் புகை வண்டியில்.

— ஏ. கே. நாசர்.



முடிவை வரவேற்றனர். பெய்டிப் பிடிஸ் வயதில் சிறியவன். இளைஞன். அவனுக்குக் கட்டுறுதியான உடல். அழகான தோற்றம். பிறந்த மண்ணை நேசிக்கும் பெரிய உள்ளம் கொண்டவன். எதிரிகளிடமிருந்து ஏதென்சைக் காப்பாற்றுவதற்காகத் தன் உயிரைக் கொடுக்கவும் அவன் தயாராக இருந்தான். நூறு மைல்களுக்கும் அதிகமான தூரத்தை மிகக் குறைந்த காலத்தில் ஓடிக் கடக்க வேண்டும் என்று அவனுக்குத் தெரியும். மேலும், காலத்தோடு போட்டி போட்டுக் கொண்டு ஓட வேண்டும் என்பதும் அவனுக்குத் தெரியும். முதியோர்கள் தனக்கு அளித்த அந்தப் பொன்னான வாய்ப்பை, பெய்டிப் பிடிஸ் மகிழ்ச்சியோடும், நன்றியோடும் ஏற்றான்.

பெய்டிப் பிடிஸ் ஒரே சீராக ஓடினான். நீண்ட அடி வைத்து ஓடினான். ஸ்பார்ட்டாவுக்குப் போகும் பாதையில் அவன் ஓடிக் கொண்டே இருந்தான். பகலெல்லாம் ஓடினான். இரவெல்லாம் ஓடினான்.

அவனுக்குக் கை, கால்கள் களைத்துப் போயின. உடல் ஓய்வு கேட்டது. இளைப்பாறும்படி உள்ளமும் அடிக்கடி சொல்லியது. ஆனால், அவனுக்கு உறுதி அதிகம். தான் ஓய்வு எடுத்துக் கொள்வதை விடத் தனக்கு இடப்பட்டுள்ள பணியை நிறைவேற்றுவது எவ்வளவு அவசியமானது, அவசரமானது என்பதை அடிக்கடி நினைவுபடுத்திக் கொண்டான். பாரசீகர்களிடமிருந்து ஏதென்சைக் காப்பாற்ற வேண்டுமானால், தக்க சமயத்தில் அவன் ஸ்பார்ட்டா நகர மக்களின் உதவியைப் பெற்றுக் கொண்டு வர வேண்டும். அதை அவன் நன்றாக உணர்ந்திருந்தான்.

துணிச்சலும், விடாமுயற்சியும் கொண்ட பெய்டிப் பிடிஸ் ஓடிக் கொண்டே இருந்தான். நூறு மைல்களுக்கும்மேற்பட்ட தூரத்தை இரண்டு நாட்களுக்கும் குறைவான நேரத்தில் அவன் கடந்தான்.

தள்ளாடிக் கொண்டே அவன் ஸ்பார்ட்டா நகரத்தில் நுழைந்தான். நீண்ட ஓட்டத்தின் களைப்பும், இலக்கை அடைந்துவிட்டோம் என்ற சந்தோஷமும் மேலிட அந்த இளைஞன் பெருமூச்சு விட்டுக் கொண்டே பேசினான்: — ''பாரசீகப் படை வீரர்கள் வந்துள்ளனர்! மாரத்தானில் இறங்கியுள்ளனர்! உங்கள் உதவி தேவை!''

அவன் பேசி முடிப்பதற்குள் ஸ்பார்ட்டா மக்கள் போர்க் குரல் எழுப்பினர். உற்சாகமாகத் தங்கள் ஒத்துழைப்பையும், ஆதரவையும் அறிவித்தனர்.

செய்தியை அவர்களுக்குச் சொன்ன பிறகு, சிறிது நேரமே அவன் ஓய்வு எடுத்துக் கொண்டான். ஏதென்சை நோக்கி மறுபடியும் தன் நீண்ட ஓட்டத்தைத் தொடங்கினான். வழியில் நிற்காமல் ஓடி, ஏதென்சை அடைந்தான். ஸ்பார்ட்டா மக்கள் உற்சாகமாக உதவி செய்ய வருவதை எடுத்துக் கூறினான்.

ஸ்பார்ட்டா நகரிலிருந்து உதவிப் படை வருகிறது என்று அறிந்ததுமே, ஏதென்ஸ் வீரர்களுக்கு ஒரு புதிய

சக்தி பிறந்தது. அவர்கள் பொங்கி எழுந்தனர். பாரசீகப் படை இறங்கியிருந்த மாரத்தானை நோக்கி அணி வகுத்துச் சென்றனர். வழியில் ஒரு மலை இருந்தது. அதன் உச்சிக்கு ஏறிக் கீழே நோக்கினர்.

மலைக்கு அப்பால் பெரிய சமவெளி. சமவெளியில் எண்ணற்ற கூடாரங்கள். கூடாரங்கள் மீது பாரசீகக் கொடிகள் கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தன. வீரத்திற்கும், வெற்றிக்கும் புகழ்பெற்ற பாரசீகப் படையினர் கிரேக்க மண்ணில் இறங்கி, முகாமிட்டிருந்தனர். தங்களை விட எதிரிகளின் எண்ணிக்கை பல மடங்கு அதிகம் இருப்பதை ஏதென்ஸ் வீரர்கள் ஒரு நொடியில் புரிந்து கொண்டனர். கூடாரங்களுக்கு அப்பால் தொடுவானில் கடல் தெரிந்தது. அங்கே பாரசீகக் கப்பல்கள் நங்கூரம் பாய்ச்சி நின்றிருந்தன.

பாரசீக வீரர்கள் சிறந்த வில்லாளிகள். இலக்கைக் குறி வைத்து அம்பு எய்வதில் நிபுணர்கள். அவர்களுடைய படை மிகவும் பெரியதாக இருந்தது. மேலும், சமவெளியில் போர் செய்வது அவர்களுக்குக் கைவந்த கலையாக இருந்தது.

ஏதென்ஸ் வீரர்களோ ஈட்டி, வேல் முதலிய ஆயுதங்களை எறிந்து போரிடுவதில் வல்லவர்கள். மேலும் அவர்களுக்கு மலைப்பிரதேசங்களில் சண்டை செய்து அனுபவம் அதிகம்.

பாரசீகர்களுடைய ஒரே பலவீனம் மலைப்பகுதியில் சண்டை செய்ய முடியாததுதான். ஆகவே, "போர் செய்வதற்கு ஏற்ற இடம் சமவெளி அல்ல; மலைப் பகுதியே!" என்று ஏதென்ஸ் வீரர்கள் முடிவு செய்தனர்.

மலை உச்சியில் இருந்தவாறே ஏதென்ஸ் படையினர் இடி முழக்கம் போலப் போர்க்குரல் எழுப்பினர். அதைக் கேட்ட பாரசீகப் படையினர் அம்பும், வில்லும் தாங்கி, மலை உச்சியை



நோக்கி அணி அணியாகப் பாய்ந்தனர். ஏதென்ஸ் படையினர் கீழ் நோக்கி இறங்கினர். மலைச் சரிவில் இரு படைகளும் மூர்க்கத்தனமாக மோதிக் கொண்டன.

ஏதென்ஸ் படையினரின் ஆவேசமான 'தாக்குதலைப் பாரசீக வீரர்களால் சமாளிக்க முடியவில்லை. கீழ் நோக்கிப் பாய்ந்த வேல்களின் வேகத்திற்கு ஈடாகப் பாரசீகர்களால் அம்புகளை மேல்நோக்கிச் செலுத்த முடியவில்லை. பாரசீகப் படை குழப்பமடைந்து, சிதறியது. அவர்கள் பின்வாங்கினர். தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காகக் கப்பல்களை நோக்கி ஓடினர். கிரேக்க நாட்டுக் கடற்கரையை விட்டுக் கப்பல்கள் நகர்ந்தன.

ஸ்பார்ட்டா வீரர்கள் உதவிக்கு வந்த போது, மாரத்தான் நகரத்தில் சண்டை முடிந்திருந்தது. வெற்றிக்கு மேல் வெற்றியாகக் குவித்த பாரசீகர்கள் முதல் முறையாகத் தோல்வியுற்றுப் புறமுதுகு காட்டியிருந்தனர். ஏதென்ஸ் நகரமும், கிரேக்க நாடும் பாரசீகப் படையிடமிருந்து காப்பாற்றப்பட்டிருந்தன.

கிரேக்க வீரர்கள் வெற்றிக் களிப்பில் மிதந்தனர். தாய்நாட்டைக் காப்பாற்றிய சந்தோஷம் ஒரு பக்கம். மாபெரும் எதிரியைத் தோற்கடித்த சந்தோஷம் இன்னொரு பக்கம். வெற்றி விழா எடுக்கும் நேரத்தில் அவர்கள் வீர இளைஞனை பெய்டிப்பிடிஸை மறக்கவில்லை. வீர வரலாறு படைத்த அவனை அவர்கள் மனமாரப் பாராட்டினர்.

மேலும், தங்களுடைய மகத்தான வெற்றிச் செய்தியை மாரத்தானிலிருந்து ஏதென்ஸ் நகரத்திற்கு எடுத்துச் செல்லும் பெருமையையும் அந்த வீர இளைஞனுக்கே அளிக்க வேண்டும் என அவர்கள் தீர்மானித்தனர்.

நீண்ட ஓட்டத்தினால் பெய்டிப்



பிடிஸுக்கு உடல் சோர்ந்திருந்தது. ஆனால், உள்ளம் சோர்ந்திருக்கவில்லை. வீரர்களுடைய வேண்டுகோளை அவன் விருப்பத்தோடு ஏற்றான். மறுபடியும் அவன் தனது நீண்ட அடிகளை எடுத்து வைத்து மாரத்தான் நகரிலிருந்து ஏதென்ஸ் நகரை நோக்கி மின்னலென விரைந்தான். இடையில் இருந்த சுமார் 25 மைல் தூரத்தை மிகக் குறுகிய காலத்தில் கடந்தான்.

அவனுக்கு மூச்சு இரைத்தது. உடல் தள்ளாடியது. உள்ளத்தில் உறுதியோடு அவன் ஏதென்ஸ் மாநகரை அடைந்தான். அவனிடமிருந்து செய்திகளைக் கேட்க, ஒரு பெரிய கூட்டமே கூடியது.

"பாரசீகர்களைத் தோற்கடித்தோம்!
பிறந்த நாட்டைக் காத்தோம்!" — என்ற இரண்டே வரிகளை மெதுவான குரலில் அவன் சொன்னான். சொல்லி முடித்ததும், அவன் மண்ணில் சாய்ந்தான். அவனுடைய உயிர் பிரிந்தது. தான் பிறந்த மண்ணைக் காப்பாற்றுவதற்காக அந்த வீர இளைஞன் தன் கடைசி மூச்சு உள்ள வரையில் உண்மையாகப் பாடுபட்டான்.

கிரேக்க நாட்டு மக்கள் அந்த இளைஞனைப் பாராட்டினர்; புகழ்ந்தனர்; போற்றினர். கால வெள்ளத்தில் அவனுடைய பெயர் அழியாமல் இருப்பதற்காகக் காலத்தை எதிர்த்து அவன் ஓடிய ஓட்டத்தை ஒரு வீர காவியமாக எழுதி வைத்தனர். இன்றைக்குக் கூட நீண்ட தூரம் ஓடும் பந்தயத்தை மாரத்தான் பந்தயம் என்று பெயரிட்டு அந்த வீர இளைஞனின் நினைவைப் போற்றுகின்றனர்.

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் சர்வதேச விளையாட்டுப் போட்டியான ஒலிம்பிக் ஆட்டங்களிலும் அந்த வீர இளைஞனுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாரத்தான் ஓட்டம் சேர்க்கப்பட்டுள்ளது. இப்போது மாரத்தான் போட்டியில் ஓட வேண்டிய தூரம் 26 மைல் 385. கெஜம் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



ஆண்டுதோறும் நடைபெறும் சாரணர் முகாமை, இந்த வருடம் ஒரு தேசிய ஒருமைப்பாட்டுச் சிறப்பு முகாமாக நடத்துவது என்று முடிவு செய்திருந்தார்கள். அதில் கலந்துகொள்வதற்கு நாட்டின் பல மாநிலங்களில் இருந்தும் சாரணர்கள் வந்திருந்தனர்.

பிற மாநிலங்களில் உள்ள கலை, பண்பாடு பழக்கவழக்கங்களைப் புரிந்து கொள்ளவும், ஒருவரோடு ஒருவர் பழகி ஒற்றுமை உணர்வுகொள்ளவும், இது ஒரு வாய்ப்பாக அமையும் என்ற உயர்ந்த நோக்கத்துடனேயே அந்த முகாமுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

முகாமில் கலந்து கொள்ளும் சாரணர்கள் தங்குவதற்கு ஒரு பள்ளிக் கூடத்தை அமர்த்தி இருந்தனர்.

முதல் நாள் முகாமில் மோகனும், அவனது நண்பர்களும் தங்கள் மாநிலத்தைச் சேர்ந்தவர்களோடு மட்டுமே பழகுவதையும், அவர்களைத் தனியே பிரித்துக் கொண்டு ஒரு தனி வட்டத்தை உருவாக்குவதையும் கவனித்தார், அந்த முகாமின் பொறுப்பாளரான மோகனின் தலைமையாசிரியர். ஆனாலும், அப்போது அவர் அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

அன்று மாலை, கலை நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. ஒவ்வொரு மாநிலத்தைச் சேர்ந்த சாரணர்களும் மேடைக்கு வந்து, ஒரு நடனத்தையோ அல்லது தங்கள் மாநிலத்தின் பண்பாட்டை விளக்கும் ஒரு சிறு நாடகத்தையோ நடித்துக் காட்டினர்.

தங்கள் மாநிலத்தைச் சேர்ந்தவர்களின் கலைநிகழ்ச்சி மேடையில் நடைபெற்ற போது மோகனும், அவனது நண்பர்களும் கைகளைத் தட்டி, ஆரவாரித்துத் தங்கள் பாராட்டையும் மகிழ்ச்சியையும் தெரிவித்தனர்.

அடுத்து இன்னொரு மாநிலத்தைச் சேர்ந்த சாரணர்கள் விதவிதமான வண்ண உடைகளை அணிந்துகொண்டு ஓடுவது போலவும், துள்ளுவது போலவும் ஒரு நடனத்தை ஆடிய போது பெரும் கேலிச் சிரிப்பொன்று மோகனிடம் இருந்து எழுந்தது.

“என்னப்பா இது, இவங்க எல்லாம் டான்ஸ் ஆடறாங்களா, இல்லை, சர்க்கஸ் பண்றாங்களா?” என்றான் சத்தமாக.

அதைக் கேட்டதும் அவனது நண்பர்கள் ஹோவென்று சிரித்தனர்.

அந்தக் கேலிச் சிரிப்பு அந்த மாநிலத்தைச் சேர்ந்த சாரணர்களின் மனத்தை மிகவும் புண்படுத்தி இருக்க வேண்டும்:

இப்படியே மற்ற மாநிலச் சாரணர்கள் மேடையில் தோன்றிய போதும் இவர்கள் கேலியும் கிண்டலும் செய்து சத்தமிடலாயினர்.

மொத்தத்தில் ஒரு வேற்று மனப்பான்மை அவர்களிடையே உருவாவதைத் தலைமையாசிரியர் கவனித்தார். இத்தனைக்கும் காரணம் தன் பள்ளி மாணவனை மோகன் என்பதை நினைத்து அவருக்கு மிக்க வருத்தம் ஏற்பட்டது.

அவர் அவனைத் தன்னோடு தனியாக வரும்படி அழைத்துச் சென்று, "மோகன், மொழி நமக்கு ரொம்ப இனிமையாக இருக்கலாம், நம்முடைய கலை நமக்குச் சிறப்பாகப் படலாம். பண்பாடு உயர்ந்ததாகத் தோன்றலாம்... அதற்காகப் பிறரது கலைகளையும், பண்பாடுகளையும் அவமரியாதை செய்வது எந்த வகையிலும் சரியில்லை. எத்தனை வித்தியாசங்கள் இருந்தாலும் உணர்வினால் ஒன்றுபட வேண்டிய நாம் வேற்று மனப்பான்மைகளை மனத்திலே வளர்த்துக்கொள்ளக் கூடாது. அதிலும் நம் பள்ளி மாணவனை நீ, அப்படியொரு சூழ்நிலை உருவாவதற்குக் காரணமாகக் கூடாது. ஒழுக்கத்தையும், ஒற்றுமையையும் நிலை நாட்ட வேண்டிய சாரணர் இயக்கத்தைச் சேர்ந்த நீயே இப்படிக் குறுகிய எண்ணங்களுக்கு இடம் தரலாமா? இந்த முகாமின் நோக்கத்தைப் புரிந்து நடந்து கொள்" என்று கண்டித்தார்.

"சரி, சார். இனிமேல் இப்படித் தப்புப் பண்ண மாட்டேன்" என்று நல்ல பிள்ளையாகப் பதிலளித்தான் மோகன்.

மறுநாள் அருகிலுள்ள ஒரு கிராமத்திற்குச் சென்று அங்குள்ள மக்களுக்கு உதவும் வகையில் சமூகப் பணி செய்ய வேண்டும் என்று ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டிருந்தது. அதன்படி அவர்கள் வறட்சியால் நலிந்து தண்ணீர் வசதியற்றிருக்கும் ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்தனர்.

அந்தக் கிராமத்து மக்கள் தங்கள் ஊரில் இருந்த ஒரு சிறு குளத்தில் மழை நீரைச் சேகரித்துப் பயன்படுத்தி வந்தனர். வருடத்தில் பாதி நாட்களே அதில் தண்ணீர் இருக்கும். அதுவும் மணல் மேடிட்டுப் பல இடங்களில் புற்களும் கோரைகளும் வளர்ந்து கொள்ளளவு குறைந்து போயிருந்தது. தற்போது வேனிற்காலமாதலால் தண்ணீர் இன்றிக் குளம் வறண்டு கிடந்தது. அதைத் தூர் எடுத்து, ஆழப்படுத்தி, செப்பனிடுவது என்று முடிவு செய்தார் முகாமின் தலைமைப் பொறுப்பாளர்.

மறுநாள் காலையில் முகாமினர் அந்தக்கிராமத்தை அடைந்தனர். தங்குவதற்கான கூடாரங்களை அமைப்பது, சமையல் வேலைகளைச் செய்வது, துப்புரவுப் பணியாற்றுவது மற்றும் பல தேவைகளுக்கும் தண்ணீர் கொண்டு வருவது என்று பல வேலைகள் இருக்க, எந்த வேலையை யாரிடம் ஒப்படைப்பது என்ற பிரச்னை அங்கே எழுந்தது.

அந்த முகாமில் கலந்து கொண்ட இருநூறு சாரணர்களையும் முதலில் நான்கு குழுக்களாகப் பிரிப்பது என்று முடிவாயிற்று. எப்படி அவர்களைப் பிரிப்பது?

பச்சை, மஞ்சள், நீலம், சிவப்பு என்ற வர்ண பிளாஸ்டிக் வில்லைகளை ஒரு வாளியில் இட்டு நன்றாகக் குலுக்கிக் கலந்து, அதைச் சாரணர்களிடம் வினியோகிக்க வேண்டியது. பின் மஞ்சள் வில்லைகள் கிடைக்கப் பெற்றவர்கள் ஒரு குழுவாகவும் அது போலப் பச்சை, நீலம், சிவப்பு வில்லைகள் கிடைத்தவர்கள் தனித் தனிக் குழுக்களாகவும் இயங்க வேண்டும்.

அந்த வர்ண வில்லைகளே அவர்கள் எந்தக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்பதற்கு அடையாளமாகவும் அமையும்.

வர்ண வில்லைகளை வினியோகிக்கும் பொறுப்பு மோகனிடம் ஒப்படைக்கப்பட்டது. அதைத் தனக்குக் கிடைத்த அருமையான வாய்ப்பாக எண்ணிக் களித்தான் மோகன்.

அவன் யாரும் கவனியாதவாறு, தன் நண்பர்களுக்கும், தனது மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கும் ஒரே நிற வில்லைகள் கிடைக்கும்படி பார்த்துக் கொண்டான்.

குழுக்கள் பிரிக்கப்பட்ட போது



அவன் மிகவும் சாமர்த்தியமாக, தனது மாநிலச் சாரணர்களை மீண்டும் ஒன்று திரட்டி விட்டதைக் கவனித்தார் அவனுடைய தலைமை ஆசிரியர். அவனது மனப்போக்கு அவருக்குப் பிடிக்கவில்லை. என்றாலும், அதில் தலையிட்டு ஒரு பிரச்னையை உருவாக்குவதை அவர் விரும்பவில்லை.

இப்போது எந்தக் குழுவிடம் எந்த வேலையை ஒப்படைப்பது என்று ஆன போது குலுக்கல் முறையை அனுசரிக்கும்படி சாரணர்களே வேண்டிக் கொண்டனர்.

அதன்படி மோகன் குழுவுக்குத் தண்ணீர் கொண்டு வரும் வேலை கிடைத்தது.

அவர்கள் செப்பனிட்டு, ஆழப்படுத்தும்படி தேர்ந்தெடுத்திருந்த அந்த வறண்டு போன குளக்கரையில் கூடாரங்களை அமைப்பதில் ஒரு பகுதியினர் முனைந்திருக்கச் சமையலுக்குத் தேவையான காய்கறி, அரிசி, பருப்பு இவற்றைச் சேகரிப்பதில் இன்னொரு பிரிவினர் ஈடுபட்டிருந்தனர்.

மோகனும், நண்பர்களும் குடங்களையும் வாளிகளையும் தூக்கிக் கொண்டு தண்ணீருக்காகப் புறப்பட்டனர். வறட்சியில் சிக்கித் தவிக்கும் அந்தக் கிராமத்தில் இருநூறு பேருக்குத் தேவையான தண்ணீருக்கு என்ன செய்வது...? சுமார் இரண்டு கிலோ மீட்டர்களுக்கு அப்பால் இருந்த ஓர் ஊருணியில் இருந்துதான் நீர் கொண்டு வரவேண்டும்.

உச்சி வெயில் அனலாகக் காய்ந்தது. ஒரு தடவை நீர் எடுத்து வருவதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது.

மோகனும், நண்பர்களும் மிகவும் சோர்ந்து போயினர். திடீரென்று அவர்கள் குழுவில் இருந்த ஒருவன், "என்னப்பா மோகன், நம்ம மாநிலத்தைச் சேர்ந்தவங்க என்ன தப்பு செய்தாங்கன்னு இப்படி ஒண்ணாத் திரட்டி வெயிலில் அலைய விட்டிருக்கிறாய்...? மற்ற மாநிலத்தவங்க எல்லாம் நிழலிலே உட்கார்ந்து வேலை செய்யறப்போ, நாம மட்டும் வெயிலிலே காயறோம் பாரு..." என்று சத்தமிட்

டான்.

அதைக் கேட்ட மோகன் அயர்ந்து போனான். அவன் நினைத்தது ஒன்று, நடந்தது ஒன்று. அவனால் பதில் பேச முடியவில்லை.

இன்னொரு சாரணன், ''எல்லா வேலையிலேயும் எல்லோரும் பங்கு கொள்ளும்படி செய்திருந்தால் இப்ப இந்தப் பிரச்னையே வந்திருக்காது. கஷ்டத்திலே எல்லோரும் பங்கேற்கும் போது வேற்றுமைகளும் மறந்துபோயிருக்கும், அதுக்கு வழியில்லாமல் நீ செய்திட்டியே!'' என்று குற்றம் சாட்டினான்.

மோகனுக்குத் தன் தவறு இப்போது புரிந்தது. அவன் தன் தலைமையாசிரியரை அணுகி, தண்ணீர் கொண்டு வருவதிலுள்ள சிரமத்தைச் சொல்லித் துப்புரவுப் பணி போன்று எளிதான வேலையில் ஈடுபட்டிருக்கும் குழுவிலிருந்து சிலரைத் தங்களோடு அனுப்பும்படி வேண்டிக் கொண்டான்.

சற்றுநேரம் அமைதியாக இருந்த தலைமையாசிரியர் ''ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு வேலையை நிர்ணயித்த பிறகு பிறரது வேலையையும் செய்யச் சொல்வது சரியில்லையே... வேணும்னா எல்லோரையும் அழைத்து, உங்க கஷ்டத்தைச் சொல்லி வேண்டுகோள் விடுக்கலாம்... முடிவு செய்ய வேண்டியது அவங்க பொறுப்பு'' என்றார்.

''பலப்பம் வேணும்னியே! பால் பலப்பமா? குச்சி பலப்பமா? எது வேணும்?''

''எதைக் கடிச்சா ஸ்வீட்டா இருக்குமோ, அது!''

— சுதர்ஸன்.



அது போலவே அவர் எல்லாக் குழுவினரையும் அழைத்து நிலைமையை விளக்கினார். பின் தண்ணீர் எடுத்து வருவதில் உதவுவதற்கு, பிற குழுக்களைச் சேர்ந்தவர்களும் விருப்பம் இருந்தால் முன் வரலாம் என்று கூறினார்.

அதைத் தொடர்ந்து ஒவ்வொரு குழுவிலிருந்தும் பலர் தாங்கள் உதவத் தயார் என்று முன் வந்து மோகனின் குழுவோடு சேர்ந்து கொண்டனர். அதற்கு அந்தக் குழுக்களைச் சேர்ந்த எவரும் ஆட்சேபம் தெரிவிக்கவும் இல்லை.

தலைமையாசிரியர் மோகனை அணுகி, ''மோகன், பண்பாடுகளாலும் பழக்க வழக்கங்களாலும் ஏற்படுவதல்லவேற்றுமை. 'நான்' 'எனது' என்ற குறுகிய எண்ணங்களால் நம் மனத்தில் வளருவதுதான் வேற்றுமை. இதை நீ இப்ப நல்லாப் புரிஞ்சுக்கிட்டிருப்பேன்னு நினைக்கிறேன்... வித்தியாசமாக வளர்ந்திருந்தாலும், நாம் எல்லோரும் பாரதம் என்ற ஒரே மரத்தின் கிளைகள் என்பதை மட்டும் மறந்துவிடக் கூடாது'' என்றார்.

அதை ஆமோதித்துத் தலையசைத்தான் மோகன்.

பல மாநிலங்களைச் சேர்ந்த சாரணர்களும் ஒன்றுபட்டு நின்றதால் பொதுவான அந்தத் தண்ணீர்ப் பிரச்னையை மிகவும் எளிதாகச் சமாளிக்க முடிந்தது. ஒற்றுமை உணர்வு அவர்களுக்குப் புதுச் சக்தியைக் கொடுத்தது. பிரச்னையை எதிர்நோக்கிச் சமாளிக்கும் திறனையும் தந்தது.

தாங்கள் எடுத்துக் கொண்ட வேலையை வெற்றியுடன் முடித்துவிட்டுச் சாரணர்கள் தங்கள் மாநிலங்களுக்குத் திரும்பிச் செல்லும் நேரம் வந்தபோது, ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டும், கைகளைக் குலுக்கிக் கொண்டும் பிரியா விடை பெற்றனர். பேதங்கள் மறைந்து, சகோதர உணர்வே அவர்களிடம் இப்போது மேலோங்கி நின்றது.

அதைப் பார்த்து மெய்சிலிர்த்துப் போனார் தலைமையாசிரியர். அவர் மனக்கண்ணில் பாரதத் தாய் பெருமிதத்துடன் புன்முறுவல் செய்தாள்.





மேலே இருக்கின்ற ஒவ்வொரு படமும் ஒரு பழமொழியை நினைவூட்டுகிறதல்லவா? எந்த எந்தப் பழமொழி?

விடை **80** ஆம் பக்கம்.

பிருந்தாவனக் கவியரங்கம்



பன்றி சொன்ன பாடம்

குப்பன் என்னும் சிறுவன்
குளித்திட மாட்டான் தினமும்.

காடும் மேடும் அலைவான்;
கண்ட இடத்தில் புரள்வான்.

பூனை ஒன்றைக் கண்டான்;
பெரிதும் மகிழ்ச்சி கொண்டான்.

"கூடி ஆட லாமே!
குஷியாய் வாராய்" என்றான்.

பூனை உடனே சீறி,
"போபோ மேடு ஏறி.

அங்கே உனக்கு நண்பன்
அகப்படு வான்" எனக் கூற,

அந்தச் சொல்லைக் கேட்டான்.
அங்கே ஓடிப் பார்த்தான்.

குட்டை ஒன்றில் பன்றி
குழம்பும் சேற்றில் நன்றாய்ப்

படுத்தி ருக்கக் கண்டான்.
பைய ஒதுங்கிச் சென்றான்.

"தம்பி, அருகில் வா, வா.
சற்றும் தயங்க வேண்டாம்.

குட்டை நீரில் இறங்கு;
குஷியாய் ஆடி மகிழ்வோம்."

என்று பன்றி கூற,
ஏனோ முகத்தைச் சுளித்தான்.


"சுத்தம் இல்லா என்னைச்
சொந்தம் கூறி அழைத்தாய்.

பன்றி, உன்னால் நானும்
பாடம் கற்றுக் கொண்டேன்.

இனிமேல் சுத்த மாக
இருப்பேன்" என்று நடந்தான்.

— இரா. அருண்கிருஷ்ணன் (9850), சேலம்—8.

கூடி வாழ்வோம்



ஒன்று பட்ட உலகில்
உண்டு இன்பம் கோடி;
நன்றும் இதனை அறியார்
நானி லத்தில் உண்டோ?

கூடி வாழும் கொள்கை
கோடி இன்பம் நல்கும்!
நாடே உயரும் நம்மால்
நலமே விளையும் என்றும்!

அண்ணன் தம்பி யாக
அன்பு செலுத்தி வாழ்வோம்
எண்ணம் உயர்ந்தோர் என்றும்
எதிலும் உயர்வார் திண்ணம்!

ஒருவர்க் கொருவர் உதவும்
உயர்ந்த எண்ணம் கொண்டு,
ப்ரிவு காட்டி வாழப்
பாரில் கற்றுக் கொள்வோம்!
— ஏ. எஸ். உமாமகேஸ்வரி (13,401)
செட்டிகுறிச்சி.

நல்லவனாயிரு

கோடை விடுமுறை ஓடியது; பள்ளிக்
கூடம் திறந்தாச்சு — தினம்
ஆடி யடங்கிய வாண்டுகள் யாவும்
அமைதி யடைந்தாச்சு!

வருஷம் புதுசு; வகுப்பும் புதுசு;
வாத்தியாரும் புதுசு! — நல்ல
பெரிசு பெரிசான புத்தகங்கள்; — அதில்
பாடங்களும் புதுசு!

நல்ல பிள்ளைகளை நம்பி இருக்குது
நாட்டின் எதிர்காலம்! — இன்று
நல்ல பிள்ளை யெனப் பேரெடுத்தால்
நமக்கும் அனுகூலம்!

தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை
தொத்தி வருவதுண்டு! — எனவே
கெட்ட பழக்க வழக்க மனைத்தையும்
விட்டுவிடு முயன்று!

அஞ்சில் வளையாத பிஞ்சு மரமது
ஐம்பதில் வளையாது! — சிறு
பிஞ்சிலே வெதும்பிப் பழுத்தாலும் அது
பசிக்கு உதவாது!

உழைக்கின்ற காலத்தில் ஊர்வழி போனவன்
உருப்படப் போவதில்லை; — பாடம்
படிக்கின்ற காலத்தில் படத்துக்கு அலைபவன்
பாஸ்பண்ணப் போவதில்லை.

பொன்னான காலத்தை மண்ணாக்கி விட்டுப்
புலம்புவதி லென்ன பயன்? — நல்ல
கண்ணான கடமையைத் தட்டிக் கழித்துக்
கலங்குவதி லென்னபயன்?



நல்லவ னாயிரு; நல்லவ னோடிரு;
நாளும் நலம் சேரும்! — என்றும்
வல்லவ னாயிரு; வல்லவ னோடிரு;
வையத் தலைமை வரும்!
— சுபா. கலாவதி (14,348), நாரைக்கிணறு.



அன்னை பூமி

எங்கள் தேசம் இந்தியா
பொங்கும் கீதம் பாடுவோம்;
மங்க லங்கள் எங்குமே
தங்கும் நல்ல நாடிது!

காந்தி அண்ணல் தலைமையில்
சாந்தி யான விடுதலை
பெற்று நாமும் வாழவே
பெருமையோடு உழைத்தவர்.

தங்கமான தலைவராம்
எங்கள் மாமா நேருஜி;
பங்க மின்றி நாட்டினை,
சிங்கம் போலக் காத்தவர்!

ஒருமைப் பாட்டை வளர்த்திட
உயிர் கொடுத்த தாயவள்
இந்தி ராவின் உழைப்பிலே
இந்தி யாவும் உயர்ந்ததே!

கங்கை இங்கு பாயுது;
காவி ரியும் ஓடுது-
நாளு மன்பில் கூடியே
நாவி னிக்கப் பாடுவோம்!


ஒன்று பட்டு வாழுவோம்!
நன்று கற்றுத் தேறுவோம்!
நமது நாடு வாழ்கவே!
நாளும் வாழ்த்துக் கூறுவோம்!
— எச். ஆர். சுபா (14,901), தேனி.


பாதி எங்கே?

5 மலர்ச்செடிகள். ஒவ்வொருசெடியும் இரண்டாக வெட்டி வைக்கப்பட்டுள்ளது. எதனுடன் எதைச் சேர்ப்பீர்கள்?

விடை: வேறுபக்கம்

—முருகு—





கவிதை பிறந்த கதை:



பிறந்த நாள் வாழ்த்து!

அகிலா சிவராமன்

தற்போது சென்னைத் தொலைக் காட்சி நிலைய இயக்குநராக விளங்கும் திருமதி அகிலா சிவராமன் அவர்கள், பாண்டிச்சேரி வானொலி நிலைய இயக்குநராகப் பணியாற்றிக் கொண்டிருந்த சமயம்.

வானொலி சிறுவர் பகுதியில், பிறந்த நாள் வாழ்த்துப் பகுதி ஒன்று ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. இந்தப் பகுதியில், பிறந்த நாள் வாழ்த்துப் பாடல் ஒன்று ஆங்கிலத்திலேயே பாடப்பட்டு வந்தது. இதைக் கேட்ட ஓர் அன்பர், ''சிறுவர் நிகழ்ச்சியில் ஆங்கிலத்தில் பிறந்த நாள் வாழ்த்துப் பாடுவதற்குப் பதிலாகத் தமிழில் பாடினால் பொருத்தமாக இருக்குமே'' என்று கடிதம் எழுதியிருந்தாராம்.

இந்தக் கடிதம் இயக்குநரின் கவனத்தைக் கவர்ந்தது. உடனே அவர் பிறந்த நாளுக்குப் பொருத்தமான பாடலை எழுத முனைந்தார். பாட்டுப் பிறந்தது. பரவசம் ஆனார்.

அந்தப் பாடல்:

இன்று உந்தன் பிறந்த நாள்
இன்ப மான நல்ல நாள்,
அன்பு நெஞ்சம் வாழ்த்தும் நாள்,
அனைவ ருக்கும் இனிய நாள்,

வாழிய வாழிய வாழியவே!
வாழ்க பல்லாண்டுகள் வாழியவே
வளமொடு திடமுடன் வாழியவே
வானுள்ளளவும் வாழியவே!

இந்தப் பாட்டை எழுதி, குழந்தைகளிடம் கொடுத்துப் பாடச் சொன்னார். அவர்களும் ராகத்துடன் பாடினார்கள். கவிஞருக்குத் திருப்தியாக இருந்தது. உடனே சிறுவர் பகுதியில், ஆங்கிலப் பாடலுக்குப் பதிலாக இந்தப் பாட்டை ஒலிபரப்பச் செய்தார். எல்லோரும் பாராட்டினார்கள்.



இன்றைக்குங்கூட இந்தப் பாட்டு அங்கே குழந்தைகளை வாரந்தோறும் வாழ்த்திக் கொண்டிருக்கிறது!

இவர் இயற்றிய 'சிறுவர் கவிதைச் சோலை' என்ற நூலில் இடம் பெற்றுள்ள இப்பாடலை, குழந்தைக் கவிஞர் வள்ளியப்பாவும் தமது அணிந்துரையில் சிறப்பாகக் குறிப்பிட்டுப் பாராட்டியிருக்கிறார்.

அழகிய சோலை அது.

கண்ணைக் கவரும் வண்ண மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன.

கவிஞர் பார்க்கிறார். அந்த மலர்களிலே கனகாம்பரமும், சம்பங்கியும் அவர் மனத்தைத் தொடுகின்றன. கனகாம்பரம் பார்க்க அழகாகத்தான் இருக்கிறது. ஆனால், மணம் உண்டா அதற்கு? சம்பங்கி மலரோ 'கம கம' வென மணக்கிறது. இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டை எண்ணுகிறார் கவிஞர். அவருக்கு ஒரு திருக்குறள் தான் அப்போது நினைவுக்கு வருகிறது.

**இணரூழ்த்தும் நாறா மலரனையர் கற்றது
உணர விரித்துரையா தார்.**



தாம் கற்ற நூல்களின் பொருளைப் பிறர் அறிந்து கொள்ளும்படி விளக்கமாகச் சொல்ல இயலாதவர், கொத்துக் கொத்தாக அழகுடன் மலர்ந்திருந்தும், மணம் சிறிதும் இல்லாமல் இருக்கும் மலருக்குச் சமமானவராகவே மதிக்கப்படுவர் என்பது இந்தக் குறளின் பொருளாகும். இந்தக் கருத்தே கவிஞருக்குக் கவிதை பிறக்கக் காரணமாக அமைந்தது. அந்தக் கவிதை இதுதான்:

கொத்துக் கொத்தாய்ப் பூத்திருந்தும்
குணமும் மணமும் இல்லையென்றால்,
புத்தம் புதிய மலரெனினும்
சித்தம் அதன்பால் செல்லாதே!

முத்து முத்தாய்ப் பிறந்தாலும்
முந்தும் அறிவும் வல்லமையும்
மெத்தவுள்ள பிள்ளைகளே
மேதினி போற்றிட வாழ்ந்திடுவார்!

படித்தவ ரெல்லாம் புகழ்பெறவே
துடிப்புட னேதான் செயல்படுவார்
நொடிப்பொழு தேனும் சோம்பலின்றி
நோயணு காமல் உழைத்திடுவார்!

— என்று கவிதையைத் தொடரும் கவிஞர், கடைசியில் இப்படி முடிக்கிறார்:

வல்லமை வேண்டும் வாக்கினிலே
வல்லமை வேண்டும் உடலினிலே;
சொல்லிலும் செயலிலும் வல்லவரே
சோதனை யாவிலும் வெல்பவரே!

பேட்டி: பி. வி. கிரி

பாசி எங்கே?

விடை:

1+6, 2+4,
3+10, 5+9,
7+8.

பழமொழிப் புதிர் — விடை

புதிர் — 17: கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்தாற் போல்.

புதிர் — 18: பசுத் தோல் போர்த்த புலி.

உறுப்பினர் வரைந்த ஓவியங்கள்

எம். எஸ். சுரேஷ் (7005)





என். செந்தில் குமார் (131)



ஆர். குருநாதன் (8407)



ஆர். வேலு (999)

எஸ். காசி விஸ்வநாதன் (7910)




விசித்திரச் செய்திகள்



கோபுரத்திலிருந்து குதித்தவர்!

உலகில் உள்ள உயரமான கோபுரங்களில் ஒன்றான, பாரீஸில் உள்ள ஈபில் டவரின் உச்சியிலிருந்து காலில் எலாஸ்டிக் கயிறு ஒன்றைக் கட்டிக் கொண்டு குதித்துச் சாதனை செய்தார் நியூஜிலாந்து நாட்டுக்காரரான 29 வயது ஆலன்ஜான் ஹேக்கட் என்பவர். கோபுரத்தின் உயரம் 984 அடி!

உலகிலேயே சிறிய பசு!



2 அடி உயரமும் சுமார் 300 பவுண்டு எடையும் உள்ள, உலகிலேயே மிகச் சிறிய பசுமாடுகளை மெக்சிகோ நாட்டுக் கால்நடை விஞ்ஞானிகள் உருவாக்கியிருக்கிறார்கள். இந்தப் பசு ஒரு நாளைக்குச் சுமார் ஐந்தரை லிட்டர் பால் தருகிறது. இந்தப் பசுக்களைப் பராமரிக்கும் செலவு குறைவு. தங்கும் இடமும் கொஞ்சமே போதும்.

முட்டையால் அபராதம்!




தபால் தலை, நாணயங்கள் சேகரிப்பது போல், பல்வேறு வகையான முட்டைகளைச் சேகரிக்கும் பழக்கம் உள்ளவர் இங்கிலாந்து நாட்டுக்காரரான விக்டர் பீப்ரோஸ் என்பவர். இவர் சேகரித்த முட்டைகள் 4000. இவை 771 இனப் பறவைகளின் முட்டைகள். இவற்றைப் பல ஆண்டுகளாகச் சேகரித்தார். ஆனால், சட்டவிரோதமாகக் காடுகளில் முட்டைகள் சேகரித்ததாக இவர் மீது வழக்குத் தொடரப்பட்டு ரூ. 24,000 அபராதம் விதிக்கப்பட்டது.

நாய் வயிற்றுக்குள் போன காது!




அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியாவில் சிறுவன் ஒருவன் மீது நாய் ஒன்று பாய்ந்து கடித்து அவனது காதைத் துண்டாக்கி விழுங்கிவிட்டது! உடனடியாக அந்த நாயைப் பிடித்துக் கொன்று அதன் வயிற்றுக்குள் இருந்த சிறுவனின் காதை டாக்டர்கள் எடுத்தார்கள். பிறகு அந்தக் காதைச் சிறுவனுக்கு மீண்டும் ஆபரேஷன் செய்து பொருத்தி விட்டார்கள்!




மிக உறுதியான நூல்

பிரெஞ்சு விஞ்ஞானிகள் இப்போது புதிதாக ஒரு செயற்கை நூலைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். மிகவும் உறுதியான நூல் இது. மிக மெலிதான இந்த நூலில் ஒரு மோட்டார் சைக்கிளைக் கட்டித் தொங்க விட்டால்கூட அறுந்து போகாதாம்! அவ்வளவு உறுதி!



மிகப் பெரிய ஆம்லெட்

பிரெஞ்சு கிராமம் ஒன்றில் கிராம மக்கள் உலகிலேயே மிகப் பெரிய ஆம்லெட் ஒன்றைத் தயாரித்தார்கள். இதற்காக மிகப் பெரிய பாத்திரம் ஒன்றையும் செய்து கொண்டார்கள். இந்த ஆம்லெட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட முட்டைகள் 42,470.




பிரியமான யானை

ஆம்ஸ்டர்டாம் மிருகக்காட்சி சாலையில் உள்ள ஒரு யானைக்குத் தினமும் பரிசுப் பொருள்கள் ஏராளமாக வந்து குவிகின்றன. வேடிக்கை பார்க்க வருகிறவர்கள், அந்த யானைக்கு, நூற்றுக்கணக்கான ஸாண்ட்விச்சு, மிட்டாய், ஆரஞ்சு, சுமார் 1700 பட்டாணிப் பாக்கெட்டுகள் தருகிறார்கள் என்று கணக்கெடுத்திருக்கிறார்கள். இது ஒரு நாளைக்கு!

—ஆழி—

பிருந்தாவனம்



அது என்ன?


1. காதிருந்தும் கேட்காது — அது என்ன?
2. கண்ணிருந்தும் பார்க்காது — அது என்ன?
3. பல்லிருந்தும் கடிக்காது — அது என்ன?
4. முள் இருந்தும் குத்தாது — அது என்ன?

விடை: 1. ஊசி; 2. தேங்காய்; 3. சீப்பு; 4. கடிகாரம்.

— ஆர். உமா (13123),
குளித்தலை—1.

கேள்விகள் பல; பதில் ஒன்றே

பொருளை அழிக்கும்
புத்தியைக் கெடுக்கும்
தருமத்தின் சத்ரு
ஞானத்தின் நஞ்சு,
பாவத்தின் நண்பன்




பிசாசின் புத்திரன்
பீடையின் பீடம்
குடும்பத்தின் துரோகி
துன்பத்தின் துணைவன்
நோயின் தாய்
கோபத்தின் தலைவன்
வறுமையின் வள்ளல்
அவமானத்தின் அன்னை
பஞ்சமா பாதகத்தின் பிதா

— அது என்ன?

விடை: மது.

— எம். தேவராஜ் (13523),
முருகன்புதூர்

அது எப்படி?



"என் கடிகாரம் ஒரு நாளைக்கு இரண்டு தடவை கிரீன்விச் டயத்தைக் காண்பிக்கும்."

"அது எப்படி?"

"என் கடிகாரம்தான் ஓடவில்லையே!"

— என். சந்திரசேகரன் (16108),
கோட்டாத்தூர்

என்ன கை?

கீழே கண்ட ஒவ்வொருவருக்கும் 'கை'யில் முடியும் ஒன்றுடன் தொடர்பு உண்டு. கண்டு பிடியுங்கள்:

1. எழுத்தாளர்
2. நாட்டு வைத்தியர்
3. அரசியல் தலைவர்



4. பேச்சாளர்
5. பூக்காரர்
6. மந்திரவாதி

விடை: 1. பத்திரிகை; 2. மூலிகை; 3. அறிக்கை; 4. பீடிகை; 5. வாடிக்கை; 6. வேடிக்கை.

— வி. சுரேஷ்குமார் (10745), வைகைநல்லூர் அக்ரஹாரம்

பின்தங்கிய வகுப்பு

"ஓட்டப் பந்தயத்தில் அவன் கடைசியாக வந்தான். அப்படியிருந்தும் அவனுக்கே முதல் பரிசு என்றார்கள். இது என்ன நியாயம்?"

"ஓ! அதுவா? அவன் ஒருவன் தான் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவனாம். மற்றவர்களெல்லாம் முன்னேறிய வகுப்பைச் சேர்ந்தவர்களாம். அதனால்தான்."




— கே. மோஹன் (2614), மயிலாடுதுறை

அப்பாவின் பதில்

"அப்பா, நான் பாஸ் பண்ணினால் சைக்கிள் வாங்கித் தருவீர்களா?"

"நிச்சயமாக."



"நான் பெயிலாயிட்டால்....?"

"சைக்கிள் ரிக்ஷா வாங்கித் தர்றேன்."

— என். மனோகர் (12395), வேலூர்—9


கொசுக்களைத் தின்ற வௌவால்கள்



வட அமெரிக்காவுக்கும் தென் அமெரிக்காவுக்கும் இடையே பசிபிக் மகாசமுத்திரத்தையும் அட்லாண்டிக் பெருங்கடலையும் இணைப்பதற்கு

ளமா கால்வாய் வெட்டப்பட்டது. அங்கே கொசுக்கள் அதிகமாக இருந்தன. கொசுக்களைக் கொல்லும் மருந்து அப்போது கண்டுபிடிக்கப்படவில்லை. இதனால், கால்வாய் வெட்டும் வேலையாட்கள் நோய்வாய்ப்பட்டனர். கால்வாய் வெட்டும் வேலை தடைப்பட்டது. கடைசியில், சிறு வௌவால்களின் கூட்டத்தை அங்கே எடுத்துச் சென்றனர். அவை கொசுக்களைத் தின்று, வேலையாட்கள் இறப்பதைத் தடுத்தன!

— கொ. மா. கோ. இளங்கோ, (3177), இராஜபாளையம்.



ஐந்து முகங்கள்



குத்துவிளக்கில் ஐந்து முகங்கள் இருக்கின்றனவே, அவை எதை எதைக் குறிக்கின்றன என்று தெரியுமா? அவை குடும்பப் பெண்களுக்கு இருக்க வேண்டிய, 'அன்பு, மனவுறுதி, நிதானம், சமயோசித புத்தி, சகிப்புத் தன்மை' ஆகியவற்றை நினைவுபடுத்தும் தத்துவத்தைக் குறிக்கின்றன என்பது இந்து மதத்தின் நம்பிக்கையாகும்.

— க. தங்கராசு (8557), வி. அய்யம்பாளையம்

என்ன பால்?


ஒரு மைதானத்தில் சிலர் வாலிபால் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அந்தப் பக்கமாக வந்த ஒரு கிராமவாசி அருகில் இருந்தவரிடம், "இவர்கள் என்ன விளையாடுகிறார்கள்?" என்று கேட்டார். "வாலிபால் விளையாடுகிறார்கள்" என்று கூறினார் அவர். அப்பொழுது பந்து கோர்டிற்கு வெளியே சென்றபடியால், அம்பயரும் மற்றவர்களும், 'அவுட் பால்' என்று கூச்சலிட்டனர்.

உடனே கிராமவாசிக்கு ஒன்றும் புரியவில்லை. அவர் தன் அருகில் இருந்தவரிடம், "இவர்கள் விளையாடுவது வாலிபாலா? அவுட் பாலா?" என்று கேட்டார். இதைக் கேட்ட அனைவரும் சிரிப்பிலே ஆழ்ந்தனர்.

— எஸ். விஜயா (5759), சேலம்—7

ரஷ்யப் பழமொழிகள்

* சில சமயங்களில் நீங்கள் கசப்பை விழுங்கி, இனிப்பை உமிழ்கிறீர்கள்.
* இதயம் ரோஜா மலராக இருந்தால்; பேச்சில் அதன் வாசனை தெரியும்.




* பணம் வரும்போது அதற்கு இரண்டே கால்கள்; போகும்போது அதற்கு நூறு கால்கள்!
* வானிலிருந்து பால் மழையாகப்

பொழிந்தாலும், ஏந்தி வைத்துக் கொள்ளப் பாத்திரங்கள் பணக்காரர் களிடமே உள்ளன.

தொகுப்பு: பி. கோவிந்தசாமி (5703), டி. புதூர்.

விடை என்ன?

1. இறக்கை இல்லாத குருவிக்கு இரும்பிலே மூக்கு; பாய்ந்து செல்லும் குருவிக்குப் பஞ்சிலே வால். அது என்ன?



* தூணிலும் இருப்பான்; துரும்பிலும் இருப்பான்; தொட்டால் ஒட்டிக் கொள்வான்; ஒட்டிக் கொள்ள உறவு மில்லை. அவன் யார்?

* உயிர் இல்லாத பறவை, உலகம் சுற்றும்பறவை. எல்லாரும்எதிர்பார்ப் பார்கள் இதன் வரவை. அது என்ன?


4. அடிக்காமலே அழ வைப்பாள் அழகு ராணி. யார் அவள்?

விடை: 1. ஊசி; 2. தூசி; 3. கடிதம்; 4. வெங்காயம்

— ஆர். யுவராஜா (17543), தாதம்பட்டி

கண்களைக் காப்போம்

சிலர் மிகவும் மங்கலான ஒளியில் படிக்கிறார்கள்; சிலர் மிகப் பிரகாசமான ஒளியில் படிக்கிறார்கள். இரண்டுமே கேடு விளைவிக்கும். படிக்கும்போதும் எழுதும்போதும் நிமிர்ந்து உட்காருவதே நல்லது. புத்தகத்திற்கும் கண்களுக்கும் இடையே சுமார் 30 சென்டி மீட்டராவது இருக்க வேண்டும். சிலர் கையால் அல்லது அழுக்குத் துணியால் கண்களைத் துடைப்பார்கள். இது தவறு. சுத்தமான கைக்




குட்டையையே உபயோகப்படுத்த வேண்டும். சிறிது நேரத்திற்கு ஒரு முறை கண்களை இமைகளால் மூடி ஓய்வு கொடுப்பது நல்லது.

— ஏ. எல். ராமு (3674), மதுரை — 2

மூன்று கார்களில்

ஒரு சாலையில் வரிசையாக மூன்று கார்கள் சென்று கொண்டிருக்கின்றன. முதல் காரிலும், இரண்டாவது காரிலும் உள்ளவர்களை எண்ணினால் வரும் தொகை 18. இரண்டாவது காரிலும் மூன்றாவது காரிலும் உள்ள



வர்களை எண்ணினால் வரும் தொகை 21. முதல் காரிலும் மூன்றாவது காரிலும் உள்ளவர்களை எண்ணினால், இரண்டாவது காரில் உள்ளவர்களுக்குச் சமம். அப்படியானால், மூன்று கார்களிலும் உள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு? ஒவ்வொரு காரிலும் இருப்பவர் முறையே எத்தனை பேர்?

விடை: மொத்தம் — 26 பேர்
முதல் காரில் — 5 பேர்
2—வது காரில் — 13 பேர்
3—வது காரில் — 8 பேர்

— ஆர். குமார் (15547), வரகூர் பட்டணம்

கேளுங்கள்;
சொல்லுகிறோம்

* பாலே நடனம் (Ballet) என்கிறார்களே, அப்படி என்றால்...?

— சி. பூர்ணிமா, ஸ்ரீரங்கம்.



ஒரு கதையை அபிநயத்தின் மூலம் உணர்த்தும் ஒருவகை மேல்நாட்டு நடனம்தான் 'பாலே நடனம்' என்பது. இந்த நடனத்தில் யாரும் பாட மாட்டார்கள்; பேசவும் மாட்டார்கள். பின்னணி இசை மட்டும் ஒலிக்கும். நடன முத்திரைகள் மூலம், நாட்டியம் ஆடுபவர்கள் கதையை விளக்குவார்கள்.

* கொட்டாவி விடுகிறோமே எதனால்?

— சி. பவளக்கொடி, பட்டுக்கோட்டை.

சில நாள் தூங்காமல் இருக்கும்போது அல்லது மிகவும் களைத்துப் போயிருக்கும் போது எப்போதும் போல நாம் நன்றாக மூச்சை இழுத்து வெளிவிடுவதில்லை. இதனால், இரத்தத்திற்குப் போதிய பிராண வாயு கிடைப்பதில்லை. அப்போதுதான் நாம் கொட்டாவி விடுகிறோம். கொட்டாவி விடும் போது வாயை நன்றாகத் திறந்து அதிக மான காற்றை நாம் சுவாசிக்கிறோம். இரத்தத்திற்கு வேண்டிய பிராண வாயு கிடைத்து விடுகிறது.

* செங்குத்தான சுவரில் கூட பல்லியால் வேகமாகச் செல்ல முடிகிறதே, எப்படி?

— கண. சேதுராமன், தூத்துக்குடி.

பல்லியின் காலின் அடிப்புறத்தில் தகடு போன்ற தோல் மடிப்புகள் இருக்கின்றன. பல்லி சுவரில் ஏறும்போது, இந்த மடிப்புகளிலுள்ள காற்று வெளியேறி அங்கு காலி இடம் ஏற்படுகிறது. அப்போது வெளிக் காற்றின் அழுத்தத்தால் விரல்கள் நன்றாகச் சுவரில் பற்றிக் கொள்ளும். பல்லி கீழே விழாது.

* ஸ்டூடியோ (?) தோகுலத்தில் சில போட்டோ படங்கள் சரியாக விழுவதில்லையே, ஏன்?

— தேனி முருகேசன், தேனி.

கறுப்பு — வெள்ளைப் படங்கள் சரியாகவே அச்சாகின்றன. வண்ணப் படங்களை கறுப்பு — வெள்ளையாக அச்சிடும் போது, சில வண்ணங்கள் மறைந்து, படம் தெளிவாக அமையாமல் போகின்றன.


* டி. வி. யில் கிரிக்கெட் பார்ப்பதனால்தான் மாணவர்களின் படிப்பு பாதிக்கப்படுகிறது என்கிறான் என் நண்பன். நான் இல்லை என்கிறேன். இதில் எது உண்மை?

— இரா. அனந்தகிருஷ்ணன்.

பகல், இரவு பாராமல் டி. வி. யில் தொடர்ந்து கிரிக்கெட் பார்த்துக் கொண்டேயிருந்தால் படிப்பு பாதிக்கத்தான் செய்யும். டி. வி. யில் கிரிக்கெட் பார்ப்பதைத் தவறு என்று கூற முடியாது. அதற்கும் ஓர் அளவு வேண்டும்.

* கிளிகளில் பச்சைக் கிளி, பஞ்சவர்ணக் கிளி என்று இருப்பதைப் பார்க்கிறோம். இப்படி இன்னும் எத்தனை வகைக் கிளிகள் உலகில் இருக்கின்றன என்று கூற முடியுமா?

— ஆர். சேதுமாதவன், மயிலாடுதுறை.



கொண்டைக் கிளி, கன்னிக் கிளி, வெள்ளைக் கிளி என்று மொத்தம் 300 வகைக் கிளிகள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

*** குயிலும் வானம்பாடியும் பாடும் என்று தெரியும். வேறு ஏதேனும் பாடும் பறவை உண்டா?**

— சே. மகாதேவன், திண்டுக்கல்.

தையற்சிட்டு, கரிச்சான், வண்ணாத்திக் குருவி போன்ற பறவைகளும் பாடக் கூடியவையே.


*** நம் உடம்பிலுள்ள எலும்புகளில் பெரியது முதுகு எலும்பா? அல்லது தோள் எலும்பா?**

— சி. பாண்டியன், பெருங்களத்தூர்.

இரண்டும் இல்லை. தொடை எலும்புதான் எல்லா எலும்புகளையும் விடப் பெரியது.

*** ஏழுமலையான் எழுந்தருளியிருக்கும் திருப்பதி எவ்வளவு உயரத்தில் இருக்கிறது?**

— செ. கண்ணப்பன், காவேரிப்பாக்கம்.



கடல் மட்டத்திற்கு மேல் சுமார் 2850 அடி உயரத்தில் இருக்கிறது.

*** விளையாட்டில் கலந்து கொண்டால் கோப்பைகள் பெறலாம்; சர்டிபிகேட்டுகள் பெறலாம் என்ற நோக்கத்துடனே சிலர் கலந்து கொள்கிறார்களே, இது சரியா?**

— பி. ராமகிருஷ்ணா, சென்னை — 8.

'விளையாட்டில் ஈடுபட்டு, பெரிய விளையாட்டு வீரனாக வேண்டும்; கோப்பைகளும் சர்டிபிகேட்டுகளும் பெற வேண்டும்' என்று ஆசைப்படலாம். ஆனால் கோப்பைகளையும் சர்டிபிகேட்டுகளையும் நினைத்துக் கொண்டே விளையாட்டில் இறங்கக் கூடாது. உடல் உரம் பெறுவதற்கு, கட்டுப்பாடு உண்டாவதற்கு, மன மகிழ்ச்சி ஏற்படுவதற்கு விளையாட்டு அவசியம் என்பதை உணர்ந்து விளையாட்டில் ஈடுபட வேண்டும்.

*** 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று சொல்லிக் கொடுக்கும் பள்ளிக்கூடத்தில், 'நீ என்ன சாதி? சாதிச் சான்றிதழ் கொண்டு வா' என்கிறார்களே, இது நியாயமா?**

— அ. இரவிந்திரன், குஞ்சன்விளை.



பிற்பட்ட சாதியினருக்குச் சலுகை வழங்குவதற்காகவே இப்படிக் கேட்கிறார்கள். சாதியை வைத்துச் சலுகை வழங்குவதைவிட பெற்றோரின் வருமானத்தை அறிந்து வருமானம் குறைவாயுள்ளவர்களுக்குச் சலுகை வழங்கலாம்.

*** நம் தமிழ் அரசர் ஒருவரின் ஆட்சிக்கு உட்பட்டு இலங்கை முழுவதும் ஒரு காலத்தில் இருந்தது என்கிறார்களே, அது யாருடைய ஆட்சியில்?**

— எஸ். லாவண்யா, பழநி.

இராஜேந்திர சோழன் ஆட்சியில்தான் இலங்கை முழுவதும் சோழ நாட்டிற்கு உட்பட்டிருந்தது. பிறகு, பராக்கிரமபாகு என்ற சிங்கள மன்னர் சோழருடன் போராடி இலங்கையை மீட்டுக் கொண்டார்.

*** குதிரை நின்று கொண்டே தூங்குவதை நான் என் கண்களால் கண்டேன். இப்படி நின்று கொண்டே தூங்கும் மிருகங்கள் வேறு உண்டா?**

— ம. பாக்கியநாதன், ஸ்ரீவில்லிபுத்தூர்.

யானையும், ஒட்டகச்சிவிங்கியும் குதிரையைப் போல நின்று கொண்டே தூங்கக் கூடியவை.

*** தற்போது இந்தியாவில் மொத்தம் எத்தனை வானொலி நிலையங்கள் உள்ளன?**

— இராம. செந்தில்குமார், திருக்கடையூர்.

94 நிலையங்கள் உள்ளன.

*** பித்தளைப் பாத்திரங்களைத் தேள் கொட்டினால் ஓட்டையாகி விடுமாமே? இது சாத்தியமா?**

— ஆர். ரஜனிகாந்த், புதுவை — 9.

சாத்தியமே.

சார் போஸ்ட்!

மெய்சிலிர்க்க வைத்த நிகழ்ச்சி!

* ''தொட்டுப் பார்க்க ஒரு மியூசியம்'' என்ற கட்டுரையைப் படிக்கும் போது உண்மையிலேயே நான் திருவனந்தபுரம் மியூசியத்தில் இருப்பது போன்று இருந்தது. நல்ல பயனுள்ள கட்டுரை.

— வி. எஸ். முருகன், தூத்துக்குடி.

* 'தொட்டுப் பார்க்க ஒரு மியூசியம்' கட்டுரையைப் பார்த்தவுடனே திருவனந்தபுரத்திற்குப் போக வேண்டும் போலுள்ளது.

— அ. இரவிந்திரன், குஞ்சன்விளை.

* அபூர்வ நண்பர்கள் மிகவும் அருமையான கதை. எங்களையும் அபூர்வ நண்பர்களாக ஆக்கத் தூண்டுகிறது.

— கே. ஏ. சுரேஷ் (7222), அரசம்பட்டி.

* கேளுங்கள்; சொல்லுகிறோம் அறிவை வளர்க்கும் பகுதி. இப்பகுதிகளை நான் சேகரித்து வருகிறேன்.

— எஸ். வளர்மதி (12324), நாமக்கல்.

* பிருந்தாவன எழுத்தாளர்களின் புகைப் படங்களை வெளியிடுவதோடு முகவரியையும் பிரசுரம் செய்தால் பேனா நட்பு கொள்ள எங்களுக்கு வசதியாக இருக்கும் அல்லவா?

— எஸ். கனகராஜ் (1174), கவற்குளம் தேரிவிளை.

* ஜூலை மாத கோகுலத்தில் 'என் குழந்தைப் பருவம்' பற்றி டாக்டர் லலிதா காமேஸ்வரன் அவர்கள் கூறியிருப்பது மிகவும் அருமையாக இருந்தது. அந்தக் காலத்திலேயே மகாத்மா காந்தியடிகளிடம் தங்கச் சங்கிலிகளைக் கழற்றிக் கொடுத்த நிகழ்ச்சி மெய்சிலிர்க்க வைத்தது. அவரின் குடும்பத்தினர் அனைவரும் காந்திஜியுடன் கலந்து கொண்டது பற்றிய அற்புதச் செய்திகள் நெஞ்சில் நிற்கின்றன. பேட்டியின் தொடரை அடுத்த இதழிலும் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

— தேனி முருகேசன், தேனி.

* ஆ. ஜோசப் ஸ்டாலின் அவர்களின் 'உயர்ந்து நிற்போம்' என்ற கவிதை பள்ளி செல்லும் பாலர்கள் இசையமைத்துப் பாடக் கூடிய அளவிற்கு இனிய சந்தத்தோடு உள்ளது. எளிய நடையில் அறிவுரைகள் தாங்கிய அப்பாடல் வளரும் குழந்தைகளுக்கு நல்ல வழிகாட்டி.

— வி. கே. கஸ்தூரிநாதன், புதுக்கோட்டை.

* 'கவிதை பிறந்த கதை'யில் கவிஞர் ரா. பொன்ராசனின் ''காக்கைப் பாடல்'' பிறக்கக் காரணமாய் இருந்த நிகழ்ச்சி அருமையானது!

— கவிஞர் 'தாரகை', பெங்களூர் — 53.

* அதிசயப் பயணங்கள் செய்த சிந்துபாது 16 பக்க வண்ணப்படக்கதை வெகு அருமை. இதைப் போல் வீரக் கதைகளைத் தொடர்ந்து வெளியிடவும்.

— அ. கனகசபை, கச்சனம்.

* சிறுவர்களின் ''பிருந்தாவனக் கவியரங்கம்'' பெரியவர்களுக்கு ரசிக்கவும், சிந்திக்கத் தக்கதுமாயிருக்கிறது.

— கே. பிரபாலிங்கேஷ், மேலகிருஷ்ணன் புதூர்.

* ஏவியாட் குறித்து ஜானகிமணாளன் எழுதிய விரிவான அதே சமயத்தில் விளக்கமான கட்டுரைதான் இவ்விதழுக்கே முத்தாய்ப்பாய் விளங்கியது!

— எம். ரவீந்திரன், கச்சநகரம்.

* 'வேலம்பட்டியில் வெள்ளைக்காரச் சிறுவர்கள்' கதை நட்பின் பிரிவை நன்கு உணர்த்திய கதை. அபூர்வ நண்பர்கள் கதையும் ஒரே இதழில் வந்தது பாராட்டக் கூடியது ஆகும்.

— வெ. தமிழ்செல்வன், நன்செய்புகளூர்.

* டாக்டர் பூவண்ணன் சார்! 'எங்கள் கம்பிக்கு ஆபத்து வந்துவிடுமோ?' என்று பயந்து கொண்டிருந்தேன். அவனைக் காப்பாற்றியதற்கு மிக்க நன்றி!

இரா. நிர்மலா, திருச்சி.

* '(வி)சித்திரச் செய்திகள்' — எங்களை ஒவ்வோர் இதழிலும் ஏராளமான ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றன.

கோண்ட நேரத்தில் — அட்டையில் தர்பூசணியைப் பார்த்ததும் நாக்கில் எச்சில் ஊறி விட்டது.

சிந்துபாதின் படக்கதையைப் பார்த்ததும் எல்லையில்லா ஆனந்தத்தில் துள்ளிக் குதித்தேன்.

— எஸ். அன்புச்செல்வி, மதுரை — 20.



புதையல் வீடு

டாக்டர் பூவண்ணன்

11. இரகசிய வழி

சோமு தாத்தா, ''இன்னொரு ரகசிய வழியைப் பற்றிச் சொல்கிறேன். அதற்குமுன் உட்கோயிலை மூடிய பிறகு நடந்த நிகழ்ச்சிகளைச் சொல்கிறேன். கேளுங்கள்'' என்று கூறிச் சொல்லத் தொடங்கினார். சுமதியும் செங்கோடனும் ஆவலோடு கேட்டனர்.

''சிற்பி நல்ல பெருமாள் உட்கோயிலை மூடிவிட்டார். பிறகு அவரே உட்கோயிலுக்கு இன்னொரு ரகசிய வழி இருக்கிறது என்பதைத் தெரிவித்தார். ரகசிய வழி எங்கே இருக்கிறது, அதை எப்படித் திறக்க வேண்டும் என்பதையும் கூறினார். இப்போது நடக்கும்முஸ்லீம்களின் ஆட்சிமுடிந்து நம்மவர்கள் ஆளுகின்றபோதுதான் உட்கோயிலின் ரகசிய வழியைத் திறந்து விட வேண்டும். அதுவரை எவரும் உட்கோயிலுக்குள் புக முடியாதபடி காக்க வேண்டும்'' என்று கூறினார்.

பெருமாள் அறிவித்த உட்கோயில் ரகசியம் தர்மகர்த்தா, ஊர்த் தலைவர், கோயில் காவலர், அர்ச்சகர் ஆகிய நால்வர் அறிந்தனர். அதனால் அவர்கள் இந்த ரகசியத்தை வேறு யாருக்கும் தெரிவிப்பதில்லை என்றும், தவறிப் போய் இந்த ரகசியம் எவருக்கேனும் தெரிந்தால் அவரை உயிரோடு வாழ விடுவதில்லை என்றும் சபதம் செய்தனர். ஒவ்வொருவரும் தம் மூத்த மகனுக்கு மட்டும் இந்த ரகசியத்தைச் சொல்லலாம் என்று அனுமதிக்கப்பட்டனர். பின்பு உட்கோயிலைக் காக்கும் பொறுப்பு கோயில் காவலரான நம் குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது. கோயிலுக்குஎதிரே உள்ள பதினாறு கால் மண்டபம் நம் குடும்பத்துக்கு உரியதாக அந்த இரவே சாசனம் எழுதிக் கொடுத்தார்கள். பிறகு ஊருக்குள் கொஞ்சம் நிலமும் எழுதிக் கொடுத்தனர். இரவும் பகலும் எந்நேரமும் இந்த உட்கோயிலைக் காப்பது நம் கடமையாயிற்று.

மகமத்கான் ஊர்த் தலைவரைக் கொன்ற பிறகு உட்கோயில் ரகசியம் அறிந்தவர்கள் சிற்பிகள் இருவர், கோயில் காவலர், தர்மகர்த்தா, அர்ச்சகர் ஆகியோரே ஆவர். மகமத்கான் வந்து சென்றதிலிருந்து, உட்கோயில் மறைந்ததிலிருந்து கோயிலின் புகழ் குறைந்தது. விஜய மங்கலம் தன் சிறப்பை இழந்தது. மக்கள் பிறந்த ஊரைவிட்டு வெளியூர்களுக்குச் செல்லத் தொடங்கினர். நம் முன்னோ

ரான கோயில் காவலர் மட்டும் பதினாறு கால் மண்டபத்தைத் தம் வீடாக மாற்றிக் கொண்டு இக்கோயிலைக் காத்து வந்தார்.

கடந்த இருநூறு ஆண்டுகளில் ஐந்து தலைமுறை தோன்றிவிட்டது. நான் ஐந்தாம் தலைமுறையினன். எனக்கு நினைவு தெரிந்தபோது, அர்ச்சகர் இறந்துவிட்டார். அவருக்குப் பிள்ளைகள் இல்லை. வேறு புதிய அர்ச்சகர் யாரும் கோயில் பணியை ஏற்கவில்லை. ஏனெனில் கோயிலுக்கு வருமானம் இல்லை. அது முதல் என் தந்தையே கோயில் பூசையையும் மேற்கொண்டார். அவருக்குத் திடீரென்று ஒரு நாள் மார்பு வலி ஏற்பட்டது. அப்போதுதான் என்னை அழைத்து உட்கோயிலின் ரகசியங்களைக் கூறினார். அவர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே வலி மிகுதியானது. 'உட்கோயிலுக்கு ரகசிய வழி இருக்கிறது. அதை உனக்குச் சொல்கிறேன்.....' என்று கூறிய தந்தை, அதைச் சொல்வதற்குமுன் இறந்துவிட்டார்.''

சோமு தாத்தா சொன்னதைக் கேட்டதும் சுமதியும் செங்கோடனும் சோகத்தில் ஆழ்ந்தார்கள். தாத்தா பேசுவதை நிறுத்தவில்லை.

''உட்கோயிலின் ரகசிய வழி இந்தக் கோயிலில் எங்கேயோ இருக்கிறது. அதைக் கண்டு பிடிக்க நான் முயன்று தோற்றுப் போனேன். இந்தக் கோயிலைக் காத்து, இந்த நாட்டை நம்மவர்கள் ஆட்சி செய்யும் போது உட்கோயிலை வெளிப்படுத்துவது நம் குடும்பத்தின் கடமை. நாட்டை இன்று நம் மக்களே ஆள்கின்றனர். ஆனாலும் உட்கோயிலை என்னால் வெளிப்படுத்த இயலவில்லை. இந்த ரகசியம் அறிந்த சிற்பி குடும்பத்தாரும், தர்மகர்த்தா குடும்பத்தாரும் என் தாத்தா காலத்திலேயே இந்த ஊரை விட்டுப் போய்விட்டார்கள். அவர்களைக் கண்டுபிடித்தால் ஒருவேளை ரகசியம் வெளிப்படலாம். அதனால் அவர்களைத் தேடி அலைந்தேன். அதிலும் தோல்வியுற்றேன். நான் முடிக்காத கடமையை என் மகன் முடிக்க வேண்டும் என்று விரும்பினேன்.

''என் மகன் மருதப்பனே பொறுப்பற்றவனாகிப் பல தீய பழக்கங்களை மேற்கொண்டான். அதனால் நான் வேதனை அடைந்தேன். அவனிடம் உட் கோயில் ரகசியத்தைச் சொல்வதில்லை என்று முடிவு செய்தேன். சேற்றிலே செந்தாமரை பிறப்பது போல, செங்கோடா, நீ மருதப்பனுக்கு மகனாகப் பிறந்தாய். உன்னையே என் வாரிசாகக் கொண்டு உன்னிடம் ரகசியத்தைச் சொல்லும் முடிவோடே உன்னை வளர்த்தேன். கோயிலைக் காப்பதாக முதன்முதலில் சபதம் செய்த நம் முன்னோரின் பெயரும் செங்கோடன்தான். அதே பெயருடைய நீ எனக்குப் பின்பும் இந்தப் பதினாறு கால் மண்டபத்திலேயே வாழ்ந்து உட்கோயிலைக் காக்க வேண்டும். அதோடு உட்கோயில் ரகசிய வழி எங்கே இருக்கிறது என்பதை நீ கண்டுபிடிக்க வேண்டும். இப்போது சுமதியையும் உன் பணியில் சேர்த்துக் கொள்ளப் பெருமாள் அனுமதியளித்துவிட்டார். எனவே, இரண்டு பேரும் முயன்று பாருங்கள். பெருமாள் உங்களுக்குத் துணை செய்வார்.''

சோமு தாத்தா சொல்லி முடித்தார்.

''தாத்தா, சினிமாக்காரர்கள் வேடத்தில் வந்தவர்களுக்கு உட்கோயிலைப் பற்றி ஏதோ தெரிந்திருக்க வேண்டும். அவர்களுக்கு இந்த ரகசியம் எப்படித் தெரிந்தது?'' என்று கேட்டான் செங்கோடன்.

''அந்த சினிமாக்காரன் தர்மகர்த்தா அல்லது சிற்பியின் குடும்பத்தைச் சேர்ந்தவனாக இருக்கலாம்'' என்றாள் சுமதி.

''எனக்கும் அந்தச் சந்தேகம் உண்டு, தாயே. பொதுவாக இக்கோயிலின் பெருமாளிடம் பக்தி கொண்டவர்கள், தீய வழிகளில் செல்ல மாட்டார்கள். எனக்கு மருதப்பன், மகனாகப் பிறந்தது போல, சிற்பிக்கோ, தர்மகர்த்தாவுக்கோ ஒரு தீயவன் மகனாகப் பிறந்திருக்கலாம். எனக்கும் அந்தச் சினிமாக்காரனைப் பார்க்க வேண்டும் என்று ஆசை. ஆனால் அவனுக்கு உட்கோயிலின் ரகசிய வழி தெரியவில்லை. தெரிந்திருந்தால், பிராகாரத்தை வெடி



வைத்துத் தகர்க்க முயன்றிருக்க மாட்டான். போலீஸ் இன்ஸ்பெக்டர் அவனை எப்படியும் கண்டு பிடிப்ப தாகக் கூறியிருக்கிறார்'' என்ற சோமு தாத்தா, ''செங்கோடா! சுமதி! உங் களுக்கு நான் சொன்ன செய்திகளை யாருக்கும் சொல்வதில்லை என்று நீங்கள் இருவரும் பெருமாள் முன்பு சத்தியம் செய்ய வேண்டும். செங் கோடா, நீ மட்டும் உன் மூத்த மக னுக்கு இதைச் சொல்லி அவன் இந்தக் கோயிலைக் காக்கும் பொறுப்பை ஏற்கச் செய்ய வேண் டும்'' என்று கூறினார்.

''அப்படியானால் செங்கோடன் காலத்திலும் உட்கோயிலின் ரகசிய வழியைக் கண்டு பிடிக்க முடியாது என்று நினைக்கிறீர்களா?'' என்று கேட்டாள் சுமதி.

''உண்மையைச் சொல்கிறேன். எனக்கு நம்பிக்கை இல்லை. இந்தக் கோயிலை அணு அணுவாக நான் ஆராய்ந்து பார்த்துவிட்டேன். ரகசிய வழியை என்றால் கண்டுபிடிக்க முடியவில்லை. அதற்காக நீங்கள் இரு வரும் முயற்சி செய்யாமல் இருக்க வேண்டாம். வாருங்கள், பெருமாள் சன்னதிக்குப் போகலாம். அங்கே நான் கேட்டபடி நீங்கள் சத்தியம் செய்து தர வேண்டும்.''

சோமு தாத்தா எழுந்தார். அவரு டன் சுமதியும் செங்கோடனும் எழுந் தனர். மூவரும் பெருமாள் சன்னதிக் குச் சென்றனர். அங்கே செங்கோட னும் சுமதியும் தாத்தா கேட்டபடி சத்தியம் செய்தனர்.


அடுத்த நாளிலிருந்து சுமதியும் செங்கோடனும் பள்ளிக்கூடம் செல் லும் நேரம் தவிர மற்ற நேரத்தின் பெரும்பகுதியைப் பெருமாள் கோயி லில் செலவிட்டனர். பெருமாள் கோயி லின் வெளி வாயிலிலிருந்து அவர் கள் தம் ஆராய்ச்சியைத் தொடங் கினர். ஒவ்வோர் இடத்தையும், அல சினர். சிற்பங்களை இழுத்துப் பார்த் தனர்; கையால் பற்ற முடிந்த எதையும் அசைத்துப் பார்த்தனர். அவ்வாறு இழுக்கும்போது, அசைக்கும் போது எங்கேனும் ஒரு வழி திறந்து கொள் ளாதா என்னும் ஆவலோடு செயல் பட்டனர். அவர்களுக்குக் கிடைத்தது, ஏமாற்றம் மட்டுமே!

சுமதியும் செங்கோடனும் சோர்ந்து விட்டனர். உட்கோயிலின் ரகசிய வழியைத் தம்மால் கண்டுபிடிக்க முடி யாது என்னும் முடிவுக்கே வந்துவிட் டனர். எனினும் விடுமுறை நாட் களில் தாங்கள் முன்னரே ஆராய்ந்த இடங்களை; மீண்டும் மீண்டும் ஆராய்ந்து கொண்டேயிருந்தனர்!

நாட்கள் பறந்தன. ஆகஸ்டு மாதம் வந்தது. அந்த மாதத்தின் இறுதி வெள் ளிக்கிழமை கோகுலாஷ்டமிக்காக விடுமுறை என்று முன்னரே பள்ளிக் கூடத்தில் அறிவித்தார்கள். அன்று மாலையே சுமதி, செங்கோடனிடம் ''எங்கள் வீட்டில் கண்ணன் பிறந்த நாளைச் சீடை முறுக்கோடு சிறப் பாகக் கொண்டாடுவார்கள். செங் கோடா! கண்ணன் பிறந்த நாளைக் கொண்டாட உங்கள் வீடுதான் சரி யான இடம். அங்கே ஒவ்வொரு தூணி லும், தூணின் ஒவ்வொரு பக்கத்தி லும் கண்ணன் காட்சி தருகிறான். கண்ணனின் கதை முழுவதுமே ஏதோ ஒரு சித்திரக்கதை போல அந்த மண்ட பத்துத் தூண்களில் அமைஞ்சிருக்கு. அதனாலே கண்ணன் பிறந்த நாளை அங்கே கொண்டாடுவதுதான் முக்கி யம். சித்தியிடம் சொல்லிச் சீடை, முறுக்கு, பால், தயிர், வெண்ணெய்

''அதுவா, இவரு படிப்படியாக முன் னேறியவர். அதனால் சிலையை இப்படிப் பண்ணிட்டோம்!''

— எஸ். பரமகுரு



வினோத்தின் மனம் கவர்ந்த பறவை!



படத்தில் வினோத் வைத்திருக்கும் குருவி 'லவ் பேர்ட்ஸ்' — காதல் பறவை'யின் சுமார் பதினைந்து நாள் குஞ்சு. இந்தக் குருவியை 'மீனாட்சி' என்று சொல்லிக் கூப்பிடுவான் வினோத். வேறு யார் கூப்பிட்டாலும் செவி சாய்க்காமல் அது அவனை நோக்கியே நடந்து சென்று கையில் உட்கார்ந்து கொள்ளும். இதனைக் கூட்டில்தான் வைத்திருக்க வேண்டும். சற்றுப் பறக்கத் தெரிந்ததும் எப்படித்தான் வளர்த்தாலும் வெளியே பறந்து சென்று விடும். இது தெரியாததால் இந்தக் குஞ்சு படம் எடுத்த சில நாட்களில் பறந்து சென்றது. மீண்டும் வரவே இல்லை. இதுபோன்ற பறவைகள் முன்னர் மூர் மார்க்கெட் பின்புறம் விற்கப்பட்டு வந்தன. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் மூர் மார்க்கெட் எரிந்துவிட்டதால் இவைகளை விற்பதற்குச் சென்னையில் குறிப்பிட்ட இடம் எதுவும் இல்லை. G.K.M. காலனியில் லவ் பேர்ஸ்ட் பறவைகளை நீலம், பச்சை நிறங்களில் வளர்த்து வருகிறார்கள். இதன் விலை ஜோடி குஞ்சாக இருந்தால் ரூ 25 முதல் வயதுக்குத் தக்கபடி ரூ 100 வரை விற்கப்படுகிறது.

'உயிர்களிடத்தில் அன்பு வேணும்' என்ற பாரதியாரின் பொன்வாக்கை வினோத் தன் இளம் வயதில் கடைப்பிடித்து வந்தான். அந்தப் பறவை பறந்து சென்றுவிட்ட பிறகு வினோத் ஊண் உறக்கமின்றிக் கழித்தான். அவனைப் பெற்றோர் சமாதானப் படுத்துவதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது! இப்பொழுதும் அவனுக்குத் தன்னைத் தேடி அந்தப் பறவை வந்துவிடும் என்ற நம்பிக்கை! அவனது சோகத்தைப் போக்க அந்தப் பறவை என்று திரும்புமோ?

அட்டை வண்ணப்படம்:
சரஸ்வதி சத்தியமூர்த்தி

எல்லாம் நான் கொண்டு வர்றேன். உங்க வீடு முழுவதும் நானே மாக்கோலம் போடறேன். நாம் சிறப்பாகக் கொண்டாடலாம்'' என்று உற்சாகத்துடன் கூறினாள். செங்கோடன் சம்மதித்தான்.

அன்று புதன்கிழமை. கோகுலாஷ்டமிக்கு இன்னும் இரண்டு நாட்கள் இருந்தன. சுமதி அன்று மாலை நான்கு மணிக்கு, பிரஷ், வாஷிங் சோடா, சோப்புத் தூள் முதலியவற்றை எடுத்துக் கொண்டு செங்கோடனின் வீட்டுக்குப் போய்விட்டாள். அப்போது செங்கோடன் மட்டுமே வீட்டிலிருந்தான். செண்பகம் வெளியில் சென்றிருந்தாள்.

சுமதியையும் அவள் கொண்டுவந்த பொருள்களையும் பார்த்த செங்கோடன், ''சுமதி! முன்னே இந்தத் தூணெல்லாம் புகை படிஞ்சி கறுத்தி இருந்தது. நீ சுத்தம் பண்ணி, ஒரு மண்ணெண்ணெய் ஸ்டவ்வும் கொடுத்துட்டே. அதனால் இப்போ புகைபடியறது இல்லையே. அப்புறம் எதுக்கு இந்த சோப்பு, பிரஷ் எல்லாம்?'' என்று கேட்டான்.

சுமதி தான் கொண்டு வந்த பொருள்களைக் கீழே வைத்துவிட்டுப் பேசினாள்:

''செங்கோடா! பதினாறு தூண்களிலும் கண்ணன் காட்சி உண்டு. ஆனாலும், நீங்க தினமும் பூசை செய்யறது குழலூதும் கண்ணன்தானே! அதை மட்டும் இன்னைக்கு நன்றாகக் கழுவிச் சுத்தம் செய்வோம். அங்கேதான் நம் கோகுலாஷ்டமி பூஜையைச் செய்யப் போகிறோம்.''

சுமதி சொல்லிவிட்டு உள்ளே போய்க் குழலூதும் கண்ணன் காட்சி இருக்கும் தூணின் முன் நின்றாள். ''செங்கோடா! போய் ஒரு குடம் தண்

ணீர் கொண்டு வா'' என்று கட்டளை யிட்டாள். செங்கோடன் தண்ணீர் கொண்டு வந்தான். சுமதி தண்ணீரை அந்தக் கண்ணன் மீது அபிஷேகம் செய்வது போலக் கொட்டினாள். பின்பு அங்கே படர்ந்திருந்த மஞ்சளைத் தேய்த்துக்கழுவினாள். கழுவியபடியே, ''செங்கோடா, பெண் தெய்வத்துக் குத்தானே மஞ்சள் பூசுவாங்க. நீங்க ஏன் கண்ணனுக்கு மஞ்சள் பூசு நீங்க?'' என்று கேட்டாள்.

''கண்ணனுக்குச் சந்தனம் பூசி, கற்பூரம்காட்டிப்பூஜைசெய்யறது வழக்கமாம். கற்பூரம் கிடைக்காட்டா ஊது வத்தியால் பூஜை செய்யற மாதிரி சந்தனம்கிடைக்காட்டா மஞ்சளைப்பூசிடுவார், எங்க தாத்தா,'' என்றபடி செங்கோடன், பிரஷ்ஷைக் கொண்டு அந்தத் தூணின் நான்கு பக்கங்களையும் தேய்த்து விட்டான்.

சுமதி மீண்டும் தண்ணீரை விட்டுக் கழுவினாள். பிறகு ஒரு துணியால் கண்ணன் சிற்பத்தைத் துடைத்து விட்டுப் பார்த்தாள். மஞ்சள் முற்றிலும் போகா விட்டாலும் கண்ணன் காட்சி தெளிவாகத் தெரிந்தது. சுமதி அந்தக் கண்ணனை ஆவலோடு பார்த்தாள். கண்ணனின் குவிந்த இதழும், குழலின் துளைகளின் மேல் படர்ந்த விரலும் அவளைக் கவர்ந்தன. சுமதி அந்தக் காட்சியை அணு அணுவாக ரசித்துக் கொண்டேயிருந்தாள். திடீரென்று அவள் பார்வையில் வியப்புப் படிந்தது. சட்டென்று குனிந்து கீழே இருந்த துணியை எடுத்துக் கண்ணன் காட்சியின் நான்கு ஓரங்களையும் நன்றாக அழுத்தித் துடைத்து விட்டுப்பார்த்தாள். இப்போது அவள் பார்வை, குவிந்த இதழிலோ குழலிலோ படியவில்லை. காட்சியின் ஓரத்தில், தூணின் அடுத்த பக்கத்தில் படிந்தது. அவள், ''செங்கோடா, இதைப் பாரேன்!'' என்று ஆச்சரியக் குரலில் அழைத்தாள்.

செங்கோடன் அவளருகேதான் நின்று கொண்டிருந்தான், அவன், ''என்ன சுமதி?'' என்று கேட்டு இன்னும் அருகே சென்றான். சுமதி தன் விரலால் சுட்டிக் காட்டிய இடத்தைப் பார்த்தான். அவனும் ''அடேடே! இதென்ன?'' என்று வியப்பை வெளியிட்டான்.

மண்டபத்துத் தூண்கள் உருண்டு திரண்டவை. ஆனால் தூண்களின் நடுப் பாகம் மட்டும் நான்கு பட்டை பெற்றவை. அந்தப் பட்டைகளில்தான் கண்ணன் சிற்பங்கள் செதுக்கப்பட்டிருந்தன. குழலூதும் கண்ணன் இருந்த பட்டை வாயிலை நோக்கியிருந்தது. அதற்கு இடப்பக்கம் இருந்த பட்டையில் மயிரிழை அளவில் ஒரு மெல்லிய மஞ்சள் கோடு பளிச்செனத் தெரிந்தது. பட்டைகளில் அப்பிய மஞ்சளைத் தேய்த்துக் கழுவிய பிறகு இப்படி மஞ்சள் நேர்க்கோடு தெரிந்தால் என்ன பொருள்?

''செங்கோடா! இந்தத் தூணின் பக்கம் வெடித்து விட்டதா? அல்லது இங்கே இடைவெளி ஏதாவது இருக்கிறதா?'' என்று கேட்டாள் சுமதி.

செங்கோடன் மண்டபத்தின் ஒரு பகுதியிலிருந்த அவனது தாத்தாவின் பெட்டியைத் திறந்தான். அதில் ஒரு பழைமையான எழுத்தாணி இருப்பது அவனுக்குத் தெரியும். அதை எடுத்து வந்தான். எழுத்தாணியின் கூரிய பகுதியை, மஞ்சள் கோட்டின் மீது வைத்துக் கீறினான். இப்போது அங்கே நூலிழை அளவு இடைவெளி தெரிந்தது. செங்கோடன் மண்டபத்தின் பின்னே சென்று அரிவாள் ஒன்றைக் கொண்டு வந்தான். அதை இடைவெளியில் வைத்து அழுத்தி அசைத்தான். என்ன ஆச்சரியம்! இடைவெளி அதிகமானது. செங்கோடன் அரிவாளை இன்னும் உள்ளே தள்ளி நெக்கிய போது, குழலூதும் கண்ணன் காட்சியிருந்த அந்தப் பக்கம் ஒரு கதவு போல மெல்லத் திறந்தது!

(தொடரும்)

பரதன் அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக, அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: வி. ராஜேந்திரன்.

நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை—600 032. போன்: 4 3154 3, 4 34 157.

ஆசிரியர் குழு அலுவலகம்: 28, ஐந்தாவது தெரு, ஏரிவட்டம், நுங்கம்பாக்கம், சென்னை—600 034. போன்: 4 73369.

ஆண்டுச் சந்தா: ரூ 24/—; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ 100/—; விமானத் தபால்: ரூ 250/—.



ராஜா சர் முத்தைய செட்டியார்

தோற்றம் : 5-8-1905 மறைவு : 12-5-1984

REGISTERED No. TN MS (3) 281
Registered as a Newspaper in Sri Lanka